
மீரா கவிதைகள்

# மீரா கவிதைகள்



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மீரா கவிதைகள்

அகரம்
மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007

மீரா கவிதைகள்/மீரா/ © ஆர்.சுசீலா/ முதற்பதிப்பு: ஜூன் 2002/வெளியீடு: அகரம், மனை எண் 1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-7/ அச்சாக்கம்: அகம், சென்னை/ **விலை. ரூ.60/-**

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | : Meera Kavithaigal |
| Subject | : Poems |
| Author | : Meera |
| Language | : Tamil |
| Edition | : First Edn. June 2002 |
| Size of the Book | : Crown 1 x 8 |
| Printing Point | : 10 Pt. |
| Paper | : 12 Kg. SPB Book Print |
| Number of Pages | : 200 |
| Number of Copies | : 1100 + 100 |
| Printers | : Agam, Chennai. |
| Publishers | : **AKARAM**<br>Plot No: 1, Nirmala Nagar<br>Thanjavur - 613 007. |
| Price | : **Rs.60/ -** |

# சில்லென்று பூத்த சிறு குறிஞ்சி மலர்கள்

(அணிந்துரை)

அறிஞர் தமிழண்ணல்

பனிரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்; குறிஞ்சிப் பூக்களைப் பார்ப்பதற்கு!

அதுவும் கார்காலத்தில்தான் பூக்கும். மலைச்சாரல் முழுவதும், நீலநிறச் சின்னஞ்சிறிய குறிஞ்சிப் பூக்கள் சில்லென்று பூத்திருக்கும்!

அத்துணை அரிய மலர்கள் அவை!

மலைத் தேனடை மிகப் பெரிய வட்டமாய் இருக்கும், செந்நிறப் பகலவனைப்போல! அதிலுள்ள தேனெல்லாம் இச்சின்னஞ்சிறிய குறிஞ்சிமலர்கள் தந்ததாம். சங்கப் புலவன் பாடினான்; 'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு, பெருந்தேன் இழைக்கும் நாடன்' என்று.

வலிய அடித்தண்டினையுடைய, சின்னஞ்சிறு குறிஞ்சிப்பூவைக் கொண்டு, பென்னம் பெரிய தேனடையைக் கட்டும் மலைநாடன், அக்காதலன். இதில் ஒரு வியப்பு அடங்கியிருக்கிறது. 'இச் சின்னஞ்சிறிய உருவமுள்ள மனிதர்கள் விளைவிக்கும் அன்பு, காதல், பாசம் எவ்வளவு பெரிதாய் இருக்கிறது. அடடே, அது 'நிலத்தினும் பெரிது, வானிலும் உயர்ந்தது, நீரினும் அளவற்ற ஆழமானது'!

☐

*கவிஞர் மீரா, ஒரு குறிஞ்சி மலர்; அவர் தரும் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒரு குறிஞ்சி மலர்!*

*உலகில் பலவகை மலர்கள் உண்டு. அன்றன்று பூத்து, அன்றன்று உலர்பவை; வண்ணநிற ஆடம்பரங் காட்டுபவை, உள்மணம் அற்றவை -- இன்னும் பலப்பல -- எத்தனை எத்தனையோ வகை மலர்கள்! இயற்கைதானே!*

*மீரா பலரை உருவாக்கியவர்; அம்முயற்சியில் தன்னை 'உரு'வாக்கிக்கொள்ள மறந்தவர். மீராவின் பாடல்களில், கவித்துவ ஒளிக்கீற்றுகள் பலப்பல உள. ஆனால் அவரோ மற்றவர்களின் ஒளிச்சேர்க்கையில், தனது நிறத்தை இணைத்துக் கொண்டவர். தன்னை இழக்கத் துணிந்தவர்.*

***மின்னுவதைச் சிலபோது மறந்துவிடும் விண்மீன், அவர்!***
***ஒளிக்கீற்றைத் தன்னுள்ளேயே அடக்கிக் கொண்ட***
***கார்காலக் கதிரவன் அவர்!***
***அடிக்கடி பூக்காது அரிதாய்ப் பூக்கும் குறிஞ்சிப் பூவும் அவர்!***

□

*இதோ உங்கள் முன் தேடித் தொகுத்துக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் இப் பாமலர்களில் பெரும்பான்மை யானவை, இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகளில் பூத்தவை. இன்றும் 'என்றும் புலராது, யாணர்நாட் செல்லுகினும், நின்று புலர்ந்து, தேன்பிலிற்றும் நீர்மையவை' பலவுள.*

*மீராவின் மரபுவழிப் பாடல்கள் இவை. இவற்றில் சந்தம் தழுவியவை சில. எண்சீர் விருத்தத்தில் அன்றே இவர் பல வடிவமைப்புச் சோதனைகள் செய்து பார்த்துள்ளார். சங்க இலக்கிய மணம் உண்டு, பாரதியின் தாக்கமுண்டு, பாரதிதாசனின் பரம்பரை முத்திரையும் உண்டு; அம் மரபு வளர்ச்சியில் அவற்றை மிஞ்ச முயலும் தனித்திறன்களும் பலவுண்டு, மீராவின் பாடல்களில்!*

*காதலைப் பாடும்போது இவர் பிறரினும் தனிமைப் படுகிறார். அதில் இவர் இறையைத் தழுவும் உயிர்போலும்*

எழுச்சிநிலை காட்டுகிறார். பக்தித் தொடர்பைவிடக் காதலுறவு அழுத்தமாயிருப்பதை இவர் பாடல்கள் காட்டும்.

தமிழ், பொதுவுடைமை, சமுதாய சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம் இவற்றில் இவர் பாரதியையும் பாரதிதாசனையும் ஒத்தவராகிறார்.

இன்றும் சென்னையிலுள்ள நூறு 'சபா'க்களில், தெலுங்குதான் இசைக்கப்படுகிறது; தமிழ் துக்கடாவாகிறது! துக்கடாவாகும் துக்கம் தொடரத் தொடர, 'சொன்னவை தெலுங்கர்க்குச் சுவைதரத் தக்கவை' என்ற பாவேந்தரின் சீற்றமும், தெலுங்கச்சியின் காதலைப் புறந்தள்ளும் மனவேகமும் இன்றும் தேவைப்படுகின்றன.

'இதுதான் இந்தியா' 'போ போ' எனும் பாடல்களில் வரும் மீராவின் சீற்றம் அதைவிடக் குறைந்ததன்று. 'மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கீடில்லை' என முழங்கிய பாவேந்தரின் மனச்சூழல் அது. இந்திய நாட்டின் இழிநிலை கண்டு பொங்கி எழும் மனச்சூழல் இது. சீற்றம் பொங்கிவிட்டால் குறிஞ்சி மலர்கள் நெருஞ்சி மலர்களாகிவிடுகின்றன. இவை 'ஒன்றிய உணர்ச்சியாலே, ஒரு வழிப்பட்டுப் பிறந்தவை' என்பதை மறுப்பதற்கில்லை.

ஒவ்வொரு கவிஞனும் பிறரினும் விஞ்சி நிற்கும் இடமெனச் சிலவுண்டு. அங்கேதான் அவனது தனித்தன்மைகள், ஒப்பற்ற தனித்திறன்கள் வெளிப்படும். அதைக் கண்டு கொண்டால், மரபில் பூத்த புதுமலர் இதுவென மகிழலாம்!

'வேட்கை' மீராவின் ஒப்பற்ற பாடல்களிலே ஒன்று

**கடலின் கரையில் மணலில் மாளிகை**
**கட்டிட விரும்புகின்றேன்**
**கதிரின் பிழம்பைக் கையால் தழுவிடக்**
**காதல் கொள்ளுகின்றேன்**

உடலின் கூடுவிட்டு உயிரால் ஓடி
உலவிட விழைகின்றேன்
ஊருணி நீர்மேல் ஓவியம் தீட்டும்
உரத்தை வேண்டுகின்றேன்.

வெண் முகிலுக்குள் படுத்துக் கிடக்க,
வேட்கை கொள்ளுகிறேன்.

இப் பாடல் போன்ற கற்பனை இன்றைய திரைப்படப் பாடல்களில் எதிரொலிக்கின்றது. 1962 லேயே இவ்வாறு பாடிய மீராவுக்கு, திரையிசை அனைய ஊடகங்கள் வாய்க்காதது தமிழர்தம் தவக்குறையே. எத்துணை மேற்சென்றாலும் தன் 'நிலையின் இழியாத' பெருமிதமுடையவர் இவர். அதனால்தானோ என்னவோ திரைகள் இவரை நாடிவரவில்லை. அவை தொலைந்து போகட்டும்! விட்டில் பூச்சிகள் தானே அவை.

'நெஞ்சே நில்' 'பொருளுக்கும் பொன்னுக்கும் போகத்துக்கும் பொய்ப்பாடல் புனையாதே' என அறிவுரை கூறுவதில் சங்கப் பா அடித்தளமிடுகிறது. 'வேலை இருக்கிறது நிரம்ப...' என்பதில் பாரதியின் வளர்ச்சி புலனாகிறது. 'கயமையைக் கைதுசெய்'யில், பாவேந்தர் பாரதிதாசன் தந்த எழுச்சியின் மேல் எழுச்சி ஒன்று எழுவது தெரிகிறது.

'முருகனும் முத்தையாபிள்ளையும்' சிறியதோர் அங்கத நகைச்சுவைப் பாட்டு. பாவேந்தரின் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலும்' கவிமணியின் 'மருமக்கள் வழி மான்மியமும்' சாதித்ததை இதுவும் சாதித்துவிடுகிறது. முத்தையா பிள்ளை முருகா முருகா என்று இருமுறை கூவியபோது வேலையாள் ஓடிவந்து முன்னே நின்றது, அவருக்குப் பிடிக்கவில்லை. 'ஆண்டவனை அல்லவா அழைத்தேன்; போடா சனியனே' என வசைபாடி அனுப்பிவிட்டார். ஒரு நாள் இரவு திருடர்கள் புகுந்து விடவே அவர் வேலைக்காரனை 'முருகா முருகா' என்று கூவியழைத்தும் அவன் வரவில்லை; ஆண்டவனும் நேரில்

எழுந்தருளவில்லை. திருடர்கள் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டனர்.

கடவுளை நம்பி மனிதரை அவமதிக்கக் கற்பிக்கும் சிலரின் முகத்தில் ஓங்கி அறையாமல் அறைகிறது இக் கவிதை. அப்படியே கடவுள் துணை செய்ய வந்தாலும் மனித வடிவிலேதான் வருவார் என்பதையும் இது போதிக்கிறது.

இத்தகைய நகைச்சுவை ததும்பும் அங்கதப் பாடல்களால், இன்றைய அழுகிவரும் அரசியலையும் குத்திக் குத்திக் குடலைப் பிடுங்கிக் காட்டவேண்டும் என்பது என் நெடுநாளைய அவா.

வெள்ளம் வரும்போது வையைக் கரைகள் பூத்துக் குலுங்குவதை, 'கோடிப்பூ மாநாட்டு மேடை' எனப்பாடும் மீரா, இன்றைய திரையிசையில், 'ஓஓ இதுதான் அழகின் மாநாடா' எனப் பாடுவதற்குக் கைகாட்டியதுபோல் படுகிறது.

தமது ஆசிரியர் அ.கி.பரந்தாமனாரை இவர் 'புலமைச் சிங்கம்' எனப் பாடியிருப்பது பாராட்டுக்குரியது. 'ஞானப் பெண்ணே' என முடியும் பாடல்கள் சில, சித்தர்களை நினைப்பூட்டுகின்றன, கருத்தாலும் கற்பனையாலும்!

'தலைவா, என் தலைவா' என்று இவர் அறிஞர் அண்ணா அவர்களைப் புகழ்ந்து பாடியிருப்பன ஒவ்வோரடியும், மிகப் பொருத்தமானவை; பொலிவு மிக்கவை!

சிவகங்கை மன்னர் மறைவின்போது இவர் பாடியிருப்பவை, சங்க காலம் முதல் இன்றுவரை பாடப் பெற்ற கையறுநிலைப் பாடல்களுக்கு ஒரு மகுடம் சூட்டுகிறது. கண்ணீர்த் துளிகளை வரைபடமாக்கலாம், வார்த்தை வடிவாய் ஓவியமாக்கலாம் என்பதற்கு இப்பாட்டு நல்ல எடுத்துக்காட்டாகிறது.

குயிலின்மொழி குழலின்மொழி
குழந்தைமொழி, கட்டில்

துயிலும்பொழு திசைக்கும் இளந்
தோகைமொழி கேட்டுப்
பயிலும் ஒரு கிளியின் மொழி
பண்யாழ்மொழி எல்லாம்
உயிரில் எமதுளத்தில் உரம்
ஊட்டும் தமிழாமோ?

சந்த இனிமைக்கும் பா நடைக்கும் ஒரு காட்டாகத் தக்க இப்பாட்டுப்போல, இத்தொகுப்பில் உள்ள பல பாக்கள் சுவைஞனின் உள்ளத்தைத் தொடத்தக்கன.

மீரா மிகமிக அடக்கமானவர். அதனால் இன்றைய அரசியலாரால் கண்டு கொள்ளப்படாதவர். 'சினிமா' வெளிச்சத்தில், துள்ளித் திரியும் விட்டில்களிடையே, இவர்தம் பாடல்கள் 'கற்று அடங்கல், ஆற்றுவானது செவ்வி உடையன.

அறம் காத்திருந்து பார்ப்பதுபோல இக்கவிதைகளும் காலம் கடந்தாலும் மக்களால் கண்டு கொள்ளப்படும் என்பது உறுதி.

ஏரகம்
சதாசிவ நகர்
மதுரை

தமிழண்ணல்

# 'நீராடப் போதுவீர்....'

(முதற்பதிப்பின் தொகுப்புரை)

முனைவர் மா.பெ. சீனிவாசன்.

''இவர் ஒரு மகாகவி.

இவரைப் போன்ற ஒரு கவிஞர் தமிழ் நாட்டில் பிறக்கக் கொடுத்துவைத்தது நாம்செய்த பாக்கியம்.

இதை மக்கள் இன்று உணராவிட்டாலும் பின் ஒரு காலத்தில் உணருவார்கள்''

- இந்தப் பொருளுரை யாருக்கு, எப்போது, யாரால் வழங்கப்பட்டது என்று நினைக்கிறீர்கள்?

இது, பாரதிக்கு, அவர் வாழ்ந்த காலத்திலேயே, பரலி. சு. நெல்லையப்பரால் வழங்கப்பட்டதாகும்.

நெல்லையப்பரின் வாக்கு இன்றைக்கு நிறைவேறிக் கொண்டிருக்கிறது; அங்கிங்கெனாதபடி எங்கும் பாரதி புகழ் பரவி வருகிறது; தமிழ்கூறு நல்லுலகம் பாரதியை விடுதலைக்கவிஞன் என்றும், புதுமைக் கவிஞன் என்றும், மக்கள் கவிஞன் என்றும் போற்றிப் புகழ்கிறது.

பாரதி வாழ்ந்த காலத்தில் அவருக்குக் கிட்டாத பீடும் பெருமையும் இன்று அவரைத் தேடித் திரிகின்றன.

இந்த மாற்றம் எதைக் காட்டுகிறது? உயிருள்ள பாடல்களை உருவாக்கும் உண்மைக் கவிஞனை உலகம்

அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிடமுடியாது - மறந்துவிட முடியாது என்ற உண்மையைத்தானே?

'சரி, பாரதி உண்மைக் கவிஞர் தான்; ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்; ஆனால் அவருக்குப்பின் வேறு உண்மைக் கவிஞர்கள் இருக்கிறார்களா?'

ஏன் இல்லை? பாரதிக்குப்பின்.... பாரதியின் 'கவிதா மண்டலத்தைச் சார்ந்த' கனகசுப்புரத்திரனம் என்ற பாரதிதாசன் இல்லையா? பாரதிதாசன் ஓர் உண்மைக் கவிஞர் இல்லையா? புரட்சிக் கவிஞர் இல்லையா?

'சரி, பாரதிதாசனுக்குப்பின்....?'

ஏன், இல்லை...? இருக்கிறார்கள், அவர்களுள், இதோ ஓர் உண்மைக் கவிஞர்.... எழுச்சிக் கவிஞர்.... இராசேந்திரன். (மீரா)

□

எது கவிதை? இப்படி ஒரு வினாவை எழுப்பி முப்பது நாற்பது பக்கங்களில் விடைகூற முயல்வார் சிலர். நான் அந்த வீண்முயற்சியில் இறங்க விரும்பவில்லை.

எவரேனும் என்னிடம் 'எது கவிதை'? என்று கேட்டால் 'இராசேந்திரன் கவிதைகள்' என்ற இத்தொகுதியில் உள்ள ஒவ்வொரு பாட்டையும் பதிலாகக் காட்டுவேன்... பாட்டின் ஒவ்வொரு அடியிலும் கவிதை! ஒவ்வொரு சீரிலும் கவிதை! ஒவ்வொரு அசையிலும் கவிதை! மருக்கொழுந்தைப் போன்ற மனங்கவரும் கவிதை! பருத்தி விதையைப் போன்ற பயன்தரும் கவிதை! கருநெல்லிக் கனியைப் போன்ற காலத்தை வெல்லும் கவிதை! கவிதையோ கவிதை!

□

இரண்டாம் உலகப்பெரும்போர் நடந்துகொண்டிருந்த காலம்; வானத்தில் வட்டமிட்டவாறு செர்மானிய விமானங்கள் இங்கிலாந்து நாட்டில் குண்டுகளை வீசிக் கொண்டிருந்த நேரம்; அந்த நேரத்திலும் இலண்டன்

மாநகரத்தின் ஒருபாதாள அறையில் ஆங்கில நாட்டு மக்கள் ஒரு கவிஞனுக்கு விழா எடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்தக் கவிஞன் பெயர் 'கதே'. அவன் எந்த நாட்டுக் கவிஞன் தெரியுமா? எந்த நாட்டுக்காரர்கள் இங்கிலாந்து மண்ணிற் குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்தார்களோ அந்த நாட்டுக் கவிஞன்... ஆம். செர்மன் நாட்டுக் கவிஞன், வியப்பாயிருக்கிறதா?

அரசியல் வேறுபாடுகள், கொள்கை முரண்பாடுகள் இவைகளெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், அவைகளை யெல்லாம் உதறித் தள்ளக்கூடிய நயத்தக்க நாகரிகத்தை நல்ல கவிதைகள் வழங்குகின்றன - நல்ல கவிஞர்கள் வழங்குகின்றார்கள்.

கவிதையின் வெற்றிக்கு - வல்லமைக்கு - இது ஒரு சரியான சான்று.

இப்படிப் பிறமொழியாளருங் கூடப் படித்துப் பாராட்டத்தக்க வல்லமைமிக்க கவிதைகளைக் கவிஞர் இராசேந்திரன் அவர்களும் படைக்காமலில்லை.

'நாணயம் மடிந்த நாள்' 'கயமையைக் கைதுசெய்' 'போலிகளை நம்புகிறாய், போ! போ!' போன்ற கவிதைகள் இந்திய மொழிகளுக்கு மட்டுமல்ல, மற்றைய நாட்டு மொழிகளுக்கும் ஏற்றுமதியாக ஏற்றவை.

'மன்னர் நினைவில்' என்ற கவிதை, கபிலர், ஔவை யார் போன்றோர் கண்ணீர் பெருகப் பாடிவைத்துள்ள கையறு நிலைக்கவிதைகளுக்கு நிகரானது. இக்கவிதை ஒருகுறிப்பிட்ட மன்னரின் மறைவுகுறித்து மட்டும் இயற்றப்பட்டது என்று நான் எண்ணவில்லை. நெஞ்சில் நீதியும், நினைவில் தமிழும், கண்ணிற் கருணையும், கையிற் கொடையும் கொண்டு இந்நாட்டை முறைசெய்து காப்பாற்றி மாண்ட பழந்தமிழ் மன்னர்களை யெல்லாம் நினைத்து இயற்றப்பட்டதாகவே நான் கருதுகிறேன்.

தெளிந்த சிந்தனை, சொற்சுருக்கம், அழகிய எள்ளல் குறிப்பு - இவற்றைக் காணவேண்டுமா? இத்திரட்டைப் புரட்டுங்கள்!

□

'சிறுதுளி பெருவெள்ளம்,' என்பது பழமொழி. இப்பழமொழியை உள்ளத்திற் பதித்தே 'இராசேந்திரன் கவிதைகள்' திரட்டப்பட்டிருக்கின்றன.

என் உள்ளத்தில் ஏதோ ஓர் முலையில் உறங்கிக் கிடந்த கவிதை உணர்ச்சிக்கு மதிப்பளித்து என்னை இந்நூலின் தொகுப்பாசிரியனாக்கிப் பெருமைப்படுத்திய என் கடந்த கால வகுப்பாசிரியராகிய கவிஞர், கைம்மாறாக என் இதயத்தை எடுத்துக் கொள்ளட்டும்.

□

மார்கழி மாதத்து வைகறைப் போதில் தன் தோழியர் களையெல்லாம் துயில் எழுப்பி,

''நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்'' என்று ஆண்டாள் அழைப்பதாகக் காட்டுகிறது - திருப் பாவை.

நானும், கற்கண்டுக் கவிதைகளின் காதலர்களை அழைக்கிறேன்.

நீராட வாருங்கள்.... இதோ வெள்ளம்!
நீராட வாருங்கள்.... இதோ புதுவெள்ளம்!
கவிதை வெள்ளம்..... வெள்ளமோ வெள்ளம்!

மருது அகம்
சேந்திஉடையநாதபுரம்

**ம.பெ. சீனிவாசன்**

# இரு துளிகள்

(முதற்பதிப்பின் மதிப்புரை)

## முனைவர் நா. இலக்குமணப் பெருமாள்

வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

கங்கைப் பெருக்கா? காவிரி வெள்ளமா? பூவிரி பாருநையின் புதுப்புனல் நீரா?

இனிமை காண இதோ இரு துளிகள்!

முடிவை நீங்கள் சொல்லுங்கள்!

பொதுவாகத் துளிகளின் தண்மையும் மென்மையும் பாக்கும் நோக்கும் கவி பாரதிதாசன் கவிதைகளை னைவுபடுத்துகின்றன.

வேறுபாடு.....? இல்லாமலில்லை.

இனம், மொழி என்ற பெயரால் பாரதிதாசன் விதையில் காணப்படும் 'மூடநம்பிக்கை' கவிஞர் ராசேந்திரன் கவித் துளிகளில் இல்லை.

''மூடநம்பிக்கையா? பாரதிதாசனிடமா....?''

புரிகின்றது. நன்றாகப் புரிகின்றது. நீங்கள் புருவத்தை ரிப்பது புரியனுத்தான் செய்கின்றது.

இதோ பாருங்கள்.†

மாலை நேரம். ''மருது'' அவளை மாடியில் கண்டான்; ப்பிற் கலந்து நின்றான். இரண்டு மாடிகள்; டியிருந்தன. எப்படிப் பேசுவது?

---

† காதல் நினைவுகள் பக் 35 - 39

நண்பன் ''சீனு'' நன்றாய் உதவினான்.

அதன் பின்...?

''அவன் விழி அவள் விழி அன்பிற் கலந்தன.''
'அகல்யா'' சிரித்தாள், அவனும் சிரித்தான்''
கைகள் காட்டி கருத்துரைத்தார்கள்
''என் சொத்துக்களை உன் பேருக்கே
எழுதிவைக்கவா? என்றான் மருது!
''வேண்டாம்! உன்றன் விருப்பம் வேண்டும்,''
என்றுகை காட்டினாள் எழிலுறும் அகல்யா,
'அழகிய நகையெல்லாம் அனுப்பவா' என்றான்
வேண்டாம் என்று மென்கை அசைத்தாள்.
''இன்று மாலை இவ்வூர்ப் புறத்தில்
கொன்றையும் ஆலும் கொடும்பாழ் கிணறும்
கூடிய தனிஇடம் நாடி வா' என்று
மங்கை உரைத்து மலருடல் மறைத்தாள்.''

பார்த்தீர்களா? காதல் தானே....? உண்மைக் காதல்தானே.....? தெரிகின்றதல்லவா?.... இன்னும் பாருங்கள்.

மாலை நேரம். மங்கை அகல்யா,மரத்தினடியில் பண்ணொன்று இசைத்தாள். அவ் வேளை, ''கன்னல்'' என்ற இன்னொரு பெண்ணாள், (அவள் மருதுவினால் வேம்பென வெறுக்கப்பட்டவள்) 'என் வாழ்வை வீணாக்கிய நீ ஞாலமேல் வாழுதி நன்றே'' என்று வசை மொழி வழங்குதல் கேட்டான் மருது.

அவன் அகல்யா இருந்த மரத்தடி சென்றான். அவள் பாடிய பண்ணைக் கேட்டான். அப்போது பாடுகிறார் பாரதிதாசன்:

''........ மெல்லியின் பாட்டில்
தமிழிசை இருந்தது. தமிழ்மொழி இல்லை!
செழுமலர் இருந்தது, திகழ்மண மில்லை!
வள்ள மிருந்தது வார்த்த தேனில்லை!

தணலால் அவனுள்ளம் தாக்கப் பட்டது.

.....................................

அகல்யா காதலால் ஆயிரம் சொன்னாள்!

சொன்னவை தெலுங்கர்க்குச் சுவைதரத் தக்கவை!''

என்று நினைத்து அகல்யாவை விலக்கி, தமிழ்ப் பெண் கன்னலிடம் தாவி ஓடினான் மருது. அகல்யா விடாது தொடர்ந்தாள். இருந்தும் என்ன? அவள் தெலுங்கச்சி தானே?

கன்னலும் மருதுவும் கலந்தார்கள்.

அகல்யாவின் கதி? பாழுங் கிணற்றில் அகல்யா வீழ்ந்தாள்.

என்ன சொல்லுகிறீர்கள்?

அன்பால் கட்டுண்ட இதயத்தை 'மொழி' 'இனம்' என்ற ஆயுதங்களால் வெட்டுண்டு சிதறவைப்பது சரியா? இல்லை, முறையா? இதற்குப் பெயர்தான் தமிழ்ப்பற்றா?

''வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ்

எங்கள் மூச்சாம்''

என்று பாடிய பாரதிதாசன் தமிழ்ப் பற்றுக்குத் தலை வணங்குகிறோம்.

ஆனால் 'அன்பு' - 'காதல்' ஏற்படுவதுகூட 'மொழி' 'இனம்' பார்த்துத்தான் ஏற்பட வேண்டும் என்ற மூடநம்பிக்கைக்குமா தலைவணங்க வேண்டும்? முடியாது. ஒருக்காலும் முடியாது.

இதைக்கூறுவதன் நோக்கம் கவி பாரதிதாசனைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக அல்ல! கவிஞர் இராசேந்திரன் கவித்துளிகளில் இக் 'குறைபாடு' இல்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான்.

ஒரு துளி காட்டலாம்.

அவன் ஏரிக்குப் பக்கத்தில் அவளைக் கண்டான்; வெகு நாளாய்க் கண்டான். கொஞ்சம் மயக்கமும் கொண்டான்.

ஓர் நாள்....

கவிஞர் இராசேந்திரன் (மீரா) பாடுகிறார்.

''சந்திரனைப் படைத்துப்பின் இயற்கையெனும் சிற்பி
சரியில்லை இதுவென்று விட்டெறிந்து நன்றாய்ச்
சிந்தித்து மிகமுயன்று படைத்தளித்த அழகின்
திரட்டே! நீ கிடைத்தால் நான் பணக்காரன் வீட்டுப்
பந்தியிலே இருந்துண்ண இடம் கிடைத்தால் மகிழும்
பசிகாரன் போல் மகிழ்வேன்! கிடைப்பாயா?''

என்று அவன் அன்பு குழைய அவளிடம் கேட்டான். அவளைப் பாருங்கள்!

''முந்தியெழும் பெருமூச்சை உள்ளடக்கித் துன்ப
முத்திரையை வெளிக்காட்டிக் கனி உதட்டைத் திறந்தாள்''

திறந்து என்னதான் சொன்னாள்?

''கலையழகுச் சித்திரம்போல் கண்கவரும் உம்மைக்
கைப்பிடிக்கக் கடல் அளவு ஆசைதான்! ஆனால்
மலையாள மங்கைநான்! தமிழ்மகன் நீர்! இனிதாய்
மணம்புரிய வழியுண்டா நாம்? என்று கேட்டாள்''

இந்த இடத்தில் பாரதிதாசனின் தலைவனாக இருந்தால்..

அதைநாம் ஏன் சொல்ல வேண்டும்? அகல்யா வீழ்ந்த அந்தக் கிணற்றையே கேளுங்கள்!

இராசேந்திரன் இப்படியா படைத்துள்ளார்?

இராசேந்திரனின் தலைவன் என்ன சொன்னான்?

''சிலையே! நற் காதல்முன் சாதி இன பேதச்
சிந்தனைக்கே இடமில்ல வா''

என்று சொன்னான். பின் ''ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம்! அங்கே'' என்று கவிஞர் முடிக்கின்றார்.

பாராட்டவேண்டும்.... சொல்லாட்சி , உணர்ச்சிப் பெருக்கு, நடைநயம் இவற்றை நோக்கும்போது கவி ாரதிதாசனைத் தன் முன்னோடியாக நினைத்து

இராசேந்திரன் பாடியிருக்கலாம் என்று தோன்றுகிறது - இருப்பினும் கவி பாரதிதாசனிடம் இருக்கும் 'குறைபாட்டை' நீக்கித்தம் கவித்துளிகள் இனம், மொழிப் பாகுபாட்டைக் கடந்தவை என்று காட்டியதற்காகக் கவிஞர் இராசேந்திரனைப் பாராட்டத்தான் வேண்டும்.

□

இன்னொரு துளி காண்போமா?

மேற்கூறிய 'குறைபாட்டைத்' தவிர பாரதிதாசன் கவிதைகளில் போற்றப்பட வேண்டிய புதுமைகள் பலப் பல!

பாட்டாளி வர்க்கத்தின் குருதியைக் கொதிக்க வைத்து, நரம்புகளை முறுக்கேற்றி ஆணவங் கொண்டோர்க்கு எதிராக அரும்படை திரட்டிப் பெரும் போர் தொடுப்ப தற்குப் பாரதிதாசன் தீட்டிய பல கவிதைகள் பட்டைதீட்டப் பெற்ற வைரவாட்களாகத் திகழ்கின்றன.

''கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை யடிப்பதும் நீதியோ? -புவி
வாழ்வது தான் எந்தத் தேதியோ?''

என்றும்

''எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? - இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?''

என்றும் பாடிய பாரதிதாசன் வெறும் 'பாரதிதாசன்' மட்டு மல்லர்; பாட்டாளி வர்க்கத்தின் படைக்கலனுமாவார்.

இப்படைக் கலனைத் தாமும் பக்கபலமாகக் கொண்டிருக்க வேண்டும் இராசேந்திரன்.

இதோ கவிஞரின் ஒரு துளி.

''மனிதனாய் மாறு; மாற்று உன் சாதியை
செத்த பிணத்தைக் கொத்துங் கழுகினும்

*கொடியதோர் உள்ளத்தைக் கொலை செய்; இதோவாள்!*
*கயமையைக் கைதுசெய்; கடுந்தண்டனை கொடு!*
*'எல்லாம் எனக்கே' என்ப தினிமேல்*
*எத்தர் ஏய்ப்புரை; இழிசினர் வழக்கு*
*.... ..... ..... ..... .... .... .....*
*முதலாளித்துவ முதுகெலும் பைமுறி!*
*பாடுபடு வோர்க்கே பாரெனப் பாடு*
*சமத்துவச் சங்கொலி செய்து*
*சமைத்திடு தம்பி புதியதோர் தரணியே''*

என்கிறார்.

*சமுதாயத்தில் ஏற்றமும் தாழ்வும் - ஏணியும் கேணியும்- மேடும் பள்ளமும் இருப்பின் அதைத் தகர்த்தெறி; புறப்படு என்ற உணர்ச்சியை எழுப்பும் இக் கவித்துளியை எப்படி மறப்பது?*

போதும். இனிமை காண இருதுளிகள் போதும்.

இப்போது, உங்களைக் கேட்கிறேன்?

*இவ்வெள்ளம் கங்கைப் பெருக்கா? காவிரி வெள்ளமா?*

*பூவிரி பொருநையின் புதுப் புனல் நீரா? நீங்களே சொல்லுங்கள்!*

*17.10.1965*
*சிவகங்கை*

தங்கள்
**நா. இலக்குமணப்பெருமாள்**

# முன்னுரை

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள்.

இலக்குமி அம்மாளும் எஸ்.மீனாட்சி சுந்தரமும் என் மாதா பிதாக்கள்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் என்குரு. மகாகவி பாரதி என் தெய்வம்.

என் குருவின் மூலமே என் தெய்வத்தை தரிசித்தேன். பாரதிதாசனின் தாசன் ஆன நான், மற்றும் ஒரு பாரதிதாசன் ஆனேன்.

பாவேந்தரை ஒரே ஒருமுறை தான் பார்த்திருக்கிறேன். சிவகங்கை அரசர் பள்ளிக்கு திரு. நாராயணன் சேர்வை தலைமை ஆசிரியராய் இருந்தபோது வந்திருந்தார். நான் அப்போது மன்னர் கல்லூரி மாணவன்.

பாவேந்தர் பேச்சைக் கேட்கப் பள்ளிக்குப் போனேன். பாவேந்தர் பேசினார். இராசகம்பீரத்தோடு பேசினார். தமிழ் உணர்ச்சி பொங்கி வழிந்தது. மொழிப் பற்றும் இனப்பற்றும் மேலோங்க முரசறைந்தது போல் இருந்தது.

இராமநாதபுரத்தில் பள்ளியில் படிக்கும் போதே அவரைப் படித்து மயங்கிய நான் அவர் பேச்சைக் கேட்க ஆசைப்பட்டிருக்கிறேன். அந்த வாய்ப்பு சிவகங்கையில் கிடைத்தது. கூட்டம் முடிந்ததும் அவரை உணவுண்ண அழைத்துச் சென்றார்கள். அவருக்கு வணக்கம் தெரிவித்து ஓரிரு வார்த்தைகள் பேசவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் என் கூச்ச சுபாவம் அவரை நெருங்க விடவில்லை.

அப்புறம் கடைசிவரை அவரைப் பார்க்க முடிய வில்லை. கவிஞர்கள் முருகுசுந்தரம், தமிழன்பன், பொன்னடியான் போல் பார்க்க, பழகக் கொடுத்து வைக்க வில்லை.

○

சின்ன வயது முதல் எழுபது தொடக்கம் வரை நான் திராவிட இயக்கத்தில் ஒன்றியிருந்ததற்கு அண்ணாவைப் போல பாவேந்தரும் மற்றொரு காரணம். அவர் கவிதைகளைப் படித்துச் சுவைத்த நெஞ்சம், அவரைப் போலவே என்னையும் திராவிட இயக்கப்பாடல்களைப் புனையத் தூண்டியது.

முரசொலி முதலிய பத்துக்கு மேற்பட்ட தி.மு.க இதழ்களில் அறுபதுகளின் ஆரம்பத்தில் நிறைய கவிதைகள் எழுதியிருக்கிறேன். மதுரையிலிருந்து வெளிவந்த கருமுத்து தியாகராசனாரின் 'தமிழ்நாடு' நாளிதழின் ஞாயிறு மலர்களில் அரசியல் அல்லாத பொது நிலைக்கவிதைகளை வெளியிட்டிருக்கிறேன்.

இந்தி எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு, தனித்திராவிட நாடு தமிழ் மறுமலர்ச்சி, சாதி மதஒழிப்பு, கடவுள் மறுப்பு, சமூக சீர்திருத்தம், சமத்துவ சமுதாயம், கலப்புத் திருமணம் முதலியவை என் பாடுபொருள்களாயின. கவிஞன் என்றால் காதலுக்குக் குறைச்சல் இருக்காது. (அறிஞர் தமிழண்ணல் காதலை ஒரு பக்தி இயக்கமாக வளர்த்தவன் நான் என்கிறார்.) இயற்கைப் புனைவும் இருக்கும்.

59, 60, 61 ஆண்டுகளில் தியாகராசர் கல்லூரியில் முது கலை படிக்கும் போது இத்தகைய கவிதைகளை எழுதிக் கொண்டிருந்தேன். பத்திரிகைகளில் அவ்வப்போது வருவதைப் பார்த்துப் பரவசப்படுவேன்.

அப்போது கவிக்கோ அப்துல் ரகுமான் என் வகுப்புத் தோழர். நான் பத்திரிகைகளுக்கு அனுப்புவதற்கு முன் சில கவிதைகளை அவரிடம் கொடுப்பேன். அவர் என்னுடைய பச்சையான அரசியல் கவிதைகளை வெளியிடாதீர்கள்

என்று தடுப்பார். எதிர்ப்பார். அவருக்கு சுத்தக் கவிதை தான் (Pure Poetry) பிடிக்கும்.

ஒருமுறை உவமைக் கவிஞர் சுரதா தலைமையில் கல்லூரியில் கவியரங்கம். ரகுமான் 'முத்துக்கள்' என்ற தலைப்பில் பாடினார். அது முத்துப் போன்ற கவிதை. 'கடவுள்' என் தலைப்பு. இங்கர்சாலைப் படித்து விட்டு பெரியாரைப் படித்துவிட்டு அவர்கள் பாணியில் கடவுளை விமர்சனம் செய்து 12 எண் சீர் விருத்தங்கள் பாடினேன். கவியரங்கம் முடிந்ததும் ரகுமான் பக்கம் கவிதை பக்தர்கள்.... என் பக்கம் கழகப் பித்தர்கள். திரு. பெ. சீனிவாசன் (முன்னாள் சட்ட மன்றத் துணைத் தலைவர்) குறிஞ்சி சுப்பிரமணியன், தம்பி நா. காமராசன், திரு.மாசிலாமணி போன்ற கழகக் காளையர்கள் பலரும் என்னிடம் நெருங்கி வந்து கை குலுக்கினர். இப்போதும் 'கடவுள்' கவிதை இருக்கிறது. ஆனால் வெளியிட விருப்பமில்லை. 'எனக்கில்லை கடவுள் கவலை' என்பது என் கொள்கையாகிவிட்டது.

பாரியின் பறம்பை மூவேந்தர்கள் முற்றுகையிட்டது போல், நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீரிழிவு, இதய நோய், வாதநோய் ஆகிய முந்நோய்களால் தாக்கப்பட்டு படுக்கையில் கிடக்கிறேன். 'இப்போதாவது கடவுளைக் கும்பிடுங்கள். கோயிலுக்குப் போங்கள்,† 'ஓம் நமச்சிவாயா சொல்லுங்கள், சுலோகம் சொல்லுங்கள்' என்று நெய்வேலியிலிருந்து வரும்போதெல்லாம் என் அருமை மகள் செல்மா சொல்லிச் சொல்லிப் பார்த்தும் எதுவும் நடக்கவில்லை. என்னால் முடியவில்லை. கடவுள் இருந்து காப்பாற்றினால் நல்லது தான். (நான் பிழைத்துப் போகிறேனே) ஆனால் இயல்பாய் எனக்கு அந்த நம்பிக்கை வரவில்லை. இனி, சாகப் போகும்போதா வரப்

† 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டும்' என்ற கவிஞர் சுரதாவின் கவிதை சின்ன வயதில் என் நெஞ்சைத் கவர்ந்த கவிதை. ஆனால் பல கோயில்களுக்குப் போயிருக்கிறேன், சில காரணங்களுக்காக. பின்னால் கடவுள் மறுப்பு என்பதில் தீவிரம் காட்டவில்லை.

போகிறது? திராவிடர் கழகத்தலைவர் திரு. கி.வீரமணி கொடுத்த பெரியார் விருதுதான் என் படுக்கையருகே இருக்கிறது.

பெரியார், அண்ணா, கலைஞர் கொள்கை வழி வந்ததால் கடைசிவரை பகுத்தறிவுவாதியாக என்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்.

கலைஞர் தம் பிள்ளைகளுக்குக் கலப்பு மணம் செய்வித்தவர். அண்ணன் கவிஞர் முடியரசன் தம் எல்லாப் பிள்ளைகளுக்கும் வேறு சாதியில் திருமணம் செய்வித்தவர். நான் என் மூன்று பிள்ளைகளுக்கும் சாதி மட்டுமல்ல, மதமும் மொழியும் கடந்து திருமணம் செய்து வைத்தேன். என்னைப் போல் என் பிள்ளைகள் இருப்பார்களா என்பது சந்தேகம்.

என் கருத்துக்களில் நூற்றுக்கு நூறு அவர்களுக்கு உடன்பாடு கிடையாது. நான் அவர்கள் உரிமையில் தலையிடுவது கிடையாது.

மொத்தத்தில் ஒரு சீர்திருத்தவாதியாகவும் முற்போக்குச் சிந்தனையாளனாகவும் மனிதாபிமானி யாகவும் என்னை முதலில் வளர்த்தது திராவிட இயக்கம்.

○

திராவிட இயக்கத்தில் இருந்தபோது என்முதல் கவிதை நூல் 'இராசேந்திரன் கவிதைகள்,' என் இயற்பெயரில் வெளிவந்தது. (அதற்கு முன் 1962 இல் 'சுவை' என்னும் கவிதைத் தொகுப்பை சிவகங்கை அரச குடும்பத்தைச் சேர்ந்த திரு. திருவரங்கராசன் மூலம் வெளியிட்டேன். அவர்தான் என்னைப் பதிப்புத்துறையில் ஈடுபடச் செய்த பெருமகன்)

இராசேந்திரன் கவிதைகளை ஆராய்ந்தவர்கள் என்னை ராவிட இயக்கக் கவிஞன் என்றும் பாவேந்தரின் வாரிசு ன்றும் குறிப்பிட்டுள்ளனர்.

○

இராசேந்திரன் கவிதைகள் 1965 அக்டோபரில் வெளிவந்தது. அதை அப்போது தொகுத்தவர் சேந்திஉடையநாதபுரம் சீனிவாசன். சிவகங்கைக் கல்லூரி யில் பி.ஏ. இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தார். என் மாணவர்.

இராசேந்திரன் கவிதைகளுக்குப் பிறகு வந்த மூன்றும் ஆறும், கனவுகள், ஊசிகள், போன்றவை பல பதிப்புகள் கண்டுள்ளன. இடைக்காலத்தில் இராசேந்திரன் கவிதை மறுபதிப்பு வராமலேயே கிடந்தது. இது 2002. இப்போது '*மீரா கவிதைகள்*' என்று பெயர் மாற்றம் பெற்று வருகிறது. 1965 இல் தொகுப்பாசிரியராக இருந்த சேந்திஉடைய நாதபுரம் சீனிவாசன் சிவகங்கைக் கல்லூரியில் படித்து முடித்து, தியாகராசர் கல்லூரியில் தம்பி செயப்பிரகாசத்துடன் படித்து எம்.ஏ பட்டதாரி ஆகி என் தலைமையில் சிவகங்கைக் கல்லூரியில் விரிவுரையாள ராகச் சேர்ந்து முனைவர் பட்டமும் பெற்று சில மாதங்கள் தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கி நேற்று(மே 31) ஓய்வு பெற்று விட்டார். அவர் மாணவப் பருவத்திலிருந்து ஓய்வு பெறும் கால கட்டம் வரை கணக்குப் பாத்தால் 37 ஆண்டுகள்.

37 ஆண்டுகளாக இராசேந்திரன் கவிதைகள் அல்லது மீரா கவிதைகள் மறுபதிப்பு வராததற்கு என்ன காரணம் என்று எனக்கே புரியவில்லை. கல்லூரிப் பணி, தலைமைப்பணி, முதல்வர் பொறுப்புப்பணி, கல்லூரிப் போராட்டப்பணி, தொழிற்சங்கப் பணி, 'கவி' இதழ்ப்பணி, அன்னம் விடு தூது இதழ்ப்பணி, அன்னம் பதிப்பக சிறப்பாசிரியர் பணி, அகரம் அச்சக மேற்பார்வைப் பணி, கொஞ்சம் குடும்பப் பணி - இவை எல்லாம் சேர்ந்து என் எழுத்துப் பணியை வளைத்துப் பிடித்துக் கட்டிப் போட்டு விட்டன என்று தான் சொல்ல வேண்டும்.

○

1998 மே 31 ஆம் நாள் நான் ஓய்வு பெற்றேன். மறுநாளே அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'ஓம் சக்தி'யில் இணை ஆசிரியராகச் சேர நேர்ந்தது. அந்தப் பத்திரிகையில் நான் சுதந்திரமாக இயங்க எழுத, நல்ல எழுத்தாளர்களிடம் கதை, சமூகவியல், இலக்கியக் கட்டுரைகள் வாங்கி வெளியிட ஆசிரியர் அருட்செல்வரும் பதிப்பாசிரியர் சிதம்பரநாதனும் தடையாய் இருந்ததில்லை. எனினும் என்னால் தெய்வப் பக்திக்கட்டுரைகள், திருக்கோயில் விழாக்கள் பற்றியெல்லாம் எழுத முடியவில்லை. அவற்றைக் கவிஞர் சிதம்பரநாதன் கவனித்துக் கொண்டார். தனி அறை. தொலைபேசி வசதி எல்லாம் இருந்தது. எனக்கு வேலைப்பளு இல்லை. அச்சகவேலை, வடிவமைப்பு போன்றவற்றைப் பார்க்க ஆட்கள் இருந்தார்கள். வாரப் பத்திரிகையாக இருந்திருந்தால் எனக்கு வேலை இருக்கும். மாதப் பத்திரிகைக்கு இருவர் தேவையில்லை. எனக்கு பெரிய சம்பளம் கொடுத்தார்கள். என் குடும்பச் சூழ்நிலைக்கு வருமானம் தேவைதான். ஆனால் எனக்கென்னவோ போதிய வேலை பார்க்காமல் சம்பளம் மட்டும் அதிகம் வாங்குவதாகத் தோன்றியது. ஒரு முதலாளியை ஒரு தொழிலாளி சுரண்டுவது போல் பட்டது. என்னை அரவணைத்துப் போற்றும் கவிஞர் சிதம்பரநாதனிடம் மெல்லச் சொன்னேன். ஐயாவிடமும் ஒருநாள் பேச்சோடு பேச்சாகச் சொல்லிவிட்டேன்.

இடையில் ஒருநாள் என் பையன் கதிரிடமிருந்து தொலைபேசி வந்தது, தோழர் பேராசிரியர் கோ.கேசவன் மறைந்து விட்டார் என்று. உடனே கோவை விஜயா பதிப்பகம் சகோதரர் மு.வேலாயுதம் அவர்களிடம் 'தகவலை பலகையில் எழுதி வையுங்கள்' என்று சொல்லி விட்டு மதுரை புறப்பட்டேன். மதுரை வரும்போது மணி பத்து. அதற்குள் அவர் உடலை மயானத்துக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். அவருடைய துணைவியாரிடம் துக்கம் விசாரித்துவிட்டு இரவு ஒரு மணிக்கு சிவகங்கை வந்து படுத்ததுதான். படுத்தது படுத்ததுதான். மறுநாள்

காலை 9 மணி ஆகியும் எழ முடியவில்லை. உடம்பு ஒரு நிலையில் இல்லை. அசைய முடியவில்லை. நெஞ்சும் வலித்தது. என் உறவினர் மருத்துவர் திரு.மகாதேவனிடம் போனேன். 'ECG' எடுக்கச் சொன்னார். பார்த்துவிட்டு உடனே மதுரை போகச் சொன்னார். இதயநோய் வல்லுநர் திரு. முத்துசாமியைச் சந்தித்தேன். அவர் சோதனை மேல் சோதனை செய்து இதயத் துடிப்பு சீராக இல்லை, விட்டுவிட்டு அடிக்கிறது. சர்க்கரை நோயுடன் நரம்புத் தளர்ச்சியும் இருக்கிறது என்று ஒருவாரம் அவருடைய மருத்துவமனையில் தங்கச் செய்து மருந்து மாத்திரை கொடுத்தார். கொஞ்சம் குணமானதும் கோவைக்கு நானும் என் மனைவியும் போனோம். திரு. சிதம்பரநாதனிடம் வராத விருந்தாளியாக நோய் வந்திருக்கிறது, உபசரிக்க வேண்டும் என்று சொன்னேன். நானும் அவரும் ஐயாவிடம் போனோம். நிலைமையைச் சொன்னேன். என்னை விடுதல் செய்ய வேண்டும் என்று வேண்டினேன். 'ஊரில் இருந்து பத்திரிகைக்கு உதவுங்கள் என்று சொல்லி பெரிய உள்ளத்துடன் வழியனுப்பி வைத்தார்.

நானும் என் துணைவியாரும் ஊருக்கு வந்தோம். வந்தது முதல் வைத்தியம்தான். மதுரையில் மூன்று மருத்துவ மனைகளிலும் கோவையில் கொங்குநாடு மருத்துவ மனையிலும் இருந்து பார்த்தேன். கடைசியில் பார்க்கின் சன்' என்னும் ஒருவகை வாதம் என்று கண்டுபிடித்தார்கள். சாப்பிடுவது, குளிப்பது கூட முடியவில்லை. என் மனைவிதான் எல்லாம் செய்ய வேண்டும். மிகவும் உடல் மோசமாகி விட்டது. படுக்கையில் புரளக் கூட முடியாது. மருத்துவர் ஜே.ஜெயக்குமார் (நரம்பியல் வல்லுநர்) எழுதித் கொடுத்த வெளிநாட்டு மாத்திரைகளை உட்கொண்ட பின் கொஞ்சம் நோய் தணிந்தது.

என்னைப் பார்க்க உள்ளூர் நண்பர்களைக் காட்டிலும் வெளியூர் நண்பர்கள் அதிகம் வந்தார்கள்.

கவிக்கோ முதல்முறை வந்து 'வேலூருக்குப் போகலாம்' என்றார். வருகிறேன் என்று சொன்னேன்.

பிறகு அவருக்கே இதய நோய் வந்து அறுவை சிகிச்சை செய்ய நேர்ந்தது என்று தகவல் வந்தது. நான் நொந்து போனேன். கொஞ்சம் குணமானதும் மதுரை வந்து பேராசிரியர் பாப்பையா மகன் திருமணத்தில் கலந்து கொண்டிருந்து விட்டு சிவகங்கை வந்தார். நான் சென்னைக்குப் போய் அவரைப் பார்த்தது போய், அவர் சிவகங்கைக்கு வரும் நிலை ஏற்பட்டது. 'உடலைக் கெடுத்துக் கொண்டது' குறித்துக் கடிந்து கொண்டார். 'சும்மா படுத்திருக்காதீர்கள். 'படியுங்கள், எழுதுங்கள்' என்றார். புதிதாய் எழுதா விட்டாலும் எழுதி வைத்த கவிதைகளைத் தொகுத்து நூலாகக் கொண்டு வாருங்கள். 'இராசேந்திரன் கவிதைகளை மறுபதிப்புச் செய்யுங்கள்' என்று சொல்லிச் சென்றார். இதே போல் கவிஞர் சிற்பியும் கவிஞர் பாலாவும் தம்பி சுபாஷ் சந்திர போசும் வரும்போதெல்லாம் சொல்வார்கள். இவர்களின் தூண்டுதலால்தான் என் எழுத முடியாத கையால் கொஞ்சம் கொஞ்சம், தினம் தினம் எழுதி நூல்களை அச்சுக்குக் கொடுத்துவிட்டு இந்த முன்னுரையை எழுதுகிறேன்.

○

'இராசேந்திரன் கவிதைகள்' நூலில் இடம் பெறாமல் இருந்த கையெழுத்துப் படிகள், பத்திரிகைப் பக்கங்கள் இவற்றைத் தேடி எடுத்து சலித்துப்புடைத்து விடு பட்டிருந்த சில நல்ல கவிதைகளை 'மீரா கவிதை' களில் சேர்த்துள்ளேன். பிரிவினைக் கவிதைகளை எடுத்து விட்டு ஒருமைப்பாட்டுக் கவிதைகளை இணைத்துள்ளேன். பண்டித நேரு, முன்னாள் முதல்வர்.பக்தவத்சலம், கவியரசு கண்ணதாசன் போன்றோர் பற்றி எழுதிய வசைக் கவிதைகளை எடுத்துவிட்டு இசைக் கவிதைகளை மட்டும் இடம் பெறச் செய்துள்ளேன். 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று எழுதிய நெடுங்கவிதையைப் போட்டு விட்டேன்.

இத்தொகுப்பில் அறிஞர் அண்ணா பற்றி 'தென்னரசு' இதழில் வெளிவந்த கவிதையும், அண்ணா சுவைத்து மகிழ்ந்து 'திராவிட நாட்'டிலும் 'காஞ்சி'யிலும்

எடுத்தாண்ட இரண்டு கவிதைகளும் (கரும்புத் திருவிழா, வள்ளலார் வருவாரா) இடம் பெற்றுள்ளன. இன்னொரு கவிதை 'மூன்றும் ஆறும்' தொகுப்பில் உள்ளது.

முன்னாள் சட்டமன்றத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன், இந்நாள் சட்டமன்றத் தலைவர் முனைவர் மாண்புமிகு கா. காளிமுத்து, ம.தி.மு.க தலைவர் திரு.வை.கோ போன்றவர்கள் அடிக்கடி மேடைகளில் முழங்கிய 'சாகாத வானம் நாம்' என்று தொடங்கும் கவிதையும் இதில் உள்ளது.

O

தி.மு.கழகத்தின் கவிஞனாக இருந்த நான் வெறும் அனுதாபியாக அல்ல, உறுப்பினராகவும் இருந்தேன். பின்னால் அமைச்சரான திரு. செ.மாதவன், மறைந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு. சி.சேதுராமன் ஆகியோர் வீடுகளுக்கு நான், அண்ணன் மாரிமுத்து (CTO வாக இருந்து இப்போது ஓய்வு பெற்று மதுரையில் இருக்கிறார்) திரு.சிபியன், திரு.ஆர்.வி.சாமிநாதன், திரு.சச்சிதானந்தம் முதலானோர் அடிக்கடி போய் வருவோம். கட்சி நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவோம்.

சிறுகதை மன்னர் திரு.எஸ்.எஸ். தென்னரசு சிறைக்குச் சென்றிருந்த போது முன்னாள் மேயர் மதுரை முத்து அச்சகத்தில் அச்சிடப்பட்ட 'தென்னரசு' இதழை கவனித்துக் கொள்ளச் சொன்னார். முன்னாள் அமைச்சர் தா.கிருட்டிணன் கவனித்துக் கொண்டார். நான் கவிதைகள் எழுதிக் கொடுத்தேன்.

1967 தேர்தல் என்று நினைக்கிறேன். கழக வேட்பாளர் திரு. சி. சேதுராமனுக்காக கவிதை நடையில் எழுதி அச்சிட்ட மூவாயிரம் துண்டறிக்கைகளை ஒலி பெருக்கியில் தெருத் தெருவாய் வாசிக்கச் சொல்லி மக்களிடையே வழங்கச் செய்தேன். சிவகங்கை நகரத் தி.மு.க செயலராக திரு. திருஞானம் இருந்தபோது - நான் கல்லூரி பி.ஏ. முதலாண்டு மாணவன் - கட்சிக்

கட்டடத்துக்கு வாடகை செலுத்த என் மாணவத் தோழர்களிடம் பணம் வசூல் செய்து கொடுத்திருக்கிறேன். திராவிட இயக்க மாணவர்களை கல்லூரிக்குப் பக்கத்தில் உள்ள உடைமரக்காட்டுக்கு அழைத்துச் சென்று, இலைமறைவு காய் மறைவு அல்ல, தலைமறைவுக் கூட்டம் நடத்தியிருக்கிறேன். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி 'மன்றம்' இதழில் பொருளாதாரக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்த நாவலரின் இளவல் திரு. இரா. செழியனை அழைத்து நகரத்தின் காந்தி பூங்கா ஆலமரத்தின் அடியில் தொடக்க விழா நடத்தியிருக்கிறேன். நான் பாரதி மன்ற செயலராய் இருந்தபோது அறிஞர் அப்பாத்துரையார் பேராசிரியர் மா.கி.தசரதன், பேராசிரியர் திருமாறன் ஆகியோரைக் கல்லூரிக்கு அழைத்திருக்கிறேன். ஜீவாவையும் அழைத்திருக்கிறேன். பேராசிரியர் ஆனபிறகு தந்தை பெரியாரையும் அழைத்திருக்கிறேன்.

O

இப்படி திராவிட இயக்கத்தில் - தி.மு.கழகத்தில் தீவிரமாக இருந்த நான் கூடவே பொதுவுடைமைச் சிந்தனைகளுக்கும் ஆட்பட்டேன். தி.மு.கழகமே பொதுவுடைமைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும் இயக்கம் என்ற கருத்தை வலியுறுத்த 'கழகமும் கம்யூனிசமும்' என்று திரு.குமாரசாமியிடம் (நான் பி.ஏ. முதலாண்டு படிக்கும்போது இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருந்தார். நன்றாக எழுதுவார். சிந்திப்பார். இவர் வகுப்புத் தோழர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் முன்னாள் அமைச்சர் திரு.தா. கிருட்டிணன், கூட்டுறவுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு.வெள்ளைச்சாமி, திரு.சாமிமுத்தன், திரு.வடிவேலு போன்றோர்) ஒரு கட்டுரை எழுதச் சொன்னேன். அவர் 'கழகமும் கார்ல் மார்க்சும்' என்று ஒரு நெடுங்கட்டுரை எழுதினார். அது கவியரசு கண்ணதாசனின் 'முல்லை'யில் வெளிவந்தது. (திரு. குமாரசாமி பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ.

முடித்துவிட்டு வருமானவரித்துறையில் பணியாற்றினார். ஒரு முறை ஈரோட்டில் ஒரு கவியரங்கில் கலந்து கொள்ளச் சென்ற போது சந்தித்தேன். இப்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை).

○

நான். பி.ஏ. இறுதியாண்டு பயிலும் போது பேராசிரியர் நா. தர்மராஜன் எனக்கு ஆசிரியராக வந்தார். அவர் பெரியார் வழியில் புறப்பட்டுப் பின்னர் தீவிர பொதுவுடைமையாளரானவர். நான் தீவிர தி.மு.க. அதனால் இருவருக்குமிடையே பல தடவை முரண்பாடுகள் ஏற்பட்டதுண்டு. இருந்தாலும் அவை கவிக்கோவின் கவிதைகளில் வரும் முரண் பாடுகள்(முரண்தொடை) போல் நயமாய் இருக்கும். சண்டை போடுவோம். பிறகு சமாதானமாகப் பேசுவோம். அவர் தொடர்பால் குறிப்பிட்ட எழுத்துக்களை மட்டும் படித்துக் கொண்டிருந்த நான் பரவலாகப் படிக்க ஆரம்பித்தேன். ஜனசக்தி, தாமரைNew Age, Main Stream முதலிய பத்திரிகைகளை அவர் கொண்டு வந்து கொடுப்பார். அவற்றைப் படிப்பேன். அவர் அறிமுகப் படுத்திய இடது சாரி எழுத்தாளர்கள் முல்க்ராஜ் ஆனந்த், கிருஷன் சந்தர், கே.ஏ. அப்பாஸ் படைப்புகளை விரும்பிப் படிப்பேன்.

நான் எம்.ஏ. முடித்துவிட்டு சிவகங்கைக் கல்லூரியில் ஆசிரியரான பிறகு அரசியலில் இருவரும் வேறுபட்டி ருந்தாலும் இருதுருவமாக இல்லை. பல காரியங்களில் ஒன்றுபட சந்தர்ப்பங்கள் வாய்த்தன. 1973 ஆம் ஆண்டு கல்லூரியில் வெடித்த புரட்சி என்னையும் அவரையும் ஒரு கூட்டுப் பறவைகள் ஆக்கின.

மாவட்ட, உள்ளூர்ப் பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் திரு.கூத்தக்குடி சண்முகம், திரு.பி.ஆர்.சந்திரன், திரு.வி.ஆர். அய்யாத்துரை, திரு.ஜீவாதாசன் ஆகியோர் எங்கள் போராட்டத்தின் போது

கவசமாக நின்றார்கள். பாலன் இல்லத்துக்குப் பலமுறை போய் தோழர் கல்யாண சுந்தரம், தோழர் ப. மாணிக்கம், தோழர் நல்லகண்ணு, தோழர் சீனிவாசன், தோழர் தியாகராாசன் முதலானோரைச் சந்திப்பதும் ஆலோசனைகளைக் கேட்பதும் வழக்கம். பொதுவுடைமை இயக்கத் தலைவர்களின் எளிமை, பரிவு, எதையும் வர்க்கக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் பார்வை, திடசித்தம், போர்க்குணம் என்னைக் கவர்ந்தன. இளைய தோழர்கள் து.ராஜா, சி. மகேந்திரன், ஆகியோருடனும் அன்புப் பிணைப்புண்டு. 1959 இல் என் முதல் கவிதை தாமரையில் வந்தது. பாரதி பற்றியது. அதற்குப் பிறகு ஜீவா மலருக்கு எழுதினேன். எழுபதுகளில் தாமரையில் பொறுப்பாசிரியராக திரு.தி.க.சி. வந்தார். அவருடைய தொடர்பு என்னைத் தாமரையில் எழுத வைத்தது. எனக்கு அவ்வப்போது கடிதம் எழுதி என்னை வளர்த்தவர் அவர். 'கனவுகள்' வந்த போது பேராசிரியர் நா.வா. ஆராய்ச்சி, சாந்தி ஆகிய இரு இதழ்களில் எழுதிய நீண்ட கட்டுரைகள், தாமரை செம்மலர், கார்க்கி முதலிய இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் சந்திர மண்டலத்திலிருந்து வந்த புது மனிதனைப் போல் என்னை வரவேற்றன. என்னை உற்சாகப்படுத்தி ஓரிரு இரவுகளைத் தூங்கவிடாமல் செய்தன.

திரு. பொன்னீலனைப் பொதுச் செயலராகக் கொண்ட கலை இலக்கிய பெருமன்றம், இஸ்கஸ், இந்திய ஜி.டி.ஆர். நட்புறவுக் கழகம் போன்ற அமைப்புகளில் பங்கு கொண்டு கவிதை பாடினேன். ஜனசக்தி பொன் விழாவில் கலந்து கொண்டேன்.

○

ஒருமுறை மானாமதுரையில் கந்தர்வனின் கிழிசல்கள் நூல் வெளியீட்டுக்கு மார்க்சிஸ்ட் தலைவர் தோழர் கே. முத்தையா வந்திருந்தார். அவர் தலைமையில் நானும் பேசினேன். அதற்குப் பின் எங்கள் தொடர்பு வலுப்பட்டது. அவருடைய நூல்களை அன்னம் மூலம்

வெளியிட்டேன். இதே போல் பேராசிரியர் அருணன் நூல்களையும் வெளியிட்டேன். தோழர் எஸ்.ஏ.பி. என்னிடத்தில் பிரியமாக இருப்பவர். 1963 இல் எழுதிய பொங்கல் கவிதை ஒன்றை செம்மலர் பொங்கல் சிறப்பிதழில் வெளியிட அனுப்பியிருந்தேன். † அதை 2002இல் நடுப்பக்கத்தில் எழில் ததும்ப வெளியிட்டிருந் தார்கள். 100 ரூபாய் அன்பளிப்புத் தொகை வந்தது. தோழர் எஸ்.ஏ.பி.யிடம் தொலைபேசியில் பேசினேன். 'இந்த நான்கு ஆண்டுகளில் ஒய்வூதியம் தவிர எனக்குக் கிடைத்த வருமானம் இந்த நூறு ரூபாய்தான் என்று சொன்னேன். எனக்கு எதற்கு அனுப்ப வேண்டும் என்றேன். 'செம்மலர் இப்போது வளர்ந்து விட்டது' என்று சொன்னார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

O

நான்கைந்து முறை வட நாட்டுக்குப் போயிருக்கிறேன். (வெளிநாட்டுக்குப் போனதில்லை) நான் போன எல்லா மாநிலங்களிலுமே பஞ்சமும் பட்டினியும் தலை விரித்தாடின. சாக்கடையருகில் ஆயிரக்கணக்கில் ஏழைக் குடிசைகள். பிச்சைக்குக் கையேந்தித் திரியும் சிறுவர் சிறுமியர்கள், உழைத்துத் தேய்ந்து உருக்குலைந்து நடைபாதையில் படுத்திருக்கும் தொழிலாளர்கள். வடக்கில் நான் கண்ட பல காட்சிகள் என்னை நோகச் செய்தன. 'வடக்கு வாழ்கிறது' என்று சொல்லிக் கொண்டிருந்தது தவறு தானோ என்று எனக்குப் பட்டது. India offers Unity in divertsity என்று வின்சென்ட் ஸ்மித் எழுதியது பொய். India offers Unity in poverty என்று எனக்குச் சொல்லத் தோன்றியது.

அங்கங்கே செல்வந்தர்கள் விரல் எண்ணிக்கையிலும் ஏழைகள் மயிர் எண்ணிக்கையிலும் இருப்பது புரிந்தது. அண்ணா திராவிட நாட்டைக் கைவிட்டது சரிதான் என்று என்னை சமாதானப்படுத்திக் கொண்டேன்.

---

† அந்தக் கவிதை பாட்டாளித் திருநாள் என்ற தலைப்பில் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

பொதுவுடைமை ஒன்றுதான் விமோசனம் என்று தீர்மானித்தேன். ஒரு நல்ல இந்தியத் தமிழனாகவும் அதே நேரத்தில் உலகக்குடிமகனாகவும் (Citizen of the World) வாழ விருப்பப்பட்டேன்.

O

இப்படித்தான் நான் பொதுவுடைமைப் பக்கம் போக நேர்ந்தது. போனாலுங்கூட திராவிட இயக்கத்தின், தி.மு.கவின் மாறாத- அடிப்படையான கொள்கைகளிலிருந்து விலகாமல், நான் ஆணி அடித்தது போல் அசையாமல் இருந்தேன்.

தேர்தல் காலங்களில் எனக்குச் சோதனை வரும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்ஸிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து கலைஞருடன் கூட்டணி அமைக்கும் செய்தியைப் படிக்கும் போது நிம்மதிப் பெருமூச்சு விடுவேன். மாறாக நடக்கும் போது இரண்டு பெண்டாட்டிக்காரன் படும் அவதிக்கு ஆளாகி விடுவேன்.

O

என் அரசியல் வாழ்க்கையை, போராட்ட வாழ்க்கையை விரிவாகச் சொல்ல இங்கே இடமில்லை.

பள்ளிக்குச் சேர்ந்து போகும் அண்ணன் தம்பி போல் சின்ன வயதிலிருந்தே தி.மு.க கொள்கைகளிலும் பொதுவுடைமைத் தத்துவத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தேன். இதனை அறுபதுகளில் வெளிவந்த இந்தத் தொகுப்பைப் படிக்கும் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும். அண்ணாவைப் பாடிய நான் ஜீவாவையும் பாடினேன். பொங்கலைப் போற்றியது போல மே தினத்தையும் கொண்டாடியுள்ளேன்.

என் சுருக்கமான அரசியல் பின்புலம் இவ்வளவுதான்.

O

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கலைஞர் என்னை அறிவார். என்றாலும் அவருக்கும் எனக்கும் பெரிய

நெருக்கம் இல்லை. தூர இருந்தே அவரையும் பேராசிரியரையும் மதிப்பவன் நான்.

தி.மு.க. ஆட்சிக்கு வருமுன்னும் வந்த பின்னும் ஆறேழு கவியரங்குகளில் கலைஞர் தலைமையில் பாடியுள்ளேன். நான் 'திசைமாறிய பறவை'யான பிறகு என்னை எதற்கும் அழைப்பதில்லை. அண்ணா கவியரங்கம், கலைஞர் கவியரங்கங்களில் நான் கலந்து கொண்டதில்லை. கலைஞர் கையால் எந்த விருதும் பெற்றதில்லை. பாவேந்தர் விருது கூட ஆளுநர் ஆட்சியில்தான் கிடைத்தது. எனக்கும் கவிஞர் சிற்பிக்கும் பாவலர் மணி பழனிக்கும் கவிஞர் நீலமணிக்கும் இன்னும் ஏழெட்டுப் பேருக்கும் இரவலர்களைப் போல் எங்களை வரச்சொல்லி ஆளுநர் பாவேந்தர் விருதுகளை வாரி வழங்கினார். கலைஞர் விருதுகள் தராவிட்டாலும் நான் பொதுவுடைமைப் பக்கம் போய் விட்டது தான் காரணம் என்று நினைக்கவில்லை. அவருக்கு என்மீது கோபமோ வருத்தமோ இல்லை. மாறாக வாழ்த்தவே செய்தார். 'எங்கள் வண்டலில் விளைந்த பயிர் மீரா. எங்கிருந்தாலும் வாழ்க' என்று மதுரையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது அண்ணாவைப் போல பெருந்தன்மையுடன் வாழ்த்தினார். அவரைப் பற்றி ஒரு முறை 'கவி' இதழில் வேடிக்கையாக எழுதியதைத் தவிர நான் விமர்சனம் செய்ததில்லை. தமிழினத்தின் மூத்த தலைவர் என்ற எண்ணம் எப்போதும் அவரை வணங்கச் செய்யும்.

கலைஞர் தனிப்பட்ட முறையில் எனக்கு உதவியதை நான் மறப்பதில்லை. அதைவிடக் கல்லூரிப் போர்க் களத்தில் 'ஒடிந்த வாளுமின்றி' நின்ற அபிமன்யுபோல் இருந்த என்னையும் ஆசிரியர் இனத்தையும் காப்பாற்றினார். நானும் பேராசிரியரின் இளவல் அண்ணன் திருமாறனும் இரண்டு மூன்று முறை சென்று அவரைச் சந்தித்து முறையிட்டபோது மோசமாக நிர்வாகம் செய்யப்பட்ட சிவகங்கை மன்னர் கல்லூரியை அரசு

கல்லூரியாக்க முதல் முயற்சி எடுத்தார்.[†] அதை என்றும் நன்றியோடு நினைவு கூர்வேன்.

இன்னொரு சம்பவம். கவிக்கோவின் மணிவிழா அன்று 'தினமணி'யில் 'மஹாபலிபுரம் சாலையில் ஒரு கவிதா மண்டலம் காணவேண்டும்' என்று எழுதி யிருந்தேன். ஓவியர்களுக்கு அமைந்துள்ள சோழ மண்டலம் போல் கவிஞர்களுக்காக ஒரு கவிதா மண்டலத்தை கலைஞர் உருவாக்கித் தரவேண்டும் என்று கோரியிருந்தேன்.

காலையில் 'தினமணி'யைப் படித்துவிட்டு மாலையில் கவிக்கோவைச் சிறப்புச் செய்து பேசும்போது, 'தம்பி மீரா எழுதிய தினமணி கட்டுரையைப் படித்தேன். அதில் ஒரு திருத்தம்; மஹாபலிபுரம் அல்ல; மாமல்லபுரம். மற்றபடி அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். அரசு ஏற்றுச் செயல்படும்' என்று பலத்த கரவொலிக்கிடையில் சொன்னார். வாசலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த எனக்கு மெய்சிலிர்த்தது. கலைஞர் என்றால் கலைஞர்தான் என்று என்னையறியாமல் என் வாய் உச்சரித்தது.

மணிவிழா முடிந்த மறுவாரம் கவிதா மண்டலம் எப்படி இருக்க வேண்டும், என்னென்ன இருக்கவேண்டும் என்பது குறித்த வரைபடம் (Blue print) ஒன்றை கவிக்கோவும் நானும் கலைஞரின் வீட்டுக்குச் சென்று கொடுத்தோம். அப்புறம் அண்ணா அறிவாலயத்தில் அவரைச் சந்தித்போது கவிதா மண்டலம் கோப்பு மாண்புமிகு தமிழ்க்குடி மகனிடம் இருக்கிறது என்றார்.

அவரைப் போய்த் தூண்டி விடுவோம் என்று நினைத்தபோது அவர் எங்கோ தாண்டிப்போய் விட்டார்.தேர்தல் வந்தது. ஆட்சி போனது. மக்கள் தீர்ப்பு மகத்தானதல்லவா?

---

[†] பிறகு மாண்புமிகு எம்.ஜி.ஆர்.காலத்தில் அரசால் ஏற்கப்பட்டது.

இப்போது இரண்டாயிரம் ஏக்கரில் மாமல்லபுரம் சாலையில் தலைமைச் செயலகம் வரப்போகிறதாம். குமரிக்கண்டம் மறைந்ததுபோல் அந்த இரண்டாயிரம் ஏக்கரில் என் ஆசைக் கவிதா மண்டலத்துக்குரிய இருபது முப்பது ஏக்கரும் மறைந்து விட்டதோ.

O

'மீரா கவிதைகளுக்குக் கலைஞரிடம் அணிந்துரை வாங்க நினைத்தேன். இந்தத் திசைமாறிய பறவைக்கு அவர் மனமிசைந்து தருவாரா என்ற தயக்கம் வந்தது. அத்துடன் அவர் உடல் நலங்குன்றியிருப்பதை நினைத்து விட்டு விட்டேன்.

O

கலைஞருக்குப் பிறகு நான் மதிக்கும் தமிழறிஞர் முனைவர் தமிழண்ணல் அவர்கள். அவரைத் தொலை பேசியில் அணுகினேன்; கவிதைத் தொகுப்பை உடனே அனுப்புங்கள் என்றார். அவருக்கு இருக்கும் ஆயிரம் பணிகளுக்கிடையே அணிந்துரை எழுத ஒப்புக் கொண்டது உவகை அளித்தது.

நான் முதுகலை முடித்துப்போன மறுஆண்டு அறிஞர் தமிழண்ணல் தியாகராசர் கல்லூரிப் பணிக்கு வந்தார். அதற்குமுன் கவிஞர் முடியரசனோடு காரைக்குடியில் பணியாற்றினார். படிப்படியாக முன்னேறி பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் ஆனார். தியாகராசர் கல்லூரியில் அவர் சேர்ந்ததும் அவரைப் போய்ச் சந்தித்தேன். அவருடன் பழகுவதற்கு முன் அவர் கவிதைகள் எனக்குப் பழக்கம். சிவகங்கைக்குக் குறள் விழாவுக்கு அழைத்தேன். அவரும் இசைந்தார். 62 ஆம் ஆண்டு கவிஞர் முடியரசன் தலைமையில் 'சுவை' என்ற தலைப்பில் கவிபாடினோம். அதை நூலாக்கத் திட்ட மிட்டபோது நூலின் பிற்பகுதியில் சில உதிரிக் கவிதைகளை எழுதிச் சேர்த்தோம். அதில் பேராசிரியர்

அண்ணல் அவர்கள் எழுதியிருந்த கவிதைகள் அனைத்தும் கற்கண்டுகள்.

அறிஞர் அண்ணல் அவர்கள் நம்மிடையே வாழும் மு.வ. எல்லாத் துறைகளிலும் வைர ஒளி வீசும் நூல்களைப் படைத்த பெருமகன். எழுத்தாளர்களில் ஜெயகாந்தனைப் போல் அறிஞர்களில் முனைவர் தமிழண்ணல் அவர்கள் நல்ல கவிஞர். (அவர் கவிதைகள் விரைவில் நூலாக வெளிவரவேண்டும்.) என் நூல்களையெல்லாம் படித்துப் பாராட்டியிருக்கிறார். அவருடைய மணிவிழா மலரை முனைவர் இரா.மோகனுடன் இணைந்து, தொகுக்க வாய்ப்பளித்தார். வள்ளல் திரு.வ.அருணாசலம் அவர்களின் தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில் விருது வழங்கச் செய்து என்னைச் சான்றோன் ஆக்கினார்.

'மீரா கவிதைகள்' அணிந்துரையில் என்னைக் குறிஞ்சிப் பூவாக்கி உதகை மலையில் ஏற்றிவைத்துவிட்டார். அவர் அணிந்துரை வந்த மறுநாள் 'தினமணி'யில் உதகையில் குறிஞ்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கும் காட்சியைப் படம் பிடித்துப் போட்டிருந்தார்கள்.

இராசேந்திரன் கவிதைகள் வெளிவந்தபோது அதைப் படித்து விட்டு கவிஞர் முடியரசனும் அறிஞர் அண்ணலும் இன்னும் சிலரும் 'பாவேந்தரைக் குறைகூறும் நோக்கில் பேராசிரியர் நா. இலக்குமணப்பெருமாள் எழுதிய இரு துளிகள் என்னும் மதிப்புரை உள்ளது.... பாவேந்தரை குருவாக மதிக்கும் நீங்கள் இதை வெளியிட்டிருக்கக் கூடாது' என்று எழுதினார்கள்.

இந்த விவாதத்துடன் இந்த முன்னுரையை முடிக்க விரும்புகிறேன்.

O

காதல் தொடர்பான ஒரு கவிதை. அதில் குருவும் சீடரும் எப்படி வேறுபடுகிறார்கள் என்று மதிப்பீடு

செய்திருந்தார் பேராசிரியர் நா. இலக்குமணப் பெருமாள்.[†] பாவேந்தரின் 'தமிழ் வாழ்வு' என்னும் கவிதையில் தமிழ் இளைஞன் ஒருவன் எதிர் வீட்டில் உள்ள பெண்ணை மாடியிலிருந்தே சைகை மூலம் காதலிக்கிறான். ஒருநாள் கிணற்றோரம் வரச் சொல்கிறான். (சைகையில்தான்) நேரில் சந்திக்கிறான்.

காதலித்த பெண் தெலுங்கச்சி என்று தெரிந்ததும் அவளை ஒதுக்கி அத்தை மகளிடம் வருகிறான் அந்தத் தமிழ் இளைஞன். தெலுங்கச்சியோ கிணற்றில் வீழ்கிறாள். இது பாவேந்தரின் காதல் வாழ்வில் காணும் சித்திரம். மாறாக, காதலித்த பெண் காதலனிடம் நான் மலையாளப் பெண்' என்று தயங்கித் தயங்கிச் சொல்கிறாள். அவனோ காதலுக்குச் சாதி மத மொழி பேதம் எதுவும் இல்லை என்று ஏற்கிறான். இது 'அங்கே ஆனந்தம்' என்னும் என் கவிதை. இருவர் கவிதையையும் ஒப்பிட்டு குருவை மிஞ்சிய சீடன் என்று என்னை ஓர் அங்குலம் உயர்த்திவிட்டார் பேராசிரியர் இலக்குமணப் பெருமாள்.

அறிஞர் அண்ணல் அன்று (37 ஆண்டுகளுக்கு முன்பு) எழுதிய கடிதத்தில், இந்த மதிப்பீடு சரியல்ல. பாவேந்தர்

---

[†] பேராசிரியர் நா. இலக்குமணப்பெருமாள் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் முதுகலை வகுப்பில் என்னுடனும் கவிக்கோவுடனும் சேர்ந்து பயின்றவர். நான் பணியாற்றிய சிவகங்கைக் கல்லூரியிலேயே அவரும் என்னுடன் முப்பது வருடங்கள் பணியாற்றினார். கடைசிச் சில வருடங்கள் காரைக்குடிக் கல்லூரிக்கு மாறுதலாகிச் சென்று அங்கிருந்து ஓய்வு பெற்றார். 'பாரதியின் ஆன்மிகம்' குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றார். 'சிந்திக்க விரும்பும் சிலருக்காக' 'கடவுள் முதல் கருணாநிதி வரை' என்ற இரு அற்புதமான கட்டுரைத் தொகுப்புகளைப் படைத்தளித்தவர். 'இலக்கியத் துறையிலிருந்து விமர்சனத் தோணி ஓட்டும் என் சகோதரர்' ஒருவர் என்று கனவுகளில் இவரைத் தான் குறிப்பிட்டுள்ளேன். என்னைக் காட்டிலும் ஆறுமாதம் மூத்தவர். இவரைப் பெயர் சொல்லிக் கூப்பிடமாட்டேன். 'அண்ணாச்சி' என்று தான் கூப்பிடுவேன். இப்போது சிவகாசியில் இருக்கிறார்.

கவிதை பிறந்த சூழல் தெரியாமல் எழுதப்பட்டிருக்கிறது. அப்போது தெலுங்கிசை ஓங்கி வளர்ந்து தமிழிசைக்குத் தடையாய் இருந்த நேரம். அதற்கு எதிர்ப்பாகத் தான் பாவேந்தர் அந்தக் கவிதையை எழுதினார் என்று குறிப்பிட்டிருந்தார். எனக்கு அதில் முக்கால் பங்கு உன்பாடு இருந்தது.

அண்மையில் தமிழிசைக்காக நடந்த போராட்டம் குறித்துச் சென்னையில் கலைஞர் பேசிய அருமையான உரையை 'நந்தன்' இதழில் படித்தபோது முழு உடன்பாடு ஏற்பட்டது. ஆனாலும் ஒரு சின்ன உறுத்தல். 'காதல் என்பது உயிரியற்கை' என்று பாடிய பாவேந்தர் காதலுக்குத் தடையாய் மொழியைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்க வேண்டாம். அகல்யாவைக் (தெலுங்கச்சி) கிணற்றில் தள்ளியிருக்க வேண்டாம்' என்று தோன்றியது. அத்துடன் குருபக்தி காரணமாக விமர்சனத்தின் எல்லை விரிவடைவதைத் தடுக்கக் கூடாது என்றும் தோன்றியது.

முனைவர் இலக்குமணப் பெருமாளின் மதிப்புரை மீண்டும் வெளிவரும் "மீரா கவிதைகளுக்கு" அணிந்துரை எழுதும்போது அந்தப் பழைய விவாதத்தைக் தொடருங்கள், விருப்பப்படி எழுதுங்கள் என்று அண்ணல் அவர்களிடம் வேண்டியிருந்தேன். அவரோ மென்மையாக, மேலோட்டமாகத் தொட்டுக் காட்டியிருக் கிறார்.போதும் என்று விட்டுவிட்டார்.

ஆனாலும் மேன்மைமிக்க அணிந்துரை.

○

ஒருமுறை சிறுகதை மேதை ஜெயகாந்தன் சொன்னார்: 'இலக்கணத்தை முதலில் கற்றுக்கொள்ளுங்கள், அதற்குப் பிறகு மீறுங்கள்' என்று. நான் செந்தமிழ்க் காவலர் சி.இலக்குவனாரிடம் தொல்காப்பியம் கற்றவன்; பைந்தமிழ்க் காவலர் அ.கி.ப அவர்களிடம் யாப்பிலக்கணம் கற்றவன். எனினும் இலக்கணம் உள்ள இந்தக் கவிதைகளிலும் சில மீறல்கள் உண்டு. கவிதை

நலன் கருதி பல இடங்களிலும் குற்றியலுகரம் பற்றிக் கவலைப்படாமல் விட்டிருக்கிறேன். சில இடங்களில் சந்தங்கள் தடுமாறும். காட்டாக, 'பிணம் என்று பெயர் சூட்டு' என்னும் கவிதையில் 'தந்து தடுமாறும்' என்னும் சொல்லாட்சி.... வேண்டுமென்றே சந்தம் 'தடுமாறச்' செய்தேன். மரபும் சில இடங்களில் மீறப்பட்டிருக்கும்.

இந்த மீறல்கள் தாம் எனக்குப் புதுக்கவிதைப் பக்கம் போகத் துணிச்சலைத் தந்தன.

○

கவிக்கோ அப்துல் ரகுமான் என் வலதுகண். கவிஞர் சிற்பி என் இடது கண். தம்பி இன்குலாப் என் இடது கை. தம்பி காமராசன் என் வலது கை. தம்பி பாலாவும் தம்பி மேத்தாவும் என் இதயத்தின் இருபக்கம். கவியரசு வைரமுத்து, கவிஞர்கள் தமிழன்பன் பி.சிதம்பரநாதன், முருகுசுந்தரம், அபி தேனரசன், புவியரசு, தமிழ் நாடன், தணிகைச் செல்வன் இந்திரன்,காசி ஆனந்தன், நவகவி, கல்யாண்ஜி, கலாப்ரியா, கந்தர்வன், அறிவுமதி, வெ.சேஷாலம், க.வை.பழனிசாமி, நாஞ்சில் ஆரிது. வைகை வாணன், டி.எம்.அப்துல் காதர், இக்பால், பஞ்சு, ரவிசுப்ரமணியன், வசந்தகுமார் - இவர்கள் எல்லாம் என் அங்கங்களைப் போன்ற சகோதரக் கவிஞர்கள். இவர்கள் என்னுள் நிறைந்திருக்கிறார்கள். எனவே நான் நான் அல்ல; நான் மட்டுமல்ல. எல்லாரும் கலந்த ஓர் அவதாரம். ஆமாம்... நான் செத்தாலும் வாழ்வேன்.

○

ஒரு வேண்டுகோள்.

கனவுகளைப் படித்து என்னைப் போலவே எழுதும் புதுக் கவிஞர்களே! கனவுகளைப் படித்துக் காதற் கடிதங்கள் எழுதும் நவயுக இளைஞர்களே! இதோ உங்களுக்காக என் 'மீரா கவிதைகள்'. இதைப் படியுங்கள். இதில் உள்ள காதல் கவிதைகளிலேயே நின்றுவிடாமல்

சமூகம் சார்ந்த சிந்தனைகளையும் தமிழ்ப் பற்றையும் நாட்டுப் பற்றையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

தமிழ் ஈழம் வீறு கொண்டு வெற்றி கொண்டு நிற்கும் நேரம் இது. இந்த நேரத்தில் இந்தியத் தமிழினம் வீழ்ச்சி யுற்றுக் கிடப்பது எனக்குச் சம்மதமில்லை.

எழுந்து நில்லுங்கள். எழுச்சி கொள்ளுங்கள். புரட்சி செய்யுங்கள்.

அகரம் மீரா
2, சிவன் கோயில் தெற்குத் தெரு 1.6.2002
சிவகங்கை.

# காணிக்கை

இராஜா அண்ணாமலைச் செட்டியார் விருது பெற்ற வரலாற்றறிஞர் - தென் அமெரிக்காவின் சோழர்கள், கிழவன் சேதுபதி, மருது பாண்டிய மன்னர்கள் ஆகிய நூல்களின் ஆசிரியர் - பத்திரிகை எழுத்தாளர் - என்னை 'அறிவறிந்த' தம்பியாக்கிய காலஞ்சென்ற என் அண்ணன்

**மீ. மனோகரன்** அவர்களுக்கு.

''வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்''

- மகாகவி பாரதி.

# வெள்ளம்

*"குழந்தை குதலை*
*மொழியமிழ்து. குன்றாப்*
*பழந்தமிழும், பாட்டும்*
*அமிழ்து. தமிழ்ப்பண் அமிழ்து.*
*திங்கள் அமிழ்து.*
*திகழ்ஆவின் பாலமிழ்தே......"*

*-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.*

# அமுதத்துளிகள்

# தமிழாமோ?

திங்கள்முக மங்கைவிரல்
தீண்டித்தரும் இனிமை
தெங்கின்குலை இளநீர்ச்சுவை
தேக்கித்தரும் இனிமை
செங்கள்தரும் இனிமை நறுந்
தேமா தரும் இனிமை
எங்கள் தமி ழினிமைக்கொரு
இணையாய்வரு மாமோ?

கடலில் விளை முத்தும்நிலக்
கருவில்விளை பொன்னும்
தொடவும் முடி யாமல்முகில்
தொட்டேவிளை சாந்தும்
தொடரும்மலைக் கூட்டம்விளை
தூய்மைநிறை மணியும்
சுடரும்தமி ழுயர்வுக்கிணை
சொல்லத்தகு மாமோ?

குயிலின்மொழி குழலின்மொழி
குழந்தைமொழி கட்டில்
துயிலும்பொழு திசைக்கும் இளந்
தோகைமொழி கேட்டுப்
பயிலும் ஒரு கிளியின் மொழி
பண்யாழ்மொழி எல்லாம்
உயிரில்எம துளத்தில் உரம்
ஊட்டும்தமி ழாமோ?

# அந்தி

அடிவானம் சிரிக்கிறது! மோதி மோதி
ஆயிரமா யிரமான வாள்மு ழக்கம்
முடிவான பெருங்கலிங்கப் போர்க்க ளத்தின்
முகமாகச் சிவக்கிறது! மினுக்கும் வைரப்
பொடியான விண்மீன்ஒவ் வொன்றாய்த் தோன்றிப்
புன்னகையை விரிக்கிறது! யானைக் கொம்பு
வடிவான பிறைத்திங்கள் மேகம் கீறி
வருகிறது! வளர்கிறது! வாழ்க அந்தி!

காலைமலர் கதிரவனின் பிரிவுக் காகக்
கண்ணீரை வடிக்கிறது! காத்தி ருந்த
மாலைமலர் மாப்பிள்ளை மதியைக் கண்ட
மகிழ்ச்சியிலே சிலிர்க்கிறது! கண்ப றிக்கும்
சோலைமலர் வண்டுக்குத் தேனை ஊட்டித்
தூங்கவைக்கப் பார்க்கிறது! வனப்பு வாழும்
சேலைமலர்க் குழுஒன்று குடத்தைத் தூக்கிச்
செல்கிறது சித்திரத்தேர் போல சைந்தே!

கண்ணகிபோல் துணைபிரிந்த பாவை நெஞ்சம்
கனக்கிறது; கசக்கிறது வாடி! கெண்டைக்
கண்ணழகி மாதவியைப் போன்றாள் நெஞ்சம்
கணவன்பால் உறவாடித் தழுவிக் காதற்
பண்ணிசைத்துக் களிக்கிறது; தாய்மைப் பாடம்
படிக்கிறது! குன்றிமணிக் குரிய தான
வண்ணத்தைப் போலிரண்டு சக்தி அந்தி
வரவினிலே பிறக்கிறது! வாழ்க அந்தி!

வெயில் நின்ற காரணத்தால் வீடு தோறும்
விளக்கேற்றப் படுகிறது! பொதிகை யின்கண்
துயில்கின்ற பசுந்தென்றல் தோட்டந் தோறும்
தூதுரைக்க விரைகிறது!பள்ளி யின்கண்
பயில்கின்ற இளம்பருவச் சமுதா யம்கால்
பந்தாட்டம் முடிக்கிறது! கர்வ மிக்க
மயிலொன்று தோகைவிரித் தாடி யாடி
மதுவின்பம் கொடுக்கிறது மலையோ ரத்தே!

விழுதுவிட்டுக் குடைபோன்று விளங்கும் ஆலின்
விதைசிறிது; நிழல்பெரிதே; அதுபோல் அந்தி
பொழுதுகளில் சிறிதெனினும் அதுவ ளர்க்கும்
புகழ்பெரிதே! எழிலாக்கம் பெரிதே! நீதி
வழுதிகுலச் செங்கோலின் குளிர்ச்சி போன்ற
வளமான அந்தியர சாட்சி பற்றி
எழுதுதற்கும் இயலவில்லை; ஏதோ கொஞ்சம்
எழுதாமல் இருப்பதற்கும் இயல வில்லை!

மா.கி.தசரதனின்
'அறுவடை' இதழில் வெளிவந்தது

# வண்ண நிலவே, வரவா?

கன்னிப் பெண்ணின் கவின்நெற் றியைப்போல்
முகிழ்த்து மேலும் முயன்று முயன்று
வளர்ந்தே அவள்முக வடிவம் அடைகிறாய்;
வண்ண நிலவே வா! வா! இயற்கை
அன்னையீன் றெடுத்த அருமை மக்களுள்
உன்னைப் பார்க்கையில் உவகை வளர்க்கிறேன்.
உன்னுடன் பிறந்தவன் உண்மையில் வஞ்சிக்
குட்டுவன் போலக் கோபக் காரன்!
இளங்கோ போல இருக்கிறாய் நீ தான் -
இப்படிச் சொல்வதை இதம்தெரி யாமல்
காலை வேலைக் கார னிடம்போய்ச்
சொல்லி விடாதே; சுடுவான் என்னை!

என்ன நிலவே, எதற்குச் சிரிக்கிறாய்?
திரைப்பட நடிகையைத் தெருவில் பார்த்ததும்
முந்தி யடித்து மொய்த்துக் கொள்ளும்
விசிறிகள் போல விண்மீன் கூட்டம்
உன்னைப் பார்த்ததும் ஓடோடி வந்து
கண்ணடிப் பதனைக் கண்டா சிரிக்கிறாய்?

அந்தியில் கிடைக்கும் ஆனந்த விருந்தே!
இருட்டுப் பிணியை விரட்டும் மருந்தே!
எப்படி எப்படி யெல்லாம் உன்னைப்
புகழ்கின் றார்கள் பூமியில் தெரியுமா?

இந்தியா வென்றோ இங்கிலாந் தென்றோ
வேற்றுமை பாரா தெங்கும் வெளிச்சம்
இறைத்து வையகம் இணைப்பதால், நீஓர்
பொதுமை விரும்பியாம்! புதுமை விரும்பியாம்!
தொடமுடி யாத தும்பைப்பூத் திரளாம்!
பணவெறி படைத்தோன் பைக்குள் வராத
வெள்ளிக் காசாம்! விண்மீன் மாணவர்
பள்ளிக் கூடப் பாடம் படிக்க
ஏற்றிவைத் திருக்கும் இரவுத் தீபமாம்!
மண்மங் கைதன் மருத முகத்தின்
அழகைப் பார்க்கும்கண் ணாடியாம்! குழந்தை
அன்னை யிடத்தில் அடம்பிடித் தழுதே
வீசி யெறிந்த வெள்ளை அப்பமாம் -
விதவிதப் புனைந்துரை! விதவிதப் புகழுரை!
காலம் தோறும் கவிஞர் பரம்பரை
பாடி வழங்கும் பாராட்டுப் பத்திரம்
கொஞ்சமா உனக்குக் கூறு, நிலாவே?

தடைகூ றாமல் தருவாய் என்றுநான்
எதிர்பார்த் துன்னிடம் இதனைக் கேட்கிறேன்
ஆகாயக் குளத்தில்நீ ராடும் அன்னமே!
மாலைசூ டாத மங்கையே! எனக்கொரு
முத்தம் கொடு... ஒரு முத்தம்.... ஏ!ஏ!

முத்தம் என்றதும் முயல்வே கத்தில்
ஓடவா பார்க்கிறாய்? ஒளியவா பார்க்கிறாய்?
கூடாது.... முத்துக் குடையே! கொஞ்சிக்
கூடாது பிரியக் கூடாது! சற்றே
இரு!இரு! என்றன் இருவிழி யைப்பார்!
பருவத் தால்நான் படும்பாட் டைப்பார்!
உருவம் மெலிந்தே உள்ளேன்! என்னைக்
கொஞ்சம் கவனி, கொய்யாப் பழமே!
துயரை மறக்கத் துணைசெய்; வரவா?
சம்மதம் தானா? ''சரி'' சொல்! உன்னை
எட்டிப் பிடிக்கவா? இதயங் குளிரக்
கட்டிப் பிடிக்கவா? களிக்கவா நிலாவே?

# காக்கைக்கு.....!

தன்சாதி என்று தமிழ்க்கவிஞன் பாரதியும்
உன்சாதி யைக்கண்(டு) உவகையுடன் பாட வைத்தாய்;
பாடத் தெரியாப் பறவையே! காக்கையே!
காடு மலையெங்கும் கண்டபடி சுற்றிப்பின்
பாட்டுக் கலைஞானப் பண்டிதன் நான் வாழுகின்ற
வீட்டுச் சுவர்மீது வேந்தனைப்போல் வீரமுடன்
வந்தே அமர்கின்றாய்; வந்தவே கத்தில்நீ
முந்தி எழுப்புகின்றாய் காகா எனும்முழக்கம்!

□

என்ன கருத்தில் நீ காகாகா என்கின்றாய்?
'என்னைக்கா' என்றோ இயம்புவாய்? மாட்டாயே!
எண்ணம் புரிகிறது; சூழ்ந்துவரும் ஏழ்மையினால்
உண்ண உணவின்றி வாடும் உயிர்களைத்தான்
கா என்பாய் போலும்! கவிதைத் திருநாட்டைக்
கா என்பாய் போலும்! கருங்குயிலின் அண்ணனே!

நீ நன்றாய்ச் சொல்கின்றாய்; நீ வாழ்க! உன்கருத்தை
என்மக்கள் உணர்ந்தே எழும்நாள்தான் எந்நாளோ?
பொன்னாள், புதுநாள் புவனத்தில் அந்நாளே!

□

தான்மட்டும் தின்கின்ற தன்னலமில் லாததனால்
வான்தொட்டு மீள்கின்ற வல்லமைநீ பெற்றாயோ?
உன்னைக்கண் டிந்த உலகம் திருந்தாதா?
என்ன உலகம் - இதில்நான் பிறந்தேனே....!

□

அன்னத்தைத் தூதாய் அனுப்பினனாம் ஓர் அரசன்;
உன்னை நான் தூதனுப்ப உத்தேசம்; நீ உதவு!
சேரி குறைவற்ற சென்னையில் என்இன்ப
வாரிதியாள் ஏக்கம் வளர்ப்பாள்; அவளிடம் 'உன்
சிந்தைக் குரியான் சிவகங்கை யில் இருந்து
வந்துகொண் டுள்ளான்; வருந்தாதே;' என்று நீ
கூறு! புறப்படு! கூறினால் கூட்டோடு
சோறு படைப்பாள், சுவை!

# ஆ!

பசும்புல்லை மேய்வதனால் என்னை நீங்கள்
பசுஎன்பீர்; என்பேரோ கார ணப்பேர்!
முசுகுந்தன் முன்னோனாம் மனுவின் மைந்தன்
முறைதவறித் தேரோட்டி என்னி னத்தின்
சிசுமாய்த்தான்; ஆராய்ச்சி மணிய டித்தேன்;
செவியுற்ற சோழன்ஓ டோடி வந்தான்;
பசுவாஆ ராய்ச்சிமணி யடித்த தென்று
பார்த்தே 'ஆ'! என வியந்தான்; ''ஆ'' ஆனேன் நான்!

பெண்பால் நான்! என்பாலை உண்டே நீங்கள்
பெரும்பாலும் உரங்காண்பீர்! நீங்கள் தாய்ப்பால்
உண்பதெலாம் ஒருபருவம்; ஆனால் என்பால்
உயிர்போகும் வரைபருகி வருவீர்! இந்தப்
பண்புணர்ந்தே குறளுக்கு 'முப்பால்' என்று
பழந்தமிழர் பெயரிட்டார். ஆனால் இன்று
பண்பாட்டில் மிகமட்டம் நீங்கள்; கன்று
பால், கூடக் குடிப்பதற்கு விடுகின் றீரா?

தமிழ்நாடு
14.10.62

# பெண்ணாகப் பிறந்தேனா?

பிறந்ததுதான் பிறந்தேன் நான்
பெண்ணாகப் பிறந்தேனா?

துகிலுக்குள் மூடுபடாத்
தூயமுகம் காட்டித்தான்
முகிலுக்குள் போய்நிலவை
முகம்மூடச் சொன்னேனா?
பிறந்ததுதான் பிறந்தேன் நான்
பெண்ணாகப் பிறந்தேனா?

முள்ளில்லாத முல்லைப்பூ
முறுவலிக்கும் போதில்என்
வெள்ளைப்பல் வெளிச்சமிட்டு
'வெவ்வெவ்வே' என்றேனா?
பிறந்ததுதான் பிறந்தேன்நான்
பெண்ணாகப் பிறந்தேனா?

தீந்தேனைச் சிந்துகின்ற
தென்னாட்டுப் பூக்களைஎன்
கூந்தலிலே சிறைவைத்துக்
குதூகலம்தான் அடைந்தேனா?
பிறந்ததுதான் பிறந்தேன் நான்
பெண்ணாகப் பிறந்தேனா?

பலாச்சுளைபோல் மின்னும்என்
பாதநடம் பார்த்துமயில்
கலாபத்தை விரித்தாடக்
கற்றுத்தான் கொடுத்தேனா?
பிறந்ததுதான் பிறந்தேன்நான்
பெண்ணாகப் பிறந்தேனா?

மரக்கிளையில் அமர்ந்திருக்கும்
மாங்குயில்கள் மயக்கும்என்
குரல்கேட்டுப் பின்கூவக்
குருவாய்நான் ஆனேனா?
பிறந்ததுதான் பிறந்தேன்நான்
பெண்ணாகப் பிறந்தேனா?

நள்ளிரவு நாடகத்தின்
நகைச்சுவையாய் வந்துதித்த
பிள்ளைக்குப் பாலூட்டும்
பெரும்பேறு பெற்றேனா?
பிறந்ததுதான் பிறந்தேன்நான்
பெண்ணாகப் பிறந்தேனா?

'தமிழ்நாடு' நாளிதழில்
வெளிவந்தது
*14.10.63*

# எனக்கிருக்கும் ஆசையெல்லாம்....!

அவன்:-

எனக்கிருக்கும் ஆசையெல்லாம் இதுதான்: கண்ணே!
எள்ளளவும் மாசில்லாப் பொன்னால் செய்த
வனப்புள்ள சங்கிலியை வாங்கி உன்றன்
வாசச்சந் தனக்கழுத்தில் போட வேண்டும்;
பனிமலரே, நீ மிகவும் கவர்ச்சி யாய் என்
பக்கத்தில் வந்தமர வேண்டும்; அந்தத்
தனியழகை நான் உண்ண வேண்டும்; உம்.... உம்...
தைமாதம் பிறக்கட்டும்; வழிபி றக்கும்!

எனக்கிருக்கும் ஆசையெல்லாம் இதுதான்: கண்ணே!
எப்படியும் பளபளக்கும் பட்டுச் சேலை
உனக்கொன்று வாங்கிவந்து கொடுக்க வேண்டும்;
ஒளிவிடியல் அமைதியைப்போல் திகழும் நீ, உன்
இனிக்கின்ற உடலிலதை அணிந்து கொண்டே
என்எதிரில் வந்துநிற்க வேண்டும்; அந்தத்
தனியழகை நான்சுவைக்க வேண்டும்; உம்.... உம்...
தைமாதம் பிறக்கட்டும்; வழிபி றக்கும்!

எனக்கிருக்கும் ஆசையெல்லாம் இதுதான்; கண்ணே!
என்கையில் பணம்நிரம்ப இருக்க வேண்டும்;
உனை அழைத்துக் கொண்டு நகர்ச் சந்தைக் குப்போய்
உனக்குமிகப் பிடித்தமுள்ள பொருள்கள் எல்லாம்
கனிவோடு நான் வாங்கிக் கொடுக்க வேண்டும்;
கண்களினால் நீ சிரிக்க வேண்டும்; அந்தத்
தனியழகை நான்பருக வேண்டும்; உம்....உம்....
தைமாதம் பிறக்கட்டும்; வழிபி றக்கும்!

அவள்:-

எனக்கிருக்கும் ஆசையெல்லாம் இதுதான்..- அத்தான்!
இருவிழிக்கும் இருகைக்கும் இருதோள் கட்கும்
நினைக்கமுடி யாஇன்பம் அளிக்கும் பேசும்
நிலாப்பிஞ்சைப் பெற்றெடுக்க வேண்டும்; அன்பு
மனம்துள்ளப் பாலூட்ட வேண்டும்; என்றன்
மார்புக்கும் மதிப்புவர வேண்டும்; அந்தத்
தனியழகில் நாம் மயங்க வேண்டும்; உம்.... உம்....
தைமாதம் பிறக்கட்டும்; மகன் பிறப்பான்!

'தமிழ்நாடு'
ஞாயிறு மலர்

# பிள்ளைத் தமிழ்

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
ஈரைந்து மாதங்கள் என்வயிற்றுக் குள்ளொளிர்ந்த
ஈர நிலவே! எழிலமுதே! வாழ்விக்கும்
பொன்னிக் குளிர்நீரே! பொற்சுடரே! நெஞ்சத்தில்
மின்னித் திரிகின்ற மின்மினியே! கண்மணியே!
சங்க இலக்கியத்தின் சத்தெல்லாம் சேர்ந்திருக்கும்
அங்கம் படைத்திருக்கும் ஆணழகே! நாட்டின்
உடைமை பொதுவாக்க உண்மை வளர்க்க
மடமையைச் சாதி மதவெறியை மாய்த்தொழிக்க
வந்த அடலேறே! வள்ளல் வழிவழியே!
எந்தைக்குப் 'பாட்டன்' எனும்பெருமை தந்தவனே!
'அப்பா' என நாளும் அண்ணாந்து வாய்திறந்து
தப்பா தளிக்கும் தனிப்பட்டத் தின்முன்
கலைஞர் உயர்கவிஞர் கேட்டார்ப் பிணிக்கும்
வலைஞரெனத் தேடிவரும் பட்டம் வெறும்பட்டம்
என்றுனது தந்தைக்(கு) எடுத்தியம்ப வந்தவனே!
இன்று நீ ஏனழுதாய்? என்னுயிரே ஏனழுதாய்?

அம்மா நான் தொட்டிலினை ஆட்டியவா றிங்கிருக்க
சும்மா அழலாமா, சோலைப் பசுங்கிளியே?
மின்னற் கொடியே! சூல் மேக முதல்மழையே!
சின்னக் குரல்நோகச் சித்திரமே, ஏனழுதாய்?
அன்பால் உலகத்தை ஆளப் பிறந்தவனே!
பண்பால் வளர்ந்த பழங்குடியில் தோன்றியஉன்
தாய்ப்பால் குறைந்ததனால் தஞ்சைப் பசுவிடத்தில்
போய்ப்பால் கறந்து புதுச்சங்கிற் போட்டளிக்க
அப்பால் கசக்குமென அன்பே, அழுதாயோ?
முப்பால் விரும்பி முறையிட் டழுதாயோ?
வெம்புலியை வென்று விளையாட வந்தவனே?
அம்புலியைக் கேட்டே அடம்கொண்ட ழுதாயோ?
பாண்டிப் பெருவேந்தர் பட்டத்து யானையினை
வேண்டித் திருவிளக்கே, விம்மி அழுதாயோ?
சோழக் குலமன்னர் கொற்றக் குடை நாடி
வாழைப் பசுங்கன்றே, வாடி அழுதாயோ?
சேரர் மரபுதித்த செம்மல் கரம்பிடித்த
வீரத் திருவாள் விரும்பி அழுதாயோ?
வாய்வயிற்றைக் காப்பதற்கே வாழும் மனிதரிடைத்
தாய்மொழியைக் காப்பதற்கும் தன்மானம் காப்பதற்கும்
நல்லவர்கள் தீக்குளித்து நாடாண்ட நந்திவர்மப்
பல்லவனாய் மாறியதைப் பார்த்தே அழுதாயோ?
என்ன நினைத்தழுதாய்? என்னிடத்தில் சொல்கண்ணே!
என்ன விரும்பிடினும் எப்படியும் நான்கொடுப்பேன்!
கூடல் நகரெனினும் வாங்கிக் கொடுப்பேனே!
தேடக் கிடைக்காத் திரவியமே, கண்வளராய்!
அம்மான் மகளான அவ்-அம்மான் குட்டியினைப்
பெம்மான் உனக்குமணம் பேசிடுவேன் கண்வளராய்!

'அறுவடை'

# வையை

நிருவாண மாய்க்கிடந்தாய் வையை! - இன்று
நீர்ச்சேலை அணிந்துள்ளாய்; நன்றுன் செய்கை!
வருமான மில்லாமல் நின்றாய் - இன்று
வள்ளல்போல் வாரிநீ வழங்கு கின்றாய்!

மாமதுரைப் பதிகண்ட கொடையே! - தீய
வறுமைத்தீக் கேள்விக்கு வாய்த்த விடையே!
தேமதுரத் தமிழ்நாட்டின் மறத்தை - இன்று
தெரிவிக்கக் காட்டினையோ சிவப்பு நிறத்தை?

கோடிப்பூ மாநாட்டு மேடை! - உன்றன்
கொடும்பகைவன் யார்? சொல்ல வா, நான் - கோடை
வாடிப்போ கும்பிள்ளைப் பயிரும் - இனிநீ
வார்க்கின்ற நீர்ப்பாலால் வளரும்; உயரும்!

புதுவெள்ளப் பெருக்குக்கு நன்றி - உன்னால்
புதுஇன்பம் காண்கின்றேன் கவலை யின்றி
மதுஉள்ளம் கவின்காணும் நேரம் - என்றன்
மனம்ஊறும் பாட்டாறும் உனையே சேரும்!

***1961***

***மதுரைத் தியாகராசர் கல்லூரி***
***விடுதியிலிருந்து வைகையில்***
***வெள்ளம் வரப் பார்த்து எழுதியது***

# ஏற்றம் காண்போம்!

பொன்ஏற்றம் அறிந்திடநாம் உரைக்க வேண்டும்;
புகழ்ஏற்றம் பெற உழைக்க வேண்டும்; இந்த
மண்ஏற்றம் அடைந்திடத்தான் வேண்டு மென்றால்
மறத்தமிழர் வேற்றுமையை அணைத்தி டாமல்
தன்ஏற்றம் தன்இன்பம் நினைத்தி டாமல்
தமிழ்ஏற்றம் தனைப்பெரிதாய்க் கருத வேண்டும்!
முன்னேற்றம் தமிழ்பெற்றால் பின்னர் அந்த
முன்னேற்றம் தமிழனுக்கும் சொந்த மாகும்!

சிங்கத்தின் பிடரியினைப் பிடித்து ஆட்டிச்
செயங்கொண்ட புகழ்பிறர்க்கும் உண்டு; மின்னும்
அங்கத்தில் விழுப்புண்ணைப் பெற்று வெற்றி
அடைந்த புகழ் பிறர்க்குமுண்டு; திரைகி ழிக்கும்
வங்கத்தில் ஏறிப்போய் வாணி கத்தின்
வளங்கண்ட புகழ்பிறர்க்கும் உண்(டு) ஆனால் முச்
சங்கத்தை வைத்துமொழி வளர்த்த மாட்சி
சரித்திரத்தில் பிறரெவர்க்கும் உண்டா? சொல்வீர்!

பயிற்சிமொழி ஆங்கிலம்தான் கலைச்சொல் ஒன்றும்
பைந்தமிழில் இல்லையெனச் சொல்வோர் மூடர்
உயிர்ச் சிறகை விரிக்காமல் பறவை கூட
உயரத்தில் அழகாகப் பறப்ப துண்டா?
தயிர்கடைய மாட்டாத போது வெண்ணெய்
தானாகத் திரண்டுவந்து நிற்ப துண்டா?
முயற்சிசெய்தே கலைச் சொற்கள் உருவாக் காமல்
முத்தமிழை இகழ்வதிலே அர்த்தம் உண்டா?

தலைவியினை அழைத்துவந்து வருத்தம் நீக்கும்
தாதிக்கு வாழ்த்துரைப்போன் போல, என்ன
தலைவிதியோ, சில தமிழர் பிறமொ ழிக்குத்
தாளமிட்டு வாழ்த்துரைக்க லானார்; வாழை
இலைவிருந்தைப் பெற்றுள்ளோன் மந்தி யைத்தன்
எதிரினிலே இருக்கவைத்தால் என்ன மிஞ்சும்?
சிலையினிலே சேறள்ளிப் பூசும் செய்கை;
செந்தமிழைப் புறக்கணிக்கும் சிறியர் செய்கை!

திரைப்படத்தில் நாடகத்தில் இன்றுங் கூட
தேர்ந்த தமிழ் வளரவில்லை. காசுக் காக
கரைகாணாக் கடல் போன்ற தமிழை விற்க
கருதல் ஏன்? கெடுதல் ஏன்? களங்கம் ஏன் ஏன்?
தரையுலக, வானுலகச் செய்தி யாவும்
தவறாமல் விரைந்தளிக்கும் நாளி தழ்கள்
அரைகுறையாய்த் தமிழினிலே எழுது தல்ஏன்?
அன்னத்தின் மேல்அம்பை எறிதல் ஏன்? ஏன்?

தமிழ்வாழத் தமிழ்ப்புலவன் குடும்பம் வாழத்
தலைகொடுக்க முனைந்திட்ட குமண மன்னன்,
தமிழ்வாழத் திடமாக ஔவை வாழத்
தனிநெல்லிக் கனிதந்த தகடூர் வேந்தன்
தமிழ்வாழக் கலம்பகமும் நிலைத்து வாழத்
தன்னுயிரைக் கொடுத்திட நந்தி போன்றோர்
தமிழ்வாழத் தமிழோடு சேர்ந்து வாழும்
சாகாத நிலைகண்டார்! ஏற்றங் கொண்டார்!

ஒன்றேனும் மனம்பற்றாச் சமணப் பள்ளி
உட்புகுந்தும், துறவிருந்தும், பசுவை நாடும்
கன்றாகத் தமிழ்ப்பற்றுக் கொண்டார் வஞ்சிக்
காவலனின் ஒருதம்பி! இறைவன் தன்னை
நன்றாகத் தமிழ்செய்யப் படைத்தான் என்றார்
நற்சைவத் திருமூலர்! விளக்கி ருக்கும்
குன்றாகத் தமிழ்திகழ வேண்டு மென்றால்
குருதியிலே அவர்உணர்ச்சி பாய வேண்டும்!

உமையாளைச் சிவபெருமான் தன்னு டம்பின்
ஒருபாதி வைத்திட்டான்; கல்வி மாதாய்
அமைந்துள்ள வாணியினை அயன்தன் நாவில்
அமர்த்திக்கொண் டான்என்பர்! தமிழர் நாமும்
இமைதீய்க்கும் கண்ணீரை வழியச் செய்யும்
இடர்என்ன வந்தாலும், அசைந்தி டாத
இமயம்போல் செந்தமிழை இதயம் வைத்தே
இன்றைக்கும் என்றைக்கும் போற்ற வேண்டும்!

மறைமலையும் பசுமலையும் மீண்டும் இந்த
    மண்ணிலொரு முறைதோன்ற வேண்டும்! தூய
இறைநிலையை இயற்கையிலே காட்டி, முத்து
    எண்ணங்கள் சிந்தனைகள் நல்கிச் சென்ற
நிறைமதியாம் திரு.வி.க. மீண்டும் இங்கே
    நிச்சயமாய்த் தோன்றத்தான் வேண்டும்! தீய
குறைமதியோர் மொழிக்கலப்பைக் கண்டே உள்ளம்
    கொதித்தெழுந்த மாற்கலைஞன் பிறக்க வேண்டும்!

எட்டடுக்கு மாளிகையில் வாழ்ந் திருத்தல்,
    இராப்பொழுதில் பஞ்சணையில் படுத்தி ருத்தல்,
பட்டுடுத்தல், சுவையான உணவை உண்டே
    பசியாறி அமர்ந்திருத்தல், காதற் பெண்ணைத்
தொட்டணைத்தல் எல்லாமே உடலுக் கின்பம்;
    தொல்தமிழ்தான் உயிர்க்கின்பம்! தமிழின் வீரக்
கொட்டுமுர சறைவோம்நாம்! விரைவில் வெற்றிக்
    கொடிபறக்கச் செய்வோம்நாம்! ஏற்றம் காண்போம்!

அழகப்பர் கல்லூரி மலர்

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்"

- திருவள்ளுவர்

# தேன் துளிகள்

# தீயும் குளிரும்....

காயும் கனியும் - உன்
கைவிரல் மெல்லத் தொட்டால்;
தீயும் குளிரும் - உன்
தேனகைத் தூற்றல் பட்டால்!

கல்லும் உருகும் - உன்
கள்ளிசை பருக லுற்றால்;
புல்லும் மணக்கும் - உன்
பூவடி பொருந்தப் பெற்றால்!

# முடியுமா?

தொலைவில் பூத்துக் தொங்கும் பரிதியைத்
தொட்டுப் பார்த்திட முடியுமா?
தும்பிவாய்ப் படாத தூயவிண் மலர்களைத்
தொடுத்துக் கட்டிட முடியுமா?
கலைவான் வில்லின் கவினைக் கையால்
கட்டிப் பிடித்திட முடியுமா?
கரும்பே! காதல் மலர்ந்தென்? உன்னைக்
கடிமணம் புரிந்திட முடியுமா?

ஊமை ஒருவன் உயிர்ப்பண் பாடிட
உலகில் என்றும் முடியுமா?
ஒருகால் கூட இல்லோன் இமயத்(து)
உச்சியில் ஏறிட முடியுமா?
சீமைப் பயணம் செய்திட ஏழைச்
சிறுவன் நினைத்தால் முடியுமா?
சிலையே! சிந்தை கலந்தென்? உன்னைச்
சேர்ந்திட என்னால் முடியுமா?

வித்தில் லாதோன் நிலத்தை உழுதென்?
விளைவைக் காண முடியுமா?
விரல்இல் லாதோன் விருப்பங் கொண்டென்?
வீணை இசைத்திட முடியுமா?
சொத்தில் லாதோன் சுகத்தின் உருவகச்
சொர்க்கம் அடைந்திட முடியுமா?
சுடரே! ஆசை வளர்ந்தென்? உன்னைச்
சொந்தம் ஆக்கிட முடியுமா?

'தமிழ்நாடு'
நவம்பர், 11, 1962.

# என்னடி செய்வாய்?

என்னைப் பார்த்திட வேண்டாம் போங்கள்
என்றே பிணங்கும் பெண்ணே!
இன்துயி லாய்உன் கண்ணிற் புகுந்தால்
என்னடி செய்வாய் கண்ணே!

என்னை நினைத்திட வேண்டாம் போங்கள்
என்றே ஊடும் பெண்ணே!
இன்பக் கனவாய் இரவில் வந்தால்
என்னடி செய்வாய் கண்ணே!

என்னைத் தொடர்ந்திட வேண்டாம் போங்கள்
என்றே ஓடும் பெண்ணே!
இனிக்கும் தேனாய் இதழில் விழுந்தால்
என்னடி செய்வாய் கண்ணே!

என்னை நெருங்கிட வேண்டாம் போங்கள்
என்றே முறைக்கும் பெண்ணே!
இருள்வண்டாய் உன் கூந்தல் நுழைந்தால்
என்னடி செய்வாய் கண்ணே!

என்னைத் தழுவிட வேண்டாம் போங்கள்
என்றே திமிரும் பெண்ணே!
இளமென் காற்றாய் மேனியைத் தொட்டால்
என்னடி செய்வாய் கண்ணே!

# எப்படி இருப்பவளோ?

என்னை மணக்கப் போகிறவள்
எங்கே இருப்பவளோ?
இதயம் குடிவரப் போகிறவள்
எப்படி இருப்பவளோ?
(என்னை.....)

புன்னை மரத்தில் பொன்போல் மின்னும்
பூவாய் இருப்பவளோ?
புலரும் வைகறைப் பொழுதில் படிந்த
பொலிவாய் இருப்பவளோ?
தென்னை நிறைந்த கேரள நாட்டின்
செழிப்பாய் இருப்பவளோ?
தித்திப் புத்தரும் கோவைப் பழம்போல்
சிவப்பாய் இருப்பவளோ?
(என்னை.....)

செவியில் அமுதம் பொழியும் பிள்ளைச்
சிரிப்பாய் இருப்பவளோ?
சிந்தை கவரும் மல்ல புரத்துச்
சிலையாய் இருப்பவளோ?
கவியின் இளமைக் காலக் கனவின்
களிப்பாய் இருப்பவளோ?
கார்கா லத்தின் நீர்மே கம்போல்
கறுப்பாய் இருப்பவளோ?
(என்னை.....)

# கள்வன்?

கிண்ணம் போல் காட்சிதரும் கமலப் பூவைக்
கீழ்த்திசையோன் முத்தமிடும் நேரம், பாலின்
வண்ணம்போல் மின்னுமுடை கழற்றி வைத்து
வனப்பொய்கை குளித்தேன் நான்; ஆயர் பாடிக்
கண்ணன்போல் கரையிலவன் தோன்றக் கண்டே
'கள்வ'னெனப் பேரோசை எழுப்ப நெஞ்சில்
எண்ணமிட்டேன் இமைப்பொழுதில்; ஆனால் யாரும்
எடுத்தபொருள் எதுவென்றால் என்ன சொல்வேன்?

கீச்சலிடும் கிளிவாய்க்குப் பலியா காமல்
கிளைதொங்கும் பழங்காக்கக் கதிரோன் மேற்கில்
மூச்சுவிடும் நேரத்தில் தோட்டம் சென்றேன்;
முள்வேலி ஓரத்தில் ஒதுங்கி நின்றே
ஆச்சரியப் பிறவியென என்னை நோக்கி
அவன்மெல்ல நடைபோடக் 'கள்வன்' என்று
கூச்சலிட நினைத்தேன் நான்; ஆனால் யாரும்
கொய்தபொருள் எதுவென்றால் என்ன சொல்வேன்?

சிறைச்சாலை விட்டுவரும் தியாகி போலச்
செறிமுகிலைக் கிழித்துநிலாக் கிளம்பும் நேரம்,
இறைவனுக்கு விழா வெடுத்தார் ஊரார்! மேனிக்(கு)
ஏற்ற உடை, தங்க நகை அணிந்து கொண்டே
நிறைகூட்டம் போய்நின்றேன்;எதிரில் வந்தே
நெடுங்குன்றாய் அவன் நிற்கக் 'கள்வன்' என்று
பறைசாற்றப் பார்த்தேன் நான்; ஆனால் யாரும்
பறித்தபொருள் எதுவென்றால் என்ன சொல்வேன்?

இடுகாட்டின் அமைதியிலே வையம் மூழ்கி
இளைப்பாறும் - உயிர்யாவும் உறக்கங் கொள்ளும்
நடுநிசியில் தூங்கிக்கொண் டிருந்த போது
நலியாமல் அவன் வந்து கவிதை மேனி
தொடக்கண்டேன்; கண்திறந்தேன்; கனவில் வந்தே
தோன்றிப்பின் அவன்மறையக் 'கள்வன்' என்று
கடுஞ்சத்த மிடத்துணிந்தேன் ! ஆனால் யாரும்
கவர்ந்தபொருள் எதுவென்றால் என்ன சொல்வேன்?

'தமிழ்நாடு'

# குறைப்பிறவி!

நித்திரை யின்றி உணவுமின்றி - மன
  நிம்மதி யின்றிப் பொலிவிழந்து - துயர்ச்
சித்திரம் போலப் படுக்கையிலே - அவள்
  சேர்ந்திருக்க - முகம் சோர்ந்திருக்கக் - கண்டு
பத்தரை மாற்றுப் பசும்பொன்னின் - உடல்
  பற்றிய நோயினைப் போக்கிடவே - ஒரு
வைத்திய னாய்நான் பிறந்தேனா? - அவள்
  வாச மலர்க்கை பிடித்தேனா?

ஆதிரை போலவே கண்ணழகும் - இடை
  அசையும் அழகும் நடையழகும் - கொண்ட
மாதிடம் சென்று நெருங்கிநின்றே - 'உன்றன்
  மனத்துக் கவலை மடிந்துவிடும் - அடி
நீ, திட மாயிரு உன்கனவு - இனி
  நிச்சயம் வென்றிடும்' என்றிடவே - ஒரு
சோதிட னாய்நான் பிறந்தேனா? - அவள்
  சுந்தரப் பொற்கை பிடித்தேனா?

விண்ணைக் கிழித்திடும் மின்னல்நிறம் - பகல்
மேக நிறம் அந்தி வானநிறம் - இரு
கண்ணைக் கவர்ந்திடும் கிள்ளை நிறம் - தேக்கு
காட்டும் நிறம்செந்நெற் காட்டுநிறம் - சோலை
வண்டு நிறம் இன்னும் என்னென்னவோ - நிறம்
வாய்த்த வளைகாட்டிப் போட்டிடவே - அவள்
வண்ணக் கரத்தைப் பிடித்தேனா? - ஒரு
வளையல் காரனாய் வந்தேனா?

என்ன பிறப்படா என்பிறப்பு! - சே! சே!
என்ன பிழைப்படா என்பிழைப்பு! - சுவைக்
கன்னற் கவிதை மொழியுடையாள் - துள்ளும்
கயலைப் பழிக்கும் விழியுடையாள் - அந்த
அன்னம் அருகினில் போயமர்ந்து - மின்னும்
அழகுக் கரம்தான் பிடித்தேனா? - தினம்
என்னை மறந்து களித்தேனா? - நான்
ஏற்ற பிறவி எடுத்தேனா?

இது நாட்டுப்பாடல் ஒன்றின் தழுவல்
'தமிழ்நாடு'
டிசம்பர் 1963

# பிடிக்குமா?

மான்பிடித்த மானதென்றும் முகில்கண் டாடும்
   மயில்பிடித்த மானதென்றும் தொங்கும் கொம்புத்
தேன்பிடித்த மானதென்றும் விழாவில் பொங்கல்
   தினம்பிடித்த மானதென்றும் கனியில் வாழை
தான் பிடித்த மானதென்றும் உயிர் இயக்கும்
   தமிழ்பிடித்த மானதென்றும் சொன்னா யாமே....
மீன்பிடித்த கண்மாய்போல் ஆனேன்; காதல்
   வேர்பிடித்த எனைப்பிடிக்க வில்லை யாசொல்?

யாழ்பிடித்த மாதவியின் கைப்பி டித்தே
   இசைமகளை ஈன்றெடுத்த சிலம்புச் செல்வன்
ஊழ்பிடித்த தால்மாண்டான் என்னும் நூலே
   உளம்பிடித்த நூலென்றும் வானம் போற்றிக்
கூழ்பிடித்த தெனமகிழ்ந்து குடித்து ழைக்கும்
   குடிபிடித்த குடியென்றும் சொன்னா யாமே....
பாழ்பிடித்த அரண்மனைபோல் ஆனேன்; காதற்
   பசிபிடித்த எனைப்பிடிக்க வில்லை யாசொல்?

விழிபிடித்த அல்லியினைத் திங்கள் தீண்டும்
    விதம்பிடித்த மானதென்றும் கிள்ளை பேசும்
மொழிபிடித்த மானதென்றும் நளின மான
    முயல்பிடித்த மானதென்றும் குறள்நூல் காட்டும்
வழிபிடித்த மானதென்றும் திருக்குற் றால
    வளம்பிடித்த மானதென்றும் சொன்னா யாமே....
குழிபிடித்த யானையைப்போல் ஆனேன்; காதற்
    குறிபிடித்த எனைப்பிடிக்க வில்லை யாசொல்?

நகைபிடித்த மானதென்றும் மழலை சிந்தும்
    நகைபிடித்த மானதென்றும் காஞ்சிப் பட்டு
வகைபிடித்த மானதென்றும் நெய்யில் சுட்ட
    வடைபிடித்த மானதென்றும் வெள்ளை முல்லை
முகைபிடித்த மானதென்றும் அந்தி மங்கை
    முகம்பிடித்த மானதென்றும் சொன்னா யாமே....
புகைபிடித்த ஓவியம்போல் ஆனேன்; காதற்
    புதிர்பிடித்த எனைப்பிடிக்க வில்லை யாசொல்?

தமிழ்நாடு
30-9-62

# அங்கே..... ஆனந்தம்!

'பாரிக்குத் தோழன் யான்' எனப்பெருமை யோடு
பக்கத்தில் வீற்றிருந்த புகழ்க்கபிலர் உள்ளம்
பூரிக்கத் தீட்டிவைத்த பாட்டொன்றி லிருந்து
புறப்பட்டு வருவதைப் போல் வருகின்ற பெண்ணை
ஏரிக்குப் பக்கத்தில், ஒளியழகன் குன்றில்
இளைப்பாறும் நேரத்தில் வெகுநாளாய்க் கண்டே
மாரிக்கு முன்நெகிழும் மண்ணைப்போல் என்றன்
மனம்நெகிழ்ந்தேன்; மதுமயக்கம் கொண்டிருந்தேன் ஓர்நாள்...

''சந்திரனைப் படைத்துப்பின் இயற்கையெனும் சிற்பி
சரியில்லை இதுவென்று விட்டெறிந்து நன்றாய்ச்
சிந்தித்து மிகமுயன்று படைத்தளித்த அழகின்
திரட்டே! நீ கிடைத்தால் நான் பணக்காரன் வீட்டுப்
பந்தியிலே இருந்துண்ண இடம் கிடைத்தால் மகிழும்
பசிகாரன் போல் மகிழ்வேன்; கிடைப்பாயா''? என்றேன்
முந்தியெழும் பெருமூச்சை உள்ளடக்கித் துன்ப
முத்திரையை வெளிக்காட்டிக் கனி உதட்டைத் திறந்தாள்:

''கலையழகுச் சித்திரம்போல் கண்கவரும் உம்மைக்
கைப்பிடிக்கக் கடல் அளவு ஆசைதான் - ஆனால்
மலையாள மங்கைநான்! தமிழ்மகன் நீர்! இனிதாய்
மணம்புரிய வழியுண்டா நாம்?'' என்று கேட்டாள்;
''சிலையே! நற் காதல்முன் சாதி இன பேதச்
சிந்தனைக்கே இடமில்லை; வா,'' என்றேன். பின்னர்
அலையோடே அலையானோம்! அமுதுண்ண லானோம்!
ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம் அங்கே!

# உயிர்க்கேள்வி?

கொடிதான் ஒருநாள் மலரவில்லை - எனில்
கொஞ்சும் அதனெழில் குலைவதில்லை;
விடியற் சேவல் கூவவில்லை - எனில்
வெங்கதி ரோன்தொழில் விடுவதில்லை;
பிடியை ஒருநாள் காணவில்லை - எனில்
பெருவே ழம்பித் தடைவதில்லை
அடி! ஒரு நாள்உனை நோக்கவில்லை - எனில்
ஆசைக் கனவுகள் மடிவதுமேன்?

வாயொரு நாளே உண்ணவில்லை - எனில்
வாழ்க்கை முடிந்து போவதில்லை;
காயொரு நாளே கனியவில்லை - எனில்
காட்டுக் கிளிகள் சாவதில்லை;
பாயொரு நாளே பக்கமில்லை - எனில்
படுக்கா திருப்பவர் யாருமில்லை;
நீயொரு நாள்எனை நெருங்கவில்லை - எனில்
நெஞ்சில் காரிருள் படிவதுமேன்?

குயிலிசை ஒருநாள் கேட்கவில்லை - எனில்
குளிர்செவி யிரண்டும் எரிவதில்லை;
மயில்நட மொருநாள் பார்க்கவில்லை - எனில்
மணிவிழி யிரண்டும் அழுவதில்லை;
பயின்றிட ஒருநாள் செல்லவில்லை - எனில்
படிப்பே அத்துடன் முடிவதில்லை;
உயிரே! உனைத்தினம் தழுவவில்லை - எனில்
உலகே எனக்கு முடிவதுமேன்?

'தமிழ்நாடு'
13-5-62

# கூந்தல் நிழலில் குடியிருக்க வேண்டுமடி !

காதலித்துப் பொங்குதடி சித்தம் - என்றன்
கண்ணில் ஆசை பொங்குதடி நித்தம் - உயிர்
பேதலித்துப் பிரிந்திடுமுன்
பேசாமல் அளி, இன்ப
முத்தம்! அழி பித்தம்!

தென்றலிலே பனிகண்டேன் முன்னம் - இன்று
தீ கண்டேன் - காரணம் உன் எண்ணம் - நெடுங்
குன்றிழியும் அருவியெனக்
கொதிப்படக்கத் தா, அமுதக்
கன்னம்! என் அன்னம்!

இரவினிலே துயில்உண்டா? இல்லை - அடீ,
ஏன் வளைத்தாய் உன்புருவ வில்லை? - தினம்
பரவிவரும் நோய்தீர்க்கப்
பக்கம்வந்து கொடு, மருந்துச்
சொல்லை! தடு தொல்லை!

ஓவியமாய் உன்னுருவைத் தீட்டி - என்றன்
உள்ளமெனும் சுவர்வைத்தேன் மாட்டி - தமிழ்க்
காவியமே! அன்புணர்ந்து
காணிக்கை வை, உதட்டைப்
பூட்டி, சீ மாட்டி!

காந்தளிளம் பூவிரண்டைச் சூடி- வாடி
காட்டுமயில் போல்நடனம் ஆடி - உன்
கூந்தல்தரும் தண்ணிழலில்
குடியிருக்க வேண்டுமடி
வாடி! பண் பாடி!

# உலகம் பொல்லாதது ?

பொல்லாத ஆள் அத்தான் நீங்கள் ! சும்மா
போங்கள்! நான் வரமாட்டேன்! அறிவு நூல்கள்
கல்லாத உள்ளத்தைப் போலி ருக்கும்
காரிருளில், நள்ளிரவில் தேடி வந்தால்
பொல்லாத இவ்வுலகம் பழியை அள்ளிப்
போடாதா? சாடாதா நம்மை? என்றும்
செல்லாத காசாகச் செய்தி டாதா?
சிந்தித்துப் பாருங்கள்..... மாட்டேன் அத்தான்!

பரிதிவிழும் நேரத்தில் குளத்தோ ரத்தில்
பருகும்நீர் எடுத்துவரும் போது, நீங்கள்
இருவிழியால் பார்ப்பதுவும் ஏக்கங் கொண்ட
இதழ்விரித்துச் சிரிப்பதுவும் அறிந்தே என்றன்
அருகிருக்கும் தோழியர்கள் என்னை மெல்லும்
அவலாக்கி விட்டார்கள்; போதும்! மேலும்
இரவினிலே எழுந்துவர ஆரம் பித்தால்....
எங்கேபோய் முடிந்திடுமோ? மாட்டேன் அத்தான்!

மணல்வீடு கட்டிவிளை யாடிப் பாடி
    மகிழ்ந்தயிளம் பருவமென்றால் புதுவெள் ளம்போல்
கணப்பொழுதில் ஓடோடி வந்தி ருப்பேன்!
    கண்டிப்பாய் அருகிருப்பேன்! களிப்பேன்! இன்றோ
மணமுடிக்கத் தக்கதொரு மங்கை யாக
    மாறிவிட்டேன்; வளர்ந்துவிட்டேன்; அதனால் உங்கள்
தணற்பருவ ஆசைக்குத் தலைய சைத்தே
    தாவிவர முடியவில்லை! துணிச்சல் இல்லை!

சந்தைக்குக் கரும்புவந்து குவியும் மாதம்
    தம்பதிகள் ஆம் - மாதம்; இம்மா தத்தில்
சிந்தைக்குள் உலாச்செய்யும் நீங்கள் மஞ்சள்
    திருத்தாலி கட்டியெனை அழைத்தி ருந்தால்
எந்தஇட மென்றாலும் - காடோ,மேடோ-
    இந்நேரம் வந்திருப்பேன்; ஆமாம்! பெற்ற
தந்தைக்கு மகள்! அத்தான்! இன்னும் உங்கள்
    தாரம்நான் ஆகவில்லை! என்ன செய்வேன்?

கவிஞர் இளங்கம்பன் நடத்திய
பாரத முழக்கம் இதழில் வெளிவந்தது.
1-3-63

# குறும்புக்காரி

இரவுமணி பத்திருக்கும்.... மேல்மா டத்தில்
இருந்தேன்நான் தென்மதுரைத் தென்ற லோடு!
பருவத்தில் இளவேனில் போன்ற என்றன்
பன்னீர்ப்பெண் அருகிருந்தே அளிக்கும் காட்சி
விருந்துக்குத் துடித்தனஎன் விழிகள்.... அந்த
வேளையிலே, சோலையிலே மலர்ந்த பூப்போல்
சிரித்தபடி ஒயிலாக வந்தாள்; வந்து
சீனியிட்ட பால்தந்தாள்! தேமா தந்தாள்!

''ஆவின்பால் உடலுக்குத் தேவை; உன்றன்
அன்புப்பால் என்னுயிர்க்குத் தேவை. சங்கப்
பாவின்பால் அன்றுமனங் கொடுத்தேன்; உன்றன்
பார்வையின்பால் இன்றுமனங் கொடுத்தேன். கண்ணே!
பூவின்பால் வண்டுவந்து பொருத்திக் காணும்
புதுஇன்பம் மதுஇன்பம் தன்னை இன்று
நாவின்பால் இதழின்பால் நயனத் தின்பால்
நான்காணத் தூங்காமல் ஏங்கு கின்றேன்

தோல்இனிக்கும் சுவைப்பழமே! தொட்டால் செந்தேன்
சுரக்கின்ற புதுமலரே! கொடியே! உன்றன்
கால்வலிக்கும் நெடுநேரம் நின்றால்; என்றன்
கண்வலிக்கும் அதைக்கண்டு கொண்டி ருந்தால்!
வேல்வடிக்கும் கொல்லனுலை போலக் காலை
வெங்கதிரோன் ஒளிபரப்பும் முன்னர், ஆசைப்
பால்குடிக்க வேண்டுமடி! காலம் பொன்! பொன்!
பசிமார்பில் சாய்ந்திடடி! வாடி'' என்றேன்

கட்டிலுக்குக் கூப்பிட்டேன்; வழக்கம் போலக்
கண்சாடை செய்திட்டேன்; அவள் சிரித்தாள்!
தொட்டிழுக்கப் பாய்ந்திட்டேன்; மான்போல் ஓடித்
தூரத்தில் போய்நின்றாள்; ''அத்தான், நீங்கள்
தொட்டிழுக்கத் தொட்டிழுக்க மயங்கி வீழும்
தொடர்கதையை வளர்த்தால் நான் தானே மீண்டும்
தொட்டிலுக்குப் பக்கத்தில் நிற்க வேண்டும்!
தோள்வலிக்க நாள்தோறும் சுமக்க வேண்டும்!

கட்டுப்பாட் டைவளர்க்க வேண்டும் என்ற
கருத்துவழி யுளநீங்கள் நம்கு டும்பக்
கட்டுப்பாட் டையும்சிறிது கவனி யுங்கள்;
காதற்பாட் டைத்தினமும் பாடி, மேனி
ஒட்டும்பாட் டைக்கொஞ்சம் ஒதுக்கி வைப்போம்!
ஒருமைப்பாட் டைத் தடுப்போம்! இல்லை யென்றால்
கட்டுப்பாட் டைமீறிப் பிள்ளை பெற்றுக்
கவலைப்பாட் டையன்றோ படிக்க வேண்டும்?

இயல்என்றும் இசைஎன்றும் எழிற்கூத் தென்றும்
இனியதமிழ் மூன்றுண்டு; விண்ணில் துள்ளும்
கயல்என்றும் புலிஎன்றும் வில்என் றும்- மண்
காத்தகொடி மூன்றுண்டு; நமக்கிப் போது
குயில்என்றும் சுடர்என்றும் குன்றன் என்றும்
குழந்தைகள் மூன்றுண்டு! மேலும் பெற்றால்
பயல்என்றும் பேய்என்றும் சனியன் என்றும்
பலபெயர்கள் இடநேரும்....போதும்....மேலும்..

சிறைப்பட்டுக் கிடந்தழியும் நிலைவந் தாலும்
செந்தமிழைக் கெடுக்கவரும் பகையைத் தேய்க்கப்
புறப்பட்டுக் காளையர்கள் போக, மானப்
புறப்பாட்டு - மறப்பாட்டுத் தீட்டா மல், மின்
நிறப்பட்டுச் சேலையணிந் திருக்கும் என்னை
நினைத்தபடி யேயிருந்தால் உங்கள் வேகம்
குறைப்பட்டு விடும்; அத்தான்! தமிழ்நாட் டார்பின்
கொடியவளென் றெனைத்தானே சொல்வார்,'' என்றாள்.

''இந்தாபார் ஏடெடுத்தேன்; இரண்டே நாளில்
இன்னுமொரு புதுப்பரணி தீட்டிக் காட்டிச்
சிந்தாத புகழடைவேன்; இந்நூற் றாண்டின்
செயங்கொண்டான் ஆவேன்பார்! நிச்ச யம்பார்!
அந்தாதி நூலொன்றும் இயற்று வேன்நான்
அருந்தமிழ்மேல்! சரிதானே! இத்த னைக்கும்
செந்தாம ரைப்பெண்ணே! ஏதோ கொஞ்சம்
சிவந்தஇதழ் கேட்கின்றேன்; சும்மா அல்ல....

கொடுத்ததைத்தான் கேட்கின்றேன்; கடனாய் நேற்றுக்
கொடுத்ததைத்தான் கேட்கின்றேன்; கன்னத் தில் நான்
கொடுத்ததைத்தான்....'' என்றுரைத்தேன். ''அதுவா... ஆமாம்
குழந்தைகுயி லிடம்பள்ளி போகும் போது
கொடுத்தேனே! திரும்பிவந்து அப்பா வுக்குக்
கொடு, தேனே! என்றேனே! ஓகோ! இன்னும்
கொடுக்கவில்லை யா அந்தக் குறும்புக் காரி?
கூப்பிட்டுக் கேட்கின்றேன்'' என்றாள்! சென்றாள்!

'தென்னரசு'
இதழில் வெளிவந்தது. 'அக்டோபர் 1964

*"கரையேறும் பாதை காணோம்
கண்ணீரில் ஓட மானோம்"*

*- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.*

# கண்ணீர்த் துளிகள்

# நானாக நான் இல்லை

இனிப்பொறுக்கச் சக்தியில்லை அத்தான்! என்றன்
இறுதிமடல் இந்தமடல்! இரவில் என்னால்
தனித்திருக்க முடியவில்லை; திங்கள் சிந்தும்
தணல்பொறுக்க முடியவில்லை; ஆமாம்! நீங்கள்
கனியிருக்கக் காய்கவர நினைக்க லாமா?
கரும்பிருக்க வேம்பெடுத்துக் கடிக்க லாமா?
மனிதருக்கே யுரியபொருள் மோகங் கொண்டு
மறந்தென்னைப் பிரிந்தெங்கோ இருக்க லாமா?

கற்கோட்டை போல்இருந்தேன்; உங்கள் போக்கால்
களிமண்ணாய்க் கரைகின்றேன்! தஞ்சைச் சீமை
நெற்காட்டைப் போல்இருந்தேன்; பிரிவால் பாலை
நிலம்போலக் காய்கின்றேன்! தமிழின் வெல்லச்
சொற்பாட்டை எடுத்துத்தான் படித்தால் கூடச்
சுவைஉண்டா? சுகம்உண்டா? ஏழு வண்ண
விற்போட்ட வானத்தின் அழகைக் கூட
வெறுக்கின்றேன்; சலிக்கின்றேன்; வெதும்பு கின்றேன்!

ஊனாக, உயிராக, உறக்க மாக,
உள்ளத்துக் குளத்துக்குள் நீந்து கின்ற
மீனாக, மேனியினைச் சிலிர்க்க வைக்கும்
மென்தென்றற் காற்றாகக் குறிஞ்சிப் பூவின்
தேனாகக், குறுந்தொகைப் பாட லாகத்,
தென்னாட்டுக் கலையாகத் திகழும் அத்தான்,
நானாக நான் இல்லை! நீங்கள் இன்னும்
நளனாகப் பிரிந்திருத்தல் நல்ல தில்லை!

இங்கெனக்குக் கிடைத்திருக்கும் துணையோ வாட்டும்
ஏக்கம்தான்; மயக்கம்தான்; ஏதோ எண்ணித்
திங்களுக்குத் திங்களொரு கடிதம் தீட்டித்
தேறுதலும் ஆறுதலும் கூறு கின்ற
உங்களுக்குத் தெரியாத தொன்று மில்லை;
ஒருவார்த்தை இருந்தாலும்..... நெருங்கும் இந்தப்
பொங்கலுக்குள் வராவிட்டால் அருவிக் கண்ணீர்ப்
பொங்கலுக்குள் உயிர்புதைத்துக் கொள்வேன்; அத்தான்!

'தமிழ்நாடு'
தேதிதெரியவில்லை

# எங்கே சென்றான்?

தளிருருவம் ஒளிகாட்டும் பருவம்; என்றன்
தாய்இடுப்பை விட்டிறங்கி ஊர்ந்து திண்ணை
வெளியோரம் நடைபோடும் வேளை, 'நானும்
விளையாடத் துணைவரவா' என்று கேட்டுக்
குளிரோடை விழியாலே பார்த்தான் கள்வன்!
குருதியெலாம் கொதிப்பேற ஆடி மாத
வளியாக ஆனேன் நான்; அவனோ என்னை
வட்டமிடும் பட்டமென வளைந்து வந்தான்!

அரும்புருவம் எழில்காட்டும் பருவம்; மாலை
ஆனவுடன் பள்ளிவிட்டே இல்லம் நோக்கித்
திரும்பிநெடுஞ் சாலைவரும் வேளை, 'நானும்
சேர்ந்துதுணை யாய்வரவா' எனமு திர்ந்த
கரும்பினிப்பைக் கசக்கவைத்த சொல்லால் கேட்டான்!
கடுகடுத்துக் கண்துடித்துக் கோபத் தாலே
நெருப்பாடும் விளக்கானேன்; அவனோ என்னை
நீங்காத விட்டிலென நெருங்கி வந்தான்!

மொட்டுருவம் இதழ்காட்டும் பருவம்; வண்டு
    மொய்க்கின்ற மதுரமலர்க் குளத்தண் ணீரைப்
பட்டுடலால் போய்த்தழுவும் வேளை, 'நானும்
    பாய்ந்தாடத் துணை வரவா' என்று கேட்டுக்
கட்டுடலைக் காட்டியவன் கரையில் நின்றான்!
    கைபிசைந்து முகஞ்சிவந்து சீற்றத் தாலே
வெட்டுகின்ற மின் ஆனேன்; அவனோ என்னை
    வேடிக்கைச் சிறுவனென விரும்பி வந்தான்!

மலருருவம் மணங்காட்டும் பருவம்; பாச
    மதுவூற்று நெஞ்சத்தில் பெருக்கெ டுக்கப்
பலரிருக்கும் வையத்தில் அவனை மட்டும்
    பார்ப்பதற்குப் பசிகொள்ளும் காதற் கண்கள்!
நிலவொளியைப் புன்னகையில் நிறுத்தும் அன்பன்
    நெடுந்தோளில் சாய்ந்தின்பக் கவிதை பாடக்
கலைமகளாய்க் காத்துள்ளேன்; அவனின்(று) என்னைக்
    கற்சிலையாய் நினைத்தானோ? எங்கே சென்றான்?

தமிழ்நாடு
27-8-61

# நாளைக்கும் நான் வருவேன்!

என்றோஓர் நாள் பார்த்தேன்! ரவிவர் மாவும்
எழுதமுடி யாஅந்த ஓவி யத்தை
என்றோஓர் நாள் பார்த்தேன்! இளங்கோ கூட
எழுதமுடி யா அந்தக் காவி யத்தை
என்றோஓர் நாள் பார்த்தேன்! அன்று நெஞ்சை
இனிக்கவைத்தாள்; சிலிர்க்கவைத்தாள்; இசைக்க வைத்தாள்;
இன்றோஎன் இளமையினைக் கருக வைத்தாள்;
எங்கோ போய் மறைந்தென்னை உருக வைத்தாள்!

இதோ இந்தச் சோலையில்தான் பார்த்தேன்! பார்த்தேன்!
இதோ இந்தப் புன்னைமரங் கூடச் சாட்சி!
இதோஇன்று வீசுகின்ற தென்றல் அந்நாள்
எங்களுடல் தீண்டியதை மறந்தா விட்டேன்?
இதோஇந்தக் குயிற்கூட்டம் அன்று பெய்த
இசைக்காதல் அமுதத்தை மறந்தா விட்டேன்?
'இதோவருவேன்' எனச் சொல்லிப் போவ தைப்போல்
எனைப்பார்த்துப் போனாளே.... மறப்பே னாநான்?

கண்செய்த நன்மையினால் கண்டேன்! என்றன்
காதென்ன தீமைசெய் ததுவோ, நல்லாள்
பண்மொழியை ஒருசிறிதும் கேட்க வில்லை!
பஞ்சணைத்தோள் தாங்கிக்கை சுவைக்க வில்லை!
வெண்மதிய வதனத்தை வருடிப் பார்க்க
விரல்களுக்கும் கொடுத்துவைக்க வில்லை! ஓடும்
தண்ணீர்மீன் போல் இருந்த என்னை இன்று
தவிக்கவிட்டுப் போய்விட்டாள் தரைமீன் போல!

ஒருநாளும் தவறாமல் இச்சோ லைக்கே
ஓடோடி வருகின்றேன்! தேடித் தேடி
உருமாறி வருகின்றேன்! கடலைக் கண்ணில்
உண்டாக்கி வருகின்றேன்! ஏதோ ஏதோ
புரியாத உணர்ச்சிவழி பாட்டிற் கென்னைப்
பூவாக்கி வருகின்றேன்! என்றோ ஓர்நாள்
வருவாள் - என் றேநம்பி தினமும் இங்கே
வருகின்றேன்! இன்னும்நான் வாழு கின்றேன்!

நாளைக்கும் வண்டுவரும்; முல்லைப் பூவின்
நறுந்தேனை அருந்திப்பின் ஆட்டம் போடும்!
நாளைக்கும் பரிதிவரும்; கமலப் பூவின்
நாணத்தைக் கதிர்க்கையால் நீக்கிக் கொஞ்சும்!
நாளைக்கும் நிலவுவரும்; அல்லிப் பூவை
நள்ளிரவில் கிள்ளிவிட்டுக் குறும்பு செய்யும்!
நாளைக்கும் நான்வருவேன்! நாளைக் கேனும்
நங்கைவர மாட்டாளா? வரமாட் டாளா?

'தமிழ்நாடு'
1962

# பாலைவனப் பயணம்!

இதயத்தை இயக்கிக்கொண் டிருந்த அன்னம்
எனைப்பிரிந்த காரணத்தால், ஏமாற் றத்தால்
பதைபதைத்துப் பரிதவித்துப் பித்தன் ஆனேன்;
பாய்மரமில் லாப்படகாய் ஆனேன்; ஏனோ
விதைபோட்டும் முளைதோன்றா நிலத்தைப் போல
வீண் ஆனேன்; பாழ் ஆனேன்; வெறுமை ஆனேன்!
எதைச்சொல்வேன்? எங்கேபோய்ச்சுமையை வைப்பேன்?
என்சோகம் என் கண்ணீர் எனக்கே சொந்தம்!


நெல்லிக்காய் தின்றவுடன் குளிர்ந்தி ருக்கும்
நீர் அருந்திச் சுவைப்பதைப்போல் சிவந்தி ருக்கும்
அல்லிப்பூ இதழ்ப்பெண்ணை மாலை நோக்கி
ஆகாயக் கனவுகளில் இரவைப் போக்கிச்
செல்லத்தான் விட்டேன்என் பறவை நெஞ்சை;
சிறகொடிந்து போயிற்றே! ஆசை யாவும்
பல்லிக்குப் பலியாகும் பூச்சி யாகும்
பாலைவனப் பயணம்தான் இனிமேல் வாழ்க்கை!

நனவுகளில் வாழ்வோரை யெல்லாம் வீணில்
நான்மிகவும் கேவலமாய் நினைத்தேன்; காதற்
கனவுகளில் காலமெல்லாம் சஞ்ச ரிக்கக்
கற்பனைத்தேன் நதிமிதக்கப் பார்த்தேன்; ஆனால்
கனவுகளில் பூகம்ப வருகை கண்டேன்!
கடல்தின்ற கபாடபுர அழிவைக் கண்டேன்!
கனவுகளே இனிவேண்டாம் வேண்டாம் என்றே
கதறுகின்றேன்; கனவுகளோ கலைய வில்லை!

கன்றைத்தான் இழந்திருக்கும் பசுவும் கூடக்
கறக்கத்தான் செய்கிறதே! அதுபோல் பாவை
சென்றேவிட் டால்என்ன என்றே நானும்
சிரிக்கத்தான் முடிகிறதா? மலையின் உச்சி
நின்றேபே ரெழிலமுதை உண்ணச் சென்றே
நெடும்பள்ளம் வீழ்ந்ததவனின் நிலையைப் பெற்றேன்;
இன்றேஇப் பொழுதேஎன் மனமே டைக்குள்
இருள்கூத்து நடக்கட்டும்; சுகம்சா கட்டும்!

போய்விட்டாள்; புரையோடிப் போயி ருக்கும்
புண்ணுள்ளே தீ நுழைத்துப் புகையைப் போலப்
போய்விட்டாள்; பார்வைக்குக் குளிர்ச்சி யூட்டிப்
புனலாக உருகுபனிக் கட்டி போலப்
போய்விட்டாள்; அணில் சுற்றித் தினமும் காக்கப்
புனக் கிளியின் வாய்ப்பட்ட பழத்தைப் போலட
போய்விட்டாள்; இனியென்ன என்றன் நெஞ்சில்
பூக்கட்டும் காளான்கள்; புதர்மண் டட்டும்!

196[illegible]
'சுவை' தொகுப்பிலிருந்து



# உடற்சுமை உறவிருக்கே!


என்னவோ போலிருக்கே - ஓ!
　இதயத்தில் வேதனைச் சூலிருக்கே!
மின்னலாய் வாழ்விருக்கே - நெடு
　மேகமாய்ப் பொழுதெலாம் தாழ்விருக்கே!

இலக்கியப் பொழிலிருக்கே - மகிழ்ந்(து)
　இருக்கலாம்; வயிற்றுக்குத் தொழிலிருக்கே!
கலைக்கவின் தேர்இருக்கே - அதைக்
　காணலாம்; கண்களில் நீர்இருக்கே!

மலரினில் கள்ளிருக்கே - அதை
　மாந்தலாம்; குத்திடும் முள்ளிருக்கே!
நிலவினில் சிரிப்பிருக்கே - அதை
　நெருங்கலாம்; தீய்த்திடும் நெருப்பிருக்கே!

துயிலினில் சுகமிருக்கே - அதைத்
　தொடரலாம்; எழுப்பிடும் பகலிருக்கே!
உயிரினில் சிறகிருக்கே - பறந்(து)
　ஓடலாம்; உடற்சுமை உறவிருக்கே!

பாரதமுழக்கம்



# அனுமதிக்க முடியாத அவலம்!

உலகம் முழுதும் ஒளிருமோர் வெய்யோன்
நிலையாக ஓய்வெடுக்க நிச்சயத்து விட்டதைப்போல்

உச்சி மலைநீர் உலைநீராய் ஆவதைப்போல்
அச்சம் பிறக்கிறது. ஆனந்தம் மாய்கிறது.

பூமிவெடிப்பதைப்போல்பொன்வானம் வீழ்வதைப்போல்
காமர் அலைகடல் கணப்பொழுதில் வற்றுதல்போல்

மின்னல் அரவமென மேனியினைத் தீண்டுதல்போல்
கன்னல் கசப்பதுபோல் கண்கள் சுழல்வதுபோல்

மயக்கம் வருகிறது. வாழும் இயற்கை
இயக்கம் பிறழ்வதைப்போல் எண்ணம் சிதைகிறது.

❑

எங்கும் வெறுமை! எங் கெங்கும் கரியபுகை!
தொங்கும் தலையையினித் தூக்க முடியாதோ

என்று துயர்க்குரல் நாம் எழுப்பக் கேட்காமல்
இன்று பறந்துவிட்டான்! இந்த மயில்நாட்டை

ஆக்கத்தில் ஆழ்த்தியவன் அற்புதத்தில் ஆழ்த்தியவன்
தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்! தொல்லுலக மக்களைத்

துக்கத்தில் ஆழ்த்திவிட்டுத் தூயமகன் காந்திமகான்
பக்கத்தில் ஆழ்ந்துவிடும் பந்தயத்தில் முந்திவிட்டான்!

தன்னடியில் வாழ்ந்தோர் தவிக்க உயர்நண்பன்
கென்னடியைத் தேடிக் கிளம்பிவிட்டான்! எட்டா

வேதப் பொருளாலோ வீணை நரம்புதரும்
நாதத் திறத்தாலோ நாம்கொணர வொண்ணா

இடத்துக்குப் போய்விட்டான்; இன்று தனது
படத்துக்கு மாலையிட்டுப் பார்க்கவைத்துப் போய்விட்டான்.

❑

தாயகத்தைக் காத்துசன நாயகத்தைக் காத்துவந்த
நாயகத்தைக் காப்பதற்கு நம்மால் முடியவில்லை.

தானம் அளித்துசமா தான மெனுமினிய
கானம் இசைத்த கவிதைக் குயிலுக்கு

அதிகமாய் வாழ்நாள் அளிக்க முடியவில்லை.
புதிய சமுதாயப் பூமலரச் செய்தகொடி

வாடாது காக்க வகையில்லை வழியில்லை
தேடாமல் தானாகத் தேடிவந்து நாடோறும்

வீட்டில் தெருவில் விரிந்து பரந்தயிந்த
நாட்டில் அருள்வெளிச்சம் நன்றாய் இறைத்துவந்த

ஆசியத்துச் சோதி அணையுங்கால், நாம்ஓடிப்
பாசக்கை யால்தடுத்துப் பார்க்க முடியவில்லை!

❑

கண்ணில் கருத்தில் கதிர்வளர்த்தோன் தான்பிறந்த
மண்ணை இனத்தை மனங்கொடுத்துக் காதலித்தான்;

சிற்பத்தைக் காதலித்தான்; சித்திரத்தைக் காதலித்தான்;
கற்பனைப் பாவாணர்தம் காவியத்தைக் காதலித்தான்;

நந்த வனத்தை நதியழகைக் காதலித்தான்;
அந்தி மலரை அழகுக் குழந்தைகளைக்

காதலித்தான்! அந்தக் கலைஞன்ஏன் இன்றுநமைப்
பேதலிக்க வைத்திட்ட பேய்ச்சாவைக் காதலித்தான்?

❑

சென்று விட்டான் சித்தன்! நாம் செய்வ தினியாது?
ஒன்றும் புரியா(து) உழல்கிறதே உள்ளம்.

இனிமேல் நிழல்ஏது? எங்கொதுங்கி நிற்போம்?
இனிமேல் தலைவரென யாரைநாம் காட்டுவது?

நேரு சிரமிருந்த நீதி முடிசூட
வேறு மனிதர்க்கு வீரம் கிடையாது!

நேர்மை வடிவெடுத்து நின்ற கருணைமகன்
ஓர்நொடியில் எங்கோ ஒளிந்தசெயல் மெய்யாய்

மனித குலத்துக்கே மாற்றம்தான்; நெஞ்சம்
அனுமதிக்கக் கூடாத அவலம்தான்; அல்லல்தான்!

❑

அந்தோ! பொழுதே! அவனைப் பறித்தாயே!
இந்தப் பிழைக்கு இரங்குநீ! அழு! கதறு!

திங்கள் முகத்தில்செந் தீயைப் பரப்பிவிட்டு
எங்கள்முன் நிற்கின்ற ஈனப் பொழுதே! கேள்!

நேரு மறையவில்லை! நேரு மறையவில்லை!
பாரில் மலரும் பனிரோஜா எல்லாம் அப்

புண்ணியனின் பொன்முகத்தைப் பூரித்துச் சித்திரிக்கும்!
கண்ணியனின் காதல் கதைசொலும்அம் மலர்க்கு

இனிமேலே ''ரோஜா''வென் றுள்ள பெயர், நீக்கிப்
புனிதமுடன் ''நேரு''வென்ற புத்தம் புதுப்பெயரை

இட்டுப் புகழ்வோம்; இலட்சியன் சீரடியைத்
தொட்டு எழுவோம் தொழுது!

பாரதப் பிரதமர்
பண்டித ஜவகர்லால் நேரு
மறைந்தபோது எழுதியது

# நான் மனிதன்!

வான்திரியும் தண்ணிலவைப் பார்த்த துண்டா?
வசந்தத்தைக் கண்டதுண்டா? துள்ளி ஓடும்
மான்கூட்டம் மயில்ஆட்டம் மலரின் தோட்டம்
மங்கைமுகம் இவையனைத்தும் கண்ட துண்டா?
தேன்கவிதைத் தமிழ்மொழியின் எழுத்தைக் கண்ணால்
தின்றதுண்டா? சுவைத்ததுண்டா? இல்லை! அந்தோ!
நான்குருடன் நான் குருடன்! உலகை நோக்கும்
நல்லநிலை எனக்கில்லை; என்ன வாழ்க்கை?

கான்ஓடும் ஆறுகளின் சத்தம் என்றன்
காதுகளைத் தொட்டதுண்டா? குயிலின் பாட்டைத்
தான்கொஞ்சம் கேட்டதுண்டா? குழலும் யாழும்
தரும்மதுரத் தனிச்சுவையில் பித்துக் கொண்டே
நான்மயங்கிக் கிடந்ததுண்டா? அறிஞர் பேச்சில்
நனைந்ததுண்டா என்நெஞ்சம்? இல்லை! அந்தோ
நான்செவிடன்! நான்செவிடன்! குரலைக் கேட்கும்
நல்லநிலை எனக்கில்லை; என்ன வாழ்க்கை?

ஊண்வேண்டும் நீர்வேண்டும் என்றே வாயால்
உரைத்ததுண்டா ஓயாமல்? துன்பத் தூண்டில்
மீன்போலத் துடிக்கின்ற கொடுமைத் காக
மிகவருந்தி ஒப்பாரி வைத்த துண்டா?
மேன்மையுள்ள மனக்கருத்தை யாருக் கேனும்
மெதுவாகச் சொன்னதுண்டா? இல்லை! அந்தோ
நான் ஊமை! நான் ஊமை! வார்த்தை யாடும்
நல்லநிலை எனக்கில்லை; என்ன வாழ்க்கை?

❑

நான் உலகைப் பார்த்ததில்லை! ஓசை யாவும்
நான்கேட்ட தேயில்லை! இனிதாய்ப் பேசத்
தான்என்றும் முடியவில்லை! ஆமாம்! உண்மை!
தணல்சூழ்ந்த குடிசைக்குள் கிடப்ப தேபோல்
ஏன் இன்னும் இருக்கின்றேன் என்றே நாளும்
எண்ணுகிறேன்; விம்முகிறேன்; என்ன செய்வேன்?
நான்மனிதன்! நான்மனிதன்! அதனால் சாக
நடுங்குகிறேன்! நடத்துகிறேன் ஆசை வாழ்க்கை!

'தமிழ்நாடு'

# வள்ளலார் வருவாரா?

விண்மீன்கள் வீழட்டும்; பொதிகைக் காற்று
 வீசாமல் போகட்டும்; பொன்னி ஆற்றுத்
தண்ணீரின் மெல்லலைகள் இன்று தொட்டுத்
 தணல்அலைக ளாகட்டும்; கவலை இல்லை!
கண்ணீரில் மலர்ந்திருக்கும் பூக்கள் நாங்கள்.
 கடலைப்போல் கொந்தளிக்கும் எங்கள் நெஞ்சம்.
பண்பாடும் யாழ் மண்ணில் வீழ்ந்த தேபோல்
 பாழ்பட்ட பின்னும்ஏன் பேச்சும் மூச்சும்?

கடலுக்குள் முத்தெடுக்கும் கடன்மேற் கொண்டோம்;
 கல்லுடைத்தோம்; மலைகுடைந்தோம் மண்சு மந்தோம்
சுடும்வெப்பத் தால் வியர்வை சொட்டச் சொட்டத்
 தொகைதொகையாய்க் கட்டிடங்கள் தோற்று வித்தோம்;
படர்ந்திருக்கும் முட்காட்டை அழித்துச் செந்நெற்
 பயிர்வளரும் வயலெடுத்தோம்; எனினும் எங்கள்
உடலுக்குள் உயிரில்லை! உழைத்து ழைத்தே
 ஓடானோம்! புயற்காற்றில் ஓட மானோம்!

கட்டுதற்குத் துணியில்லை; பிறந்த மேனிக்
கலைக்காட்சிப் பொருளாகக் கருகும் எங்கள்
மொட்டுகளைப் பாருங்கள்; இந்த வாழ்க்கை
முறைசரியோ கூறுங்கள்! இரக்கம் இல்லார்
வெட்டுகின்ற பலியாடா? இல்லை நீரில்
விட்டெறிந்த தமிழ்ஏடா நாங்கள்? செந்தேள்
கொட்டுவதை ஒருவாறு பொறுக்கக் கூடும்;
கொடும்பசியை எவ்வாறு பொறுக்கக் கூடும்?

வாடையிலே மயில்நடுக்க முற்ற தாக
மனம்வாடித் தன்னுடம்பில் போர்த்தி ருந்த
ஆடையினை அணிவித்தான் பேகன் என்றே
அழகொழுகப் பேசுகின்றார் மேடை தோறும்!
வாடையிலே மெய்நடுங்க பறையைப் போல
வல்லோசை தனைப் பற்கள் எழுப்ப, நாங்கள்
வாடையிலே வருந்தையிலே உதவ ஓடி
வருவார்யார்? வாழவைக்கும் வள்ள லார்யார்?

தைத்திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்
தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்
நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சி கொள்வர்
நிதி படைத்த சீமான்கள்; என்றும் எங்கள்
கைதொட்டு வாய்பட்ட துண்டோ பொங்கல்?
கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!
தெய்வங்கள் திருநாட்கள் எங்கட் கில்லை;
தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?

'தென்ற

கவிஞர் கண்ணதாசனின் அன்னையார் நினை
போட்டியில் பரிசு பெற்ற கவிதையின் ஒரு பகு

# பொதுவுடைமைப் பூ!

எங்கே நீ சென்றுவிட்டாய்? எதிர்கா லத்தின்
இலட்சியமே! இலக்கியமே! மடமை என்ற
கங்குலினை மிதித்தெழுந்து வந்த தூய
கதிர்மணியே! கண்மணியே! ஜீவா! வெற்றிச்
சங்கெடுத்துப் புரட்சியொலி செய்தாய்; பொல்லாச்
சாதிவெறிக் கூச்சலிடும் நரிகள் முன்னர்
சிங்கம்போல் பாய்ந்திட்டாய்! இன்றோ எங்கள்
சித்தத்தைக் கலங்கவைத்தாய்; எங்கே சென்றாய்?

பகுத்தறிவுப் பாதையிலே நடந்தாய்! உன்றன்
பயணத்தில் வெற்றிகண்டாய்! காரல் மார்க்சின்
பகுத்துண்ணும் தத்துவத்தை மக்கள் நெஞ்சில்
பதிவாக்கக் குருதியொடு குருதி யாக்க
செகத்திலெங்கும் கோட்டையைப்போல் நிறுத்தி வைக்கச்
செயல்புரிந்தாய்! சிறைஇருந்தாய்! ஏற்றத் தாழ்வைத்
தகர்த் தெறிய முற்பட்டாய்! இனிமேல் உன்போல்
தக்கோன் - சிந் தனைமிக்கோன் காண்ப தெங்கே?

காரதிர, விண்ணதிர, அலைகள் பாடும்
கடலதிர, திசையெட்டும் அதிர இந்தப்
பாரதிர அறமுழக்கம் செய்தாய்! சற்றும்
படிக்காமல் தமிழினிலே என்ன உண்டென்-
பாரதிரத் தமிழ்முழக்கம் செய்தாய்! சாகாப்
பாரதியின் வரலாற்றை - ஆதிக் கத்தின்
வேரதிர அவன்வைத்த வேட்டுப் பாட்டை
விரித்துரைத்தாய்! கம்பனுக்கும் பெருமை சேர்த்தாய்!

தனக்காகக் கார்மேகம் பொழிவ தில்லை;
தனக்காகச் சோழநதி பாய்வ தில்லை;
தனக்காகப் பூங்குயில்கள் இசைப்ப தில்லை;
தனக்காகச் செவ்வாழை செழிப்ப தில்லை;
தனக்காக இயற்கையிலே முகிழ்த்த ஒன்றும்
தழைப்பதில்லை; பிழைப்பதில்லை; மனிதன் மட்டும்
தனக்காக வாழ்கின்றான் என்பர்; அந்தத்
தரையுரையைப் பொய்க்கவைத்த சான்றோன் நீயே!

'தாமரை'
ஜீவா நினைவுமலர்

# காந்தி ஆனாய்!

பொன்னடி - அத் திருத்தொண்டன் இதயம்; வண்ணப்
பூவடி - அப் புகழாளன் வதனம்; என்றும்
முன்னடி வைக் கும்வீரன் ஒளிச்சி ரிப்பு
முத்தடி; அம் முத்துக்கும் அழிவா? ஐயோ!
என்னடி! இக் கொடுமையைப்போய் எங்கே சொல்வோம்?
எப்படித்தான் தாங்குவதோ? என்று பெண்கள்
கென்னடி - உன் மறைவறிந்து கலங்கு கின்றார்;
கிளிமார்பில் அடித்தபடி புலம்பு கின்றார்.

நிறவெறியை அழிப்பதற்குப் பாடு பட்டாய்!
நீக்ரோக்கள் அடிமைகளென் றுரைப்போர் நெஞ்சக்
கறைவெறியை அழிப்பதற்குத் திட்டம் இட்டாய்!
காலத்தின் முகத்தினிலே குருதி பூசும்
மறவெறியை அழிப்பதற்கும் முயற்சி செய்தாய்!
மனிதாபி மானத்தின் சிகரம் நீதான்!
அறநெறிசொல் அரசியல்நூல் அகரம் நீதான்!
அநியாயம் ஒருகயவன் அழித்தான் உன்னை!

வண்டுக்கு வாழ்விடம் ஓர் தேன்பூ; மின்னும்
    வைரத்துக்(கு) இருப்பிடம்ஓர் மகுடம்; தூய
தொண்டுக்கும் நேர்மைக்கும் வாழ்வி டம்நீ!
    துணிவுக்கும் இருப்பிடம்நீ! அந்தோ! இன்று
நண்டுக்கும் சிறியதொரு உள்ளங் கொண்டோன்
    நரம்பினிலும் கொலையுணர்ச்சி கொண்டோன் எய்த
குண்டுக்குப் பலியானாய்; காந்தி ஆனாய்!
    கோழையவன் மற்றுமொரு கோட்சே ஆனான்!

# [†]மன்னர் நினைவில்.....

இருந்தாலும் இது கொடுமை! கொடுமை! சாவே!
 இரக்கமற்ற செய்கை உன் செய்கை! எந்த
மருந்தாலும் தீராத நோயை நெஞ்சில்
 வளரவிட்டாய். விளம்பர-மோ கத்தில் மூழ்கி
விருந்தாலும் விழாவாலும் வெளிச்சம் போடும்
 'வேடிக்கை மனிதர்கள்' எல்லாம் இங்கே
இருந்தாலும் இறந்தாலும் ஒன்று தானே;
 இலைவைத்தாய்; மலர்சிதைத்தாய்: கொடுமை, ஐயோ!

---

[†]பற்பல அறச்சாலைகளையும் அறிவுச்சாலைகளையும் படைத்த கருணைவள்ளல் -சிவகங்கை மன்னர் துரை.சண்முக ராஜா தம் இளம் வயதிலேயே இயற்கை எய்தினார்.

[†]அவர் இயற்கை எய்திய ஓராண்டுக்குப் பின் அவரை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்து இக்கையறு நிலைக்கவிதையை இயற்றினார் கவிஞர்.

உன்னைநான் பழிக்கின்றேன் என்று, சாவே
ஒருபோதும் கருதாதே! கேட்டி ருந்தால்
என்னைநான் கொடுத்திருப்பேன்; அதனை விட்டே
ஏன் அந்தத் தேன் உயிரைப் பறித்தாய்? ஓ!ஓ!
மன்னர்தான் கொடுப்பதற்கு முடியும் என்று
மறக்காமல் அவர்வாழ்ந்த மனைபு குந்து
பொன்னைப்போல் பொருளைப்போல் ஆவி வாங்கிப்
புறப்பட்டுப் போனாயோ? சாவே! சொல்! சொல்

ஏராண்டு வாளாண்டு செழித்தி ருக்கும்
இசைச்சீமை சிவகங்கைச் சீமை என்னும்
பாராண்டு கொண்டிருந்த வேந்தை நீயோ
பரிசாகப் பெற்றுவிட்டாய்; எங்க ளுக்கோ
நீராண்டு கொண்டிருக்கும் விழியும், துன்ப
நெருப்பாண்டு கொண்டிருக்கும் நெஞ்சும் தந்தாய்
ஓராண்டு முடிந்தாலுங் கூட, சாவே
உன்கொடிய பரிசை யாம் இழக்க வில்லை!

பாரி உயிர் கவர்ந்துசென்ற வேளை அந்தப்
பறம்பரசன் இளமகளிர் கண்ணீர் மையில்
தூரிகையைத் தொட்டெழுதி வைத்துச் சென்ற
துயர்ப்படத்தைக் கண்டிருப்பாய்; இல்லை யாசொல்?
கூரியகண் உனக்குண்டே - கண்டி ருப்பாய்;
கொடுமையினை ஏன்தொடர்ந்தாய் கண்ட பின்னும்?
மாரியுடன் போட்டியிடும் எவரை யும்நீ
மாய்த்துவிடு வாய்போலும் விரைவில், சாவே!

உங்களுக்குக் கிடைத்திருக்கும் தலைவன் ஏனோ
ஓயாமல் தேய்கின்றான்; பாவம்! ஆனால்
எங்களுக்குக் கிடைத்திருக்கும் தலைவர் மட்டும்
எப்போதும் வளர்கின்றார் என்று நாங்கள்
கங்குலிலே முகங்காட்டும் மீன் இனத்தைக்
கண்டுநகை புரிந்ததனால் வெகுண்டாய் போலும்!
திங்களுக்குப் பெருமைதர நினைத்தாய் போலும்!
திட்டமிட்டு நல்லுயிரைப் பறித்து விட்டாய்!

பட்டமரம் வெட்டுண்டால் பரவா யில்லை;
பாதத்தில் தைக்கின்ற முள்வ ளர்க்கும்
நெட்டைமரம் வீழ்ந்திட்டால் கவலை யில்லை;
நிழல்நாடி நிற்போர்க்கு மயக்கம் நல்கும்
கெட்டமரம் - நச்சுமரம் நிலத்தில் வெட்டிக்
கிடந்திட்டால் வருத்தமில்லை; ஆனால் உன்கை
தொட்டமரம் வாழைமரம் - கனிப ழுத்துத்
தொங்கிக்கொண் டிருந்தமரம் - வீழ்த்த லாமா?

மண்ணாசை உடையவர்மேல் - பொறுமை என்னும்
மண்ணாசை உடையவர்மேல் ஆசை வைத்தாய்;
பெண்ணாசை உடையவர்மேல் - கல்வி என்னும்
பெண்ணாசை உடையவர்மேல் ஆசை வைத்தாய்;
பொன்னாசை உடையவர்மேல் - தூய்மை என்னும்
பொன்னாசை உடையவர் மேல் ஆசை வைத்தாய்;
உன்னாசை பேராசை! எங்கள் வாழ்வின்
ஓராசை யைப்பறித்தாய் கொடுமை, ஐயோ!

கொடைகாண வேண்டுமென்றும் அருளைச் சிந்தும்
குளிர்ந்தவிழி தனைக்காண வேண்டு மென்றும்,
நடைகாண வேண்டுமென்றும், இதழ்கள் சிந்தும்
நகைகாண வேண்டுமென்றும், உடல்உ டுத்தும்
உடைகாண வேண்டுமென்றும் தமிழ்மு கத்தின்
ஒளிகாண வேண்டுமென்றும், புதழ்தல் கேட்டுத்
தடைகாண நினைத்தாயோ அவர்க்கு நீ தான்?
தற்பெருமை தேடுகின்ற சாவே, சொல்! சொல்!

இல்லாதார் இயலாதார் பசியைப் போக்க
எத்தனையோ சத்திரங்கள் கட்டு வித்தார்;
எல்லாரும் இன்புற்றே இருக்கும் வண்ணம்
எத்தனையோ கலைக்கூடம் கட்டு'வித்தார்;
கல்லார்உள் ளார்இந்த நாட்டில் என்னும்
கறைநீங்க ஒளிஓங்கப் பள்ளி யோடு
கல்லூரி கட்டுவித்தார்; அவர்க்கு நாங்கள்
கல்லறையைக் கட்டுவிக்க லாமா, கூறு?

வாடிப்போய்க் கிடக்கின்ற செடிக ளைப்பார்;
வதங்கிப்போய்க் கிடக்கின்ற கொடிக ளைப்பார்;
ஆடிப்போய் நின்(று) அவர்முன் மகிழ்ச்சி தந்த
அழகுமயில் சிலைமயிலாய் ஆன தைப்பார்;
ஓடிப்போய் அவர்முன்னர் கூவிக் கூவி,
உளங்கவர்ந்த குயில்ஊமை ஆன தைப்பார்;
பாடிப்போய்க் காட்டுதற்குத் தலைவர் இன்றிப்
பரிதவிக்கும் என்னைஇதோ பார் பார் சாவே!

சிறுவயதில் மன்னருடல் பேணிக் காத்த
 செவிலித்தாய் துடிக்கின்றாள்; அதோபார் சாவே!
சிறுவயதில் கூடிமகிழ்ந் திருந்த நண்பர்
 சிந்தைநொந் தழுகின்றார்; அதோபார் சாவே!
சிறுவயதில் கல்விதந்த ஆசான் இன்று
 செயலிழந்து தவிக்கின்றார்! அந்தோ! சின்னஞ்
சிறுவயதில் குழந்தைகளை விட்டு விட்டுச்
 சிறகடிக்கச் செய்துவிட்டாய்! முறையா கூறு?

நீவருதல் கூடாதென் றுரைக்க வில்லை
 நேர்மையுடன் மெதுவாக மந்தை விட்டே
ஆ - வருதல் போல் வந்தால் வரவேற் போமே!
 அநியாய மாய் நகரை அழிக்கப் பாயும்
தீ வருதல் போல்வந்தாய்; இரக்கம் இன்றிச்
 சீறிவரும் புயல்போல வந்தாய்; சாவே!
நீ வருதல் முதுமையிலே என்றால் நன்று;
 நெருங்கிவந்தாய் இளமையிலே; நன்றா கூறு?

ஈராயி ரம்ஆண்டுத் தமிழ கத்தின்
 இலக்கியங்கள் சித்திரித்துக் காட்டு கின்ற
ஓராயி ரம்மன்னர் உயிர்கு டித்தாய்;
 ஒருகதிர்போல் ஒருமன்னர் இருந்தார்; நன்றாய்
ஆராயா மல்அவரைக் கொன்று விட்டாய்;
 ஆத்திரம் நீ அடைந்தாலும் அச்சம் இல்லை-
பேராயி ரம் உள்ள அவையில், நீதி
 பிறழ்ந்துவிட்டாய் நீ என்பேன் இனிமேல் சாவே!

மானுடத்தை அழிப்பதென்றன் வேலை என்று
    மனப்பால்நீ குடிக்காதே! வேண்டு மானால்
ஊனுடலை அழித்திடலாம்; உடல்இ யக்கும்
    உயிர்மூச்சை நிறுத்திடலாம்; ஆனால் என்றும்
வானுலகு வரைபரவும் பெருமை நீரை
    வற்றவைக்க முடியாது! கருணை மன்னர்
தேன்புகழைக், கீர்த்தியினைச் சாவே, உன்னால்
    தீண்டிவிட முடியாது! தெரிந்து கொள் நீ!

*பலமுறை தனி நூலாகப்*
*படங்களுடன் அச்சிடப்*
*பெற்றது. புகழ்மண்டபம்*
*தொகுப்பிலும் உள்ளது.*

*"நரைக்கிழவி ஔவைக்கும் கபில ருக்கும்*
*நல்லவிழா எடுத்தாக வேண்டும். நாட்டின்*
*வரலாற்றை நினைவூட்டும் திருவி ழாக்கள்*
*வைகைநதி நீரைப்போல் பெருக வேண்டும்"*

*- உவமைக்கவிஞர் சுரதா.*

# பன்னீர்த்துளிகள்

# திருக்குறள்

சூது பரத்தமை சுள்ளென்றிருக்கும் கள்ளிவற்றை
தீதென் றரசியலார் தேர்ந்து செய - மேதினிக்குச்
சட்டம் வகுத்ததிரு வள்ளுவர்நூல் நூல் பலர் நூல்
பட்டம் விடும் பையன் நூல்.

# புலமைச் சிங்கம்

ஆண்டிருந்த அண்டிரன் போல் மீசை வைத்து
    அஞ்சியைப்போல் தமிழின்மேல் ஆசை வைத்து
நீண்டுயர்ந்த தோள்களிலே வீரம் வைத்து
    நீள்விழியில் முதிர் இரக்கம் வைத்து, மானம்
பூண்டிருந்த கடைச்சங்க மக்கள் வாழ்க்கைப்
    புகழ்கூறும் இலக்கியத்தை நெஞ்சில் வைத்துப்
பாண்டியரின் பதியிருந்தே தமிழ்வ ளர்க்கும்
    பரந்தாமன் பசுந்தங்கம்! புலமைச் சிங்கம்!

எழுத்துள்ள மொழிக்குத்தான் பெருமை உண்டு;
    இசையுள்ள பாட்டுக்கே இனிமை உண்டு;
பழுத்துள்ள மரத்துக்கே கவர்ச்சி உண்டு;
    பகுத்துண்ணும் நாட்டில்தான் அமைதி உண்டு;
அழுத்தமுள்ள மனக்கருத்தைக் கொஞ்சங் கூட
    அஞ்சாமல் எடுத்துரைக்க வல்ல வர்க்கே
முழுமனிதர் என்கின்ற பட்டம் உண்டு;
    முதல்மனிதர் பரந்தாமன் இவ்வி தத்தில்!

மருக்கொழுந்தின் மணத்தைப்போல், கூந்தல் ஏந்தும்
மல்லிகைப்பூ மணத்தைப்போல், வையம் எங்கும்
திருக்குறளின் ஒளிபரவ வேண்டு மென்றே
தினந்தோறும் பாடுபடும் தொண்டர்! நேர்மை
உருக்கொண்டே விளங்குகின்ற அறிஞர்! சான்றோர்
உளந்தெளித்த பாராட்டுப் பன்னீர் பட்டும்
செருக்கில்லா திருக்கின்ற கல்விச் சீமான்!
செந்தமிழர்க் கிவர் நூல்கள் வைரக் கற்கள்!

''நல்லதமிழ் எழுதுதற்கே'' வழியைச் சொன்னார்;
''நாயக்கர் வரலாற்றை'' அறியச் செய்தார்;
வெல்லமெனத் தித்திக்கும் தமிழில், இன்ப
வெள்ளமெனப் பாய்கின்ற கவிதை தந்தார்;
சொல்ல முதக் கடலுக்குள் மூழ்கச் செய்தே
சுகமளிக்கப் பசுமலையின் நாவ லர்தாம்
இல்லையென்ற ஏக்கத்தைத் தணிக்கும் வண்ணம்
இருக்கின்ற பரந்தாமன் வான்போல் வாழ்க!

பைந்தமிழ்க் காவலர்
அ.கி. பரந்தாமனார்
மணிவிழா மலர்

# அண்ணா!

*தலைவா! என் தலைவா! என் தலைவா! இந்தத்*
*தாரணியில் தமிழ் அணியின் கொடியை ஏற்றும்*
*தலைவா! என் தலைவா! என் தலைவா! இந்தத்*
*தலைமுறையில் குறள்முறையை மன்றம் ஏற்றும்*
*தலைவா! என் தலைவா! என் தலைவா! இந்தத்*
*தாயகத்தார் தம்மகத்துள் விளக்கை ஏற்றும்*
*தலைவா! என் தலைவர்களின் தலைவா! உன்றன்*
*தாள்களிலே தலைவைப்பேன்; கரங்கள் வைப்பேன்*

மூன்றெழுத்துக் ''குறள்'' நூலை உலகுக் கீந்த
மூன்றெழுத்துத் ''தமிழ்'' மொழியைப் பேணிக் காக்க
மூன்றெழுத்துப் பகை ''இந்தி'' ஆதிக் கத்தை
முறியடிக்க முதுகெலும்பை ஒடிக்க, வெல்லும்
மூன்றெழுத்துப் பேரமைப்பை இயக்கிச் செல்லும்
*மூன்றெழுத்துத் தலைவா! என் ''அண்ணா''! உன்றன்*
*மூன்றெழுத்துப் ''புகழ்'' பாடல் எளிதா என்ன?*
*முக்கோடி எழுத்தாலும் முடியா தன்றோ?*

நீதோன்ற வில்லையெனில் எங்கள் கண்ணில்
நீங்காத மருள்; மருளே! பரிதி யாக
நீதோன்ற வில்லையெனில் எங்கள் நெஞ்சில்
நிரந்தரமாய் இருள்; இருளே! குன்ற மாக
நீதோன்ற வில்லையெனில் எங்கள் தோளில்
நிலையான சுமை; சுமையே! மைந்தனாக
நீதோன்ற வில்லையெனில் தமிழன் னைக்கு
நிச்சயமாய்த் தலைகுனிவே; அடிமை வாழ்வே!

புத்தனை நான் காண்கின்றேன், அண்ணா! உன்றன்
புன்னகையில்! புன்னகையில்! சிலுவை யான
கர்த்தனை நான் காண்கின்றேன், அண்ணா! உன்றன்
கண்ணொளியில்! கண்ணொளியில்! மெக்கா தந்த
சித்தனை நான் காண்கின்றேன், அண்ணா! உன்றன்
சீரியதோர் நெற்றியினில்! காந்தி என்ற
உத்தமனைக் காண்கின்றேன், அண்ணா! உன்றன்
உயர்பண்பில்! வளர் அன்பில்! சேவை மூச்சில்!

தொண்டைநாட் டில்பிறந்த அண்ணா, உன்றன்
தொண்டைநா டித்தானே நாங்கள் உள்ளோம்!
பண்டைநற் றமிழ்மாண்பை மீண்டும் வையப்
பார்வைக்குக் கொண்டுவந்தாய்; தந்தாய்! வெண்கற்
கண்டைப்போல் சுவையுள்ள எழுத்தாக் கத்தால்,
கருநெல்லிச் சொல்விருந்தால் இளைஞர் கூட்டம்
வண்டைப்போல் தன்னருகே வரச்செய் துள்ளோர்
வரலாற்றில் சிலர்; சிலருள் முதல்வன் நீயே!

திட்டியவன் மனம்வருந்தப் பொறைப்பண் பாட்டைத்
தீட்டியவன் நீ! இடியா அன்புக் கோயில்
கட்டியவன் நீ! நல்ல அறிவுப் பாதை
காட்டியவன் நீ! மான்மா னத்தை உள்ளம்
ஓட்டியவன் நீ! ஆடும் பழமைப் பேயை
ஒட்டியவன்-தமிழ்பழித்தோர் தலையில் ஓங்கிக்
குட்டியவன் நீ! எழுச்சிப் படையை மேலும்
கூட்டியவன் நீ! உயர்ந்த குறிஞ்சிப் பூநீ!

பொதியமலை, சிற்பங்கள் பேசும் மல்லை,
புலிக்கொடியோர்க் குரியதஞ்சைக் கோயில், பொன்னி
நதி-இவற்றால் கிடைக்கவில்லை இந்தத் தென்றல்
நாட்டுக்கு வான்கீர்த்தி; அண்ணா! மங்காப்
புதியஒளி, புதிய இசை, புதிய வாழ்த்து
பூமணம்போல் தினம்கிடைப்ப தெல்லாம் உன்னால்!
அதிசயம் நீ! அமுதம்நீ! அண்ணா! உன்மேல்
ஆனந்தப் பண்ணிசைக்கும்; இனிக்கும் என்நா!

கீற்றுமதி போல்நுதலும் மீன்போல் கண்ணும்
கிளிமொழியும், அனநடையும் கொண்ட பெண்கள்
நூற்றுவரைப் பாடியுள்ளேன்; எதையெல் லாமோ
நூதனமாய்ப் பாடியுள்ளேன்; பாடி என்ன?
நேற்றுவரை என்கவிதை கவிதை அல்ல;
நெஞ்சினிக்க இன்றுன்னைப் பாடி விட்டேன்;
காற்று, வரை உள்ளவரை இனிமேல் என்றன்
கவிதைவா ழும்;! அண்ணா கவிஞன் ஆனேன்!

*சிவகங்கையில் நடந்த 'எழுச்சி நாளு'க்கு*
*அண்ணா வருகை தந்த போது சுற்றறிக்கையாக*
*அச்சிட்டு வழங்கப்பட்டது. கவிதையின் ஒருபகுதி*
*'தென்னரசு' இதழில் வெளிவந்தது. டிசம்பர் 1964*

# உயிர்த் திருநாள்!

ஒருமுறைதான் வரும்; வாழ்வில் வாய்ம ணக்கும்
உரையாடல் தொடக்கிவைக்கும்; இரண்டு நெஞ்சில்
ஒருநினைவை உண்டாக்கும்; அடடா! அந்த
உயிர்த்திருநாள் திருமணநாள்! ஆண்டுதோறும்
பொருளற்ற விதத்தில்வரும் விழா நாள் எல்லாம்
புசிக்கமுடி யாவேப்பங் காய்நாள்! நோய்நாள்!
திருமணமோ தித்திக்கும் பலாச்சு ளைநாள்!
தெய்வீக மாளிகையைத் திறக்கும் பொன்னாள்!

ஆட்டனத்தி ஆதிமந்தி நெருக்கங் கொண்டே
அணுவிற்குள் அணுத்தோற்றம் எடுத்தார்; வஞ்சி
நாட்டரசன் குட்டுவனும் இளவேண் மாளும்
நாளெல்லாம் காமத்துப் பால்கு டித்தார்;
பாட்டரசர் பிசிராந்தை யாரும் காதற்
பள்ளியிலே பொழுதெல்லாம் படித்தார்; முன்னோர்
ஏட்டிலுள்ள இத்தகைய செய்தி யாவும்
இனியதமிழ்த் திருமணத்தின் ஏற்றங் கூறும்!

அன்றலரும் தாமரைப்பூ இதழில் உள்ள
அழகினையும் தேனினையும் எடுத்து மாலைத்
தென்றல்தோன் றும்பொதிய மலையில் ஓங்கித்
திகழ்கின்ற சந்தனத்தில் வைத்துக் கூட்டி
ஒன்றாக்கித் திருமணத்தைத் தேனீக் கூட்டம்
உருவாக்கும்; இது இயற்கை! இதைப்போ லத்தான்
தொன்றுதொட்டுத் தமிழ்மரபுத் திரும ணத்தில்
தூயஉள்ளப் பிணைப்புண்டு!செயற்கை இல்லை!

தமிழ்தந்த இலக்கியத்தில் சாதி இல்லை!
தாழ்ச்சிஉயர் வென்பதில்லை; பொதுமை உண்டு!
தமிழ்தந்த வரலாற்றில் பொய்ம்மை இல்லை;
தளைஇல்லை; கறைஇல்லை; வீரம் உண்டு!
தமிழ்தந்த பண்பாட்டில் வஞ்சம் இல்லை;
தன்னலத்தின் நிழல்இல்லை; ஈரம் உண்டு!
தமிழ்தந்த திருமணத்தில் சூழ்ச்சி இல்லை;
தரகர்களுக் கிடமில்லை; காதல் உண்டு!

பரமக்குடி
பேராசிரிர் பாமணி - மணிமொழி
திருமண நினைவு மலரில்
வெளிவந்தது 2-6-1963

# பாட்டாளித் திருநாள்

சிங்காரத் தமிழகத்தில் 'தைதை' என்றே
    சிரித்தாடி வருகின்ற கவிதைப் பெண்ணே!
மங்காத பசும்பொன்னே! உழவன் வீட்டு
    மருமகளே! திருமகளே! தலையைத் தொட்டுத்
தொங்காமல் தொங்கும் பூ மரத்தின் கீழே
    தோகைமயில் நடனமிடப் பார்த்தால் உள்ளம்
பொங்காமல் இருப்பதில்லை; உன்னைக் கண்டு
    பூரிக்கா திருப்பவரும் புவியில் இல்லை!

செஞ்சிக்கும் தேசிங்கு ராச னுக்கும்
    சிறப்பான உறவுண்டு; வாழும் பூவா
வஞ்சிக்கும் சேரர்தம் பரம்ப ரைக்கும்
    வரலாற்றுத் தொடர்புண்டு; தகடூர் வேந்தன்
அஞ்சிக்கும் ஔவைக்கும் சான்றோர் போற்றும்
    அன்புள்ளப் பிணைப்புண்டு; மணம்ப ரப்பும்
இஞ்சிக்கும் மஞ்சளுக்கும் தையே, உன்றன்
    இனிப்பான வருகைக்கும் சொந்தம் உண்டு.

உதித்தெழுந்த இளம்பரிதி வானில் தீட்டும்
ஒளி ஓடை ஓவியத்தைப் பார்த்துத் துள்ளிக்
குதித்தாடும் குழந்தையுடன் பெண்கள், வீட்டில்
கோலமிட்டுக் குத்துவிளக் கேற்றி வையை
நதித்தமிழில் புதுத்தமிழில் பாடிப் போற்றி
நாடெங்கும் கொண்டாடும் வண்ணம் மெல்ல
மதித்தெழுந்து வந்த உன்னை வரவேற் பார்கள்!
மார்கழிப்பெண் பெற்றெடுத்த மகளே! வாவா!

திசையெங்கும் ஒளிவெள்ளம்! அடடா
தெருவெங்கும் களிவெள்ளம்! தோர ணங்கள்
அசைந்தெங்கும் அழகாகத் தொங்கும்; சொட்டும்
அருவிதரும் ஓசைபோல் செவிந னைக்கும்
இசைபொங்கும் எங்கெங்கும்! வியர்வை சிந்தும்
ஏருழவர் இல்லத்தில் ஒட்டிக் கொண்ட
பசைபோன்ற பசிநீங்கும்; இன்பம் பொங்கும்!
பாட்டாளித் திருநாளே, எல்லாம் உன்னால்!

*1963இல் எழுதியது.*
*2002 'செம்மலர்' பொங்கல்*
*சிறப்பிதழில் வெளிவந்தது.*

# கரும்புத் திருவிழா

தைத்திருநாள் வருகைபார் தம்பி! வெல்லத்
தமிழ்உள்ளம் தனில்இன்ப வெள்ளம் சேர்க்கும்
மெய்த்திருநாள் மேன்மைபார்! அறிவை வாட்டி
மெலியவைக்கும் தேவையற்ற பண்டி கைகள்
பொய்த்தினிமேல் போய்விடும்பார்! வானில் பாயும்
புலிச்சின்னப் புகழ்மன்னன் கரிகா லன்றன்
கைத்திருவாள் வெளிச்சம்போல் மின்னு கின்ற
கதிர்மணியின் குவியல்பார்! கரும்பைப் பார்பார்!

காடுகளில் நெளிந்தோடும் நதியின் போக்கில்
கண்கவரும் கவின்இருக்கும்; பழைய செய்யுள்
ஏடுகளில் நாகரிக மேன்மைக் கான
எண்ணங்கள் கொலுவிருக்கும்; தூங்கும் செந்தேன்
கூடுகளில் இனிப்பெல்லாம் குடியி ருக்கும்;
குத்துவிளக் கேற்றிவைக்கும் தமிழர் நாட்டின்
வீடுகளில் வீதிகளில் களிப்பி ருக்கும்;
விழாக்கோலச் செழிப்பிருக்கும், பார்பார் தம்பி!

சந்தனத்தை சமுத்திரத்தின் முத்தை வையச்
சந்தைக்குத் தந்தோம்நாம்; காட்டு யானைத்
தந்தத்தை மயிற்பீலி தன்னை வையம்
சந்திக்கத் தந்தோம்நாம்; நாவி னிக்கும்
செந்தமிழில் விளைந்தகுற ளமுதை வையம்
சீர்திருத்தம் பெறத்தந்தோம்; போதா தென்று
வந்தனத்திற்கு குரியஒரே தைவி ழாவை
வையத்திற்கே பொதுவாய்த் தந்தோம் தம்பி!

*'1963'*

# நம்பிக்கை நாள்!

ஓரணியில் நின்றாக வேண்டும் - இந்தத்
தாரணியில் தொழிலாள ரெல்லாம்....
(ஓரணியில்....)

ஆரணியில் வாழ்ந்தாலென்?
திருத்தணியில் வாழ்ந்தாலென்?
அட்டையென உழைப்புறிஞ்சும்
முதலாளி என்பார் -
போரணியில் தீவைக்கப்
புறப்பட்டால் போதும்; பின்
பொல்லாத தீயர்கள்
புல்லைத்தான் தின்பார்
(ஓரணியில்....)

பதினெட்டாம் நூற்றாண்டில்
சிகாகோ நகரத்தில்
பதினெட்டாம் பெருக்கான
பாட்டாளி இதயம்

புதுத்திட்டம் தீட்டியதால்
　　புயல்வேகம் காட்டியதால்
பொன்னான மேநாள் - இப்
　　பூதலத்தில் உதயம்!

(ஓரணியில்....)

பாடுபடும் வல்லத்தோள்
　　படைதிரண்டால் இங்கென்ன
பாடுபடும் தனியுடைமை?
　　பட்டுவிடும் மண்ணில்!
நாடுபடும் உயிர்வாதை
　　ஓடிவிடும் என்கின்ற
நம்பிக்கை விடிவெள்ளி
　　மேநாள் - நம் கண்ணில்!

(ஓரணியில்....)

# †ஆண் ஔவை

வையைநதிக் கரையினிலே வளமுண் டாக்கி
    வருகின்ற வாரிதியே! கண்ணில் தீட்டும்
மையைவிடக் கறுப்பான மனவி ருட்டை
    மாய்க்கின்ற கதிரவனே! பசுவின் தூய
நெய்யைவிட மணமுள்ள குறட்க ருத்தை
    நெடுஞ்செழியன் நிலமிருந்து வழங்கி இந்த
வையகத்தை வாழ்விக்கும் மழையே! என்றும்
    வளர்கின்ற துரைசாமி மலையே! வாழ்க!

---

† இது, சிவகங்கை வள்ளுவர் இலக்கியப் பேரவையின் சார்பில் மூன்றாம் ஆண்டுக் குறள் விழாவில் - உரைவேந்தர். ஔவை சு.துரைசாமி அவர்கட்குக் கவிஞர் பாடியளித்த மணிவிழாப் பாராட்டிதழ்.

தரைவேந்தர் வேலாட்சி குறைந்த போதும்
    தமிழ்வேர்ந்தர் கோலாட்சி மறைந்த போதும்
உரைவேந்தர் நூலாட்சி உயரக் கண்டோம்;
    உண்மையிலே உளங்குளிர்ந்தோம்! தன்நாட்டில்தான்
வரிவேந்தர் புகழ்செல்லும்; சங்கப் பாட்டு
    வரிவேந்தர் தங்கள் புகழ் முத்துத் தூங்கும்
விரிகடலுக் கப்பாலும் செல்லும்; தெற்கில்
    வீசும்சந் தனக்காற்றும் வாழ்த்துச் சொல்லும்!

உங்கள்நற் பிறப்பறிந்த பின்னர் தானோ
    உ.வே. சா இளைப்பாறச் சென்றார்? ஐயா!
உங்கள் சிந் தனைவளத்தை நம்பித் தானோ
    ஒளிநெஞ்சர் திரு. வி.க உறங்கச் சென்றார்?
உங்கள் நா வன்மையினை நம்பித் தானோ
    உயர் ச.சோ. பாரதியார் அமைதி கண்டார்?
உங்கள் முத் தமிழ்ப்புலமை நம்பித் தானோ
    உரைகாரர் அனைவருமே ஓய்வெ டுத்தார்?

பயனுள்ள வரலாற்றைத் தருவதாலே
    பரணர்தான்; பரணர்தான் தாங்கள்! வாக்கு
நயங்காட்டிச் செவிக்குத்தேன் தருவ தாலே
    நக்கீரர் தான்தாங்கள்! இந்த நாளில்
கயல்மன்னர் தொழுதமொழி காப்ப தால் - தொல்
    காப்பியன்தான்! காப்பியன்தான் தாங்கள்! எங்கும்
தயங்காமல் சென்றுதமிழ் வளர்ப்ப தாலே
    தாங்கள் அவ்-ஔவைதான்! ஔவை யேதான்!

அதியன்இன்(று) இங்கில்லை: இருந்தி ருந்தால்
அடடாவோ ஈதென்ன விந்தை! இங்கே
புதியதொரு ஆண்ஔவை எனவி யப்பான்
பூரிப்பான்; மகிழ்ச்சியிலே மிதப்பான்; மற்றோர்
அதிமதுரக் கருநெல்லிக் கனிகொ ணர்ந்தே
அளித்துங்கள் மேனியினைக் காத லிக்கும்
முதுமைக்குத் தடைவிதிப்பான்; நமது கன்னி
மொழிவளர்க்கப் பல்லாண்டு வாழ்க என்பான்

# வினாவும் விடையும்

குருச்சேவைப் போற்று வேன் நான்!
கொடிமரம் போலே ஓங்கி
இருபதாம் நூற்றாண் டில் ஓர்
இணையிலாத் தலைவ ரானார்!
திருப்பதித் தலையுள் பூத்த
சிந்தனை யாலே வையம்
உருப்படி யாக மேலே
ஒருபடி ஏறச் செய்தார்!


தாய்த்திரு நாட்டிற் கன்றித்
தரணிக்கே ஆனார்; ஆடு
மேய்ப்பவ ராகிப் பின்னர்
மின்வேக உயர்ச்சி கண்டார்;
ஏய்ப்பவர், ஏழை வாழ்வை
இருட்டாக்கும் திருட்டெண் ணத்தை
மாய்ப்பதற் காக என்றும்
மார்தட்டி முன்னால் நின்றார்!

அதிகமாய்க் கற்றா ரல்லர்;
ஆயினும் அறிஞர்; மக்கள்
எதையுமே விளங்கிக் கொள்ள
எளிதான - ஏற்ற குட்டிக்
கதைகளைக் கூறும் ஆற்றல்
கைவரப் பெற்ற மேதை!
எதிரியைக் கவிழ்க்கப் பேச்சில்
எள்ளலை வீசும் சூரர்!

அணுச்சக்தி யாலே ஞால
அமைதியாம் அனிச்சப் பூவை
அணுவள வேனும் வீணாய்
அழித்தாரா? காத்தார்! உண்மைத்
துணிச்சல் இஃ தன்றோ! யுத்தம்
தூ! தூ! தூ! தொழுநோய் எண்ணம்!
மணிச்சிற கடிக்கும் புள்ளாய்
மனிதனை வாழ வைத்தார்.

இருக்கலாம் இன்று; நாளை
இறக்கலாம்! பதவிக் கட்டில்
இருக்காலம் இன்று: நாளை
இறங்கலாம்! இருந்த நாளில்
சரித்திரம் மதிக்க என்ன
சாதித்தாய்? - இதுதான் கேள்வி;
குருச்சேவை விடைஎன் பேன்! அக்
குரு - சேவை போற்று வேன் நான்!

1964



# தலைவன் வருகிறான்

தலைவன் வருகிறான்! தலைவன் வருகிறான்!
அலைகடல் எழுப்பும் ஆரவா ரம்போல்
வாழ்த்திசை! வாழ்த்திசை! வாழ்த்திசை எங்கணும்!

மகளிர் நறிய மலர்களைத் தூவப்
பாவலர் பாராட்டுப் பன்னீர் தெளிக்க
பாணர் உரிமைப் பண்ணைப் பாட
மறவர் வீர வணக்கம் செலுத்த
'நெடுவான் தன்னையும் நிமிர்ந்த புகழால்
தொடுவான் இவன்' எனத் தொன்னிலம் இயம்பத்
தலைவன் வருகிறான்! தலைவன் வருகிறான்!

அழுகிய முட்டை அனைய சாத்திரம்
உடைக்கப் - புரட்சி உலகைப் படைக்க
நச்சுக் கனியில் புழுத்த புழுப்போல்
சதியில் புழுத்த சாதியைப் புதைக்க
வறுமையும் பிணியும் வாழும் விழிக்குப்

புதுச்சுடர் காட்டப் பொன்விளக் கேற்ற
மேட்டை வெட்டிப் பள்ளம் உயர்த்திச்
சமதர் மப்பயிர் தழைக்கச் செய்யத்
தலைவன் வருகிறான்! தலைவன் வருகிறான்!

இறைவனைத் தேடி எங்கே அலைகிறாய்?
மெய்யொளி தங்கும் மேனி வியர்வையில் -
உழைப்பில் இறைவன் உள்ளான் என்றே
உரைக்க - மானிட அறிவை உரைக்க
எழுதவும் படிக்கவும் இயலா திருக்கும்
கையும் கண்ணும் காணோம் என்னும்
புதுயுகம் ஒன்றைப் பூமியில் சமைக்க
அடிமைத் தளையை அடித்து நொறுக்கக்
கல்போல் பலத்த கருத்தை அளிக்கத்
தலைவன் வருகிறான்! தலைவன் வருகிறான்!

தலைவன் வருகிறான்! தலைவன் வருகிறான்!
எலிகள் கோடி எங்கோ ஒதுங்க
ஓநாய் இலட்சம் ஓடி ஒளிய
நரிகள் ஆயிரம் நடுங்கி மறைய
அரிமாப் போல அஞ்சா நெஞ்சத்
தலைவன் வருகிறான்! தலைவன் வருகிறான்!
தலைவன் வருகிறான் தாயகம் போற்றவே!

*1964*

*"வான மழைபொழிதல் போலவே - நித்தம்
வந்து பொழியுமின்பங் கூட்டுவீர்;
கானை அழித்து மனை கட்டுவீர் - துன்பக்
கட்டுச் சிதறிவிழ வெட்டுவீர்"*

- மகாகவி பாரதி

# மழைத் துளிகள்

# எதற்காம் இரண்டு வர்க்கம்?

உழைக்கும் கரங்கள் ஒன்றாய் உயர்ந்தால்
ஒளியின் பாதை தெரியும் - ஏய்த்துப்
பிழைக்கும் எத்தர் பெருக்கும் வஞ்சப்
பேதக் கோட்டை சரியும்.

இறைவன் படைத்தான் என்றால் ஒழிக
எதற்காம் நரகம் சொர்க்கம்? - சீச்சீ!
இறைவன் படைத்தான் என்றால் வெட்கம்
எதற்காம் இரண்டு வர்க்கம்?

கடலின் அலைகள் கைகோர்த் திசைக்கும்
கவிதை கேட்டும் மனிதா, - உன்றன்
உடலில் ஒட்டிய உயிரைப் போன்ற
ஒற்றுமை மறத்தல் இனிதா?

கண்ணில் கருத்தில் கனல்கொண் டால், பின்
கயமைக் காடு சாம்பல்! - இந்த
மண்ணில் மலரும் அன்பு முல்லை;
மலரும் இன்ப ஆம்பல்!

1964

# மீசை இருந்தது!

ஆல மரத்தின் அடியில் ஒருவன்
சிட்டுக் குருவியைச் சீட்டுக் குருவியாய்
ஆக்கி ஏதோ அளந்துகொண் டிருந்தான்;
'எதிர்கா லத்தைப் பார்க்கலாம்' என்றுநான்
கேட்டகா சளித்தேன் அவனிடம். உடனே
கூண்டைத் திறந்தான்; குருவி வந்தது;
வந்த குருவி வழக்கப் படியோர்
சீட்டை எடுத்துக் கொடுத்துச் சென்றது;
அதனை,
விரித்துப் படித்தேன். 'விரைவில் நல்ல
அம்சமும் செல்வமும் அமையப் பெற்ற,
கணவன் கிடைப்பான், கவலைப் படாதே'
என்றச் சீட்டில் எழுதி யிருந்தது!
சீட்டைப் போட்டுச் சிரித்தேன்; ஒருகால்
மங்கையாய் இந்நேரம் மாறி யிருக்கலாம்
என்று நிசமாய் எண்ணிப் பயந்து
மீசையைத் தடவிப் பார்த்தேன்!
மீசை இருந்தது மிகப் பெரிதாகவே!

மலேசிய இதழொ
வெளிவந்தத

# இதுதான் இந்தியா!

ஔரங்க சீப்பின் அப்பன் அன்றைக்கு
ஆக்ரா நகரில் அதிசய மாகக்
கட்டி வைத்துள காதற் கோயிலைக்
கண்டேன்! கண்டேன்! கன்னிய ரோடு
யசோதை மைந்தன் பாடித் திரிந்த
யமுனைக் கரையை, யாவரும் புண்ணியம்
தேடித் தீர்த்தம் ஆடிக் களிக்கும்
கங்கை நதியைக் கண்டேன்! கண்டேன்!
பனிபடர் இமயம் பண்டரி புரத்தொடு
பற்பல இடத்தைப் பார்த்தேன்! பார்த்தேன்!
கொடிபறக் கும்செங் கோட்டை நகர்முதல்
பற்பல நகர்களைப் பார்த்தேன்! பார்த்தேன்!
ஆலைகள் அணைகள் அரிய பெருந்தொழிற்
சாலைகள் கண்டேன்! வானளா வுயர்ந்த
கூடமும் மாடமும் கோயிலும் கண்டேன்!
அடடா இன்னும் ஆயிரம் கண்டேன்!

சுதந்திர பாரதம் சுறுசுறுப் பாக
வளர்வதைக் கண்டேன்; திட்டங்கள் தீட்டி

வளர்க்கும் தலைவரை வாழ்த்துவ தெங்ஙனம்?
என்னே அவர்திறன்! என்னே இந்தியா!
என்று புகழ்ந்தார் எங்கள் மன்றத்தில்,
பாரதம் முழுவதும் பார்த்து அண்மையில்
திரும்பி வந்த திருப்பதி சாமி!

உடனே,
திருப்பதி சாமி! திருப்பதி சாமி!
அற்புத முறையில் ஆசை பொங்க
பற்பல பகர்ந்தாய் பாரதம் பற்றி!
என்னென்ன வோவளர்ந் திருப்பது வாய்,நீ
எடுத்துக் கூறினாய்! எனினும் ஒன்றுகேள்!
ஒருபிடி சோறு உண்ணுதற் கின்றி
எலியைப் பிடித்து இளையபா ரதத்தினர்
தின்கின் றார்களாம்! இன்னும்ஓர் ஊரில்
புல்லையும் வேரையும் புசிக்கின் றார்களாம்!
கல்லையும் பசியால் பல்லால் கடிக்கும்
காலம் கூடக் கடுகிவந் திடலாம்;
இதுதான் நமது இந்தியா; இல்லையா?
இயம்பிடு வாய்நீ என்று கேட்டான்
ஆத்திரத் தோடு அய்யாச் சாமி!

அடுத்து,
திருப்பதி சாமி! திருப்பதி சாமி!
புலவன் ஒருவன் புனைந்துரைப் பதைப்போல்
இந்திய நாட்டின் எழிலைக் காட்டினாய்!
நன்று! நன்றுஉன் நாட்டபி மானம்!
இன்றைய செய்தி இதழ்படித் தாயா?
அருப்புக் கோட்டையில் ஆறுமுகம் என்பவன்

காச நோயினால் கடும் துய ருற்றே
இருமி இருமி எலும்புக் கூடாகி
மதுரை அரசாங்க மருத்துவ மனைக்கு
அனுமதி கேட்டு மனுப்போட் டானாம்!
எப்போ(து) என்கிறாய்? ஏழாண்டு கட்குமுன்!
பத்துநாட் களுக்குமுன் படுக்க வாவென
ஆறுமுகத் துக்கு அஞ்சல் போனதாம்;
அஞ்சலை வாங்கி ஆறுதல் அடைய
அவன் அங்(கு) இல்லை! இரண்டாண்டு கட்குமுன்
காலன் சாவுக் கடிதம் போட்டு
ஆறு முகத்தை அழைத்துக் கொண்டாளாம்!
எப்படி நமது இந்தியா? என்று
சினத்துடன் கேட்டான் சின்னச் சாமி!

பின்னர்,
திருப்பதி சாமி! திருப்பதி சாமி!
இராமா யணத்தில் இலங்கையைப் புகழும்
ஆஞ்ச னேயன்போல் அழகாய்ப் புகழ்ந்தீர்!
உச்சிப் பொழுதில் ஒருநாள் ஆற்றங்
கரையில் நானும் கழுகா சலமும்
நின்றுகொண் டிருந்தோம்; ஆற்றில் ஒருவர்
இரண்டுமணி நேரம் பிறந்த மேனியுடன்
குழந்தை போலக் குளித்துக் கொண்டிருந்ததைக்
கண்கள் இரண்டால் கண்டோம்; பிறகுதான்
அவ்வளவு நேரம் அவர்குளிப் பதற்குக்
காரணம் அறிந்தோம்! கந்தையா யிருந்த
வேட்டி மரத்தில் காய்ந்தகொண் டிருந்தது!
இன்னொரு வேட்டி இல்லை போலும்!
ஒற்றை வேட்டி உலரும் வரை அவர்

தண்ணீர் ஆடையைத் தரித்து நின்று
கண்ணியந் தன்னைக் காப்பாற்றக் கண்டோம்!
இப்படி எத்தனை ஏழைகள் உளரோ?
இப்படி எத்தனை காட்சிகள் உளவோ?
எப்படி இந்தியா? இதுதான் இந்தியா!
என்றே கொஞ்சம் ஏளனச் சிரிப்புடன்
கூறி முடித்தான் குப்பு சாமி!

நானும்,
திருப்பதி சாமி! திருப்பதி சாமி!
உரைப்பது ஒன்றுகேள்! நின்றுகேள்! என்று
திரும்பிப் பார்த்தேன் திருப்பதி சாமியை!
பாவம்; அவரோ பாரம்தாங் காமல்
சோகம் பரவிய முகத்துடன்
வேகமாய்ப் போனார் வீட்டை நோக்கியே!

*1963*

# வேட்கை!

கடலின் கரையில் மணலில் மாளிகை
கட்டிட விரும்புகின்றேன்
கதிரின் பிழம்பைக் கையால் தழுவிடக்
காதல் கொள்ளுகின்றேன்

உடலின் கூடுவிட் டுயிரால் ஓடி
உலவிட விழைகின்றேன்
ஊருணி நீர்மேல் ஓவியம் தீட்டும்
உரத்தை வேண்டுகின்றேன்.

படமெடுத்தாடும் பாம்பின் நஞ்சைப்
பருகிடத் தவிக்கின்றேன்
பாறைப் பரப்பில் பச்சைப் பயிரைப்
பார்க்கத் திரிகின்றேன்.

சுடர்விடு மின்னைப் பிடித்தே வாளாய்ச்
சுழற்றிடத் துடிக்கின்றேன்.
சுளைத்தேன் பழத்தில் சிவந்த கனலின்
சூட்டைத் தேடுகின்றேன்.

மண்ணுக் குள்வெண் முத்துக் குளிக்கும்
மாயம் நாடுகின்றேன்.
மாலைப் பொழுதைக் காலைப் பொழுதாய்
மாற்றிடப் பார்க்கின்றேன்.

விண்ணுக் கொளிதரும் வெள்ளிக் கிண்ணியில்
விருந்துண விரும்புகின்றேன்.
வெண்முகி லுக்குள் படுத்துக் கிடக்க
வேட்கை கொள்ளுகின்றேன்.

கண்ணுக் குள்உள தூக்க உணர்வைக்
கவிசெயத் தவிக்கின்றேன்.
கையில் மலையைக் கடுகாய் நிறுத்திக்
காட்டக் கருதுகின்றேன்.

எண்ணுக் குள்ளே முட்டை வடிவம்
எடுக்க நினைக்கின்றேன்.
என்னுள் நானே இல்லை என்றே
இசைக்கப் பார்க்கின்றேன்.

*1962 - 'சுவை தொகுப்பிலிருந்து.*

# போலிகளை நம்புகிறாய், போ! போ!

சரி, போ! போ! எக்கேடுங் கெட்டுப் போ! போ!
சமுதாய மே!அடுப்பில் மூட்டத் தக்க
எரிவிறகு தருமரமாய்ப் பட்டுப் போ! போ!
எனக்கென்ன எக்கேடுங் கெட்டுப் போ! போ!
நரிஊளைச் சத்தத்தைக் கேட்டு விட்டு
'நாதசுரம்! யாழோசை!' என்றே உண்மை
புரியாமல் பிதற்றிக் கொண்டி ருக்கும் உன்றன்
போக்கையா ரால்மாற்ற முடியும்? போ! போ!

குடிலர்கள் கூடாரம் ஆய்விட் டாய் நீ!
கோட்சேக்கள் குகையாக மாறி விட்டாய்!
படிக்காத பேதைகளின் விமர்ச னத்தைப்
'பார்அடடா!' என்றியம்பத் தொடங்கி விட்டாய்!
தடியெடுத்த கயவர்க்குத் தாளம் போடும்
சமுதாய மே!உன்மேல் பற்றிக் கொண்ட
கொடியபிணி கொல்லவந்த மருந்து வர்தம்
குரல்வளையைப் பிடிப்பதற்கும் துணிந்து விட்டாய்!

தறிபார்த்து நெய்ததுணி போன்ற மென்மைத்
    தத்துவத்தைத் தணல்மேலே வீசு கின்றாய்;
வெறிபோர்த்த சதைத்திமிரைக் காட்டு கின்றாய்;
    வீரத்தைத் தியாகத்தைச் சத்தி யத்தைக்
குறிபார்த்துச் சுடுகின்றாய்; சமத்து வத்தைக்
    குழிதோண்டிப் புதைக்கின்றாய்! முள்ளில் லாத
'நெறிபார்த்து வா' என்னும் நல்லோ ரைநீ
    நெஞ்சினிலே மிதிக்கின்றாய்; இதுவா நீதி?

வேடமிட்டுத் தழைப்போரை, ஞானி போல
வெளிச்சமிட்டுப் பிழைப்போரைப், பொருள் உடம்பைக்
கூடமட்டும் கூடிப்பின் ஒழுக்கம் பற்றிக்
    கூசாமல் உரைப்போரை, மதுவ ருந்தி
ஆடமட்டும் ஆடிப்பின் அருள்பா லிக்க
    ஆண்டவனை அழைப்போரை எல்லாம் நன்றாய்ச்
சாடமட்டும் சாடாமல் தழுவு கின்றாய்;
    சமுதாய மே! நீதி வழுவு கின்றாய்!

காட்டுப்பூ மணம் வீசும் என்றால், இல்லை
    காகிதப்பூ மணம் வீசும் என்பாய்; வீட்டு
மாட்டுப் பால் சுவைகொடுக்கும் என்றால், கள்ளி
    மரத்தின் பால் சுவைகொடுக்கும் என்பாய்; நல்ல
மேட்டுநில மயில்நடனம் நன்றென் றால் நீ
    மிகநன்று வான்கோழி நடனம் என்பாய்;
ஏட்டுக்காய் கறிக்குதவும் என்று வீணாய்
    எண்ணுகின்றாய்; போலிகளை நம்பு கின்றாய்!

சாதியென்ற முகமூடி அணிந்து கொண்ட
    சமுதாய மே! ஆதாம் ஏவாள் வாழ்ந்த
ஆதிதினம் தொடங்கியுனைத் திருத்த எண்ணி
    ஆயிரம் பேர் அறிவுரைகள் சொன்னார்; ஆனால்
பாதியள வேனும் நீ கேட்டா யா? சொல்!
    பகுத்தறிந்து பார்த்தாயா? நீயா பார்ப்பாய்!
நாதியற்ற பிணமாக விரும்பும் உன்னை
    நான்தடுக்க வாமுடியும்? நாச மாய்ப் போ!

'தமிழ்நாடு'
1963

# நெஞ்சே நில்! நில்!

திசை மாறிப் போகாதே! நெஞ்சே, நில்! நில்!
தெளிவின்றிக் குழம்பாதே! என்றும் எங்கும்
அசைபோட்டுத் திரிகின்ற கோயிற் காளை
ஆகாதே; கட்டின்றி அலைந்தி டாதே!
தசைகுருதி நரம்புகளின் பொல்லா இச்சைத்
தாக்குதலைத் தாக்காமல் தகர்ந்து போக
இசையாதே! நெருப்பழுகுக் கிரையா காதே!
இலையிழந்த மரத்தோற்றம் எடுத்தி டாதே!

வானைப்போய்க் கிழிக்கின்ற மூங்கில் போல
வளர்வதற்குத் துடித்திட்ட நீயே,இன்று
கூனிப்போய்த் - தண்டுமிலாக் கீரை போலக்
குறுகிப்போய் விடலாமா? பசியெ டுத்த
பூனைபோல் பார்க்காதே! கண்ட கண்ட
பூவைப்போய்ப் புணர்கின்ற வண்டா காதே!
தேனைப்போல் இனிக்கிறதே என்றி ழிந்த
தேகசுகம் தேடாதே! சிதைந்தி டாதே!

விழுஎன்று பேராசை சொன்னால், நம்பி
    வீழாதே பள்ளத்தில்! வயல் வாழ் நாங்கூழ்ப்
புழுபோல வாழாமல் ஊண்கெ டுக்கும்
    புழுவாக மாறாதே! இலக்க ணத்தில்
வழுஎன்றால் கூடஅதற்(கு) அமைதி உண்டு;
    வழுஉனக்கு வருமாயின் அமைதி இல்லை!
கழுத்தளவு தண்ணீரில் மூழ்கிப் பின்னர்
    கதறாதே! பதறாதே! நெஞ்சே, நில்! நில்!

கற்பனைக்கும் கனவுக்கும் காகி தப்பூக்
    காட்சிக்கும் கவர்ச்சிக்கும் மொத்த மாக
விற்பனைக்குக் கொடுக்காதே உன்னை, நெஞ்சே!
    விழலுக்கு நீர் பாய்ச்ச விரைந்தி டாதே!
'அற்புதம் ஆ! உன் ஆக்கம் இமயம்' என்றே
    அருகிருந்து பத்துப்பேர் கூடிச் சிந்தும்
சொற்புகழ்ச்சி மழையினிலே நனைந்து வெற்றுச்
    சுகங்காண ஏங்காதே! ஏமா றாதே!

அருளுக்கும் அன்புக்கும் புத்தன் சொன்ன
    அறத்துக்கும் வரவேற்பை அளித்தி டாமல்
பொருளுக்கும் பொன்னுக்கும் போகத் துக்கும்
    பொய்ப்பாடல் புனையாதே! 'நான் நான்' என்னும்
இருளுக்குள் நுழையாதே! வெறிபி டித்தே
    இருட்டறையில் சிற்றின்பம் தேடித் துய்க்க
நெருங்காதே! சில்லென்று பூத்தி ருக்கும்
    நெருஞ்சியிலே நடக்காதே! நில்! நில்! நெஞ்சே!

'தமிழ்நாடு'
1963

# ‘வேலை இருக்கிறது நிரம்ப...’

வேலை இருக்கிறது நிரம்ப - என்னை
வேகப் படுத்திவிடு தாயே! -பசுஞ்
சோலை மரத்தின் குளிர்நிழலில் - மனஞ்
சொக்கவைக் கும்பூ நகையில் - அந்தி
மாலை மதிய முதளழிலில் - நான்
மயங்கிக் கிடந்தேனே நாளும் - ஆ!
வேலை இருக்கிறது நிரம்ப - என்னை
வேகப் படுத்திவிடு தாயே!

பள்ளிக்குப் போய்வந்த நாளில் - சின்னப்
பட்டங்கள் விட்டுவிளை யாடிப் - பல
வெள்ளித் திரையில் மினுமினுக்கும் - சில
வேட மயமுகங்கள் கண்டு - நான்
துள்ளித் திரிந்தேனே யல்லால் - என்ன
தூய பணிசெய்தேன் தாயே? - என்றன்
உள்ளந் தனிற்கனல் மூட்டி - என்னை
ஊருக் குழைத்திடச் செய்வாய்!

காளைப் பருவத்தில் எல்லாம் - சுகக்
கன்னிக் கனவினில் மூழ்கித் - தினம்
வேளை தவறாமல் உண்டு - திண்ணை
வீழ்ந்து துயில்கொண்ட தல்லால் - இரு
தோளைத் திரண்ட மலையாக்கி - நான்
தொண்டு புரிந்ததுவும் இல்லை - இனி
நாளை உலகத்திற் கேனும் - என்னால்
நன்மை விளைந்திடச் செய்வாய்!

மேடை பலப்பல ஏறிக் - கரு
மீசை முறுக்கியே நின்று - நித்தம்
கோடை இடியாய் முழங்கி - ஒரு
கூட்டம் தனைச்சேர்த்த தல்லால் - சிறு
கூடை முடைந்ததும் இல்லை - உனைக்
கும்பிட்டுக் கேட்கிறேன் தாயே - நான்
பாடையில் ஏறிடும்முன்னர் - ஒன்றைப்
படைத்த பெருமை அளிப்பாய்!

அற்பக் கதைகள் படித்து - மன
தாரக் குடித்துக் களித்து - உடல்
விற்கும் வனிதையர் நிற்கும் - நெடு
வீதி இருட்டில் ஒதுங்கி - உயிர்க்
கற்பை இழந்தது மல்லால் - நல்ல
காரியம் என்னநான் செய்வேன்? - 'நவ
சிற்பி' இவனென என்னை - வையம்
செப்பிடச் செய்திடு வாயே!

மலையை உடைத்திட வேண்டும் - மின்னும்
    மணியை எடுத்திட வேண்டும் - கடல்
அலையில் மிதந்திட வேண்டும் - முத்தை
    அள்ளிக் கொணர்ந்திட வேண்டும் - காட்டு
நிலத்தை உழுதிட வேண்டும் - செந்
    நெற்குவை கண்டிட வேண்டும் - நான்
கலையிற் சிறந்திட வேண்டும் - கோடிக்
    கவிதை படைத்திட வேண்டும்!

வேலை இருக்கிறது நிரம்ப - என்னை
    வேகப் படுத்திவிடு தாயே! - கொடும்
பாலை வனத்தினைப் போலே - நான்
    பாழ்பட் டிருந்தது போதும் - வீரப்
பாலைப் கொடுத்திடு வாயே - வெற்றிப்
    பாக்கியம் நீதரு வாயே - அதி
காலைக் கதிரவன் போலே - முகங்
    காட்ட அருள்புரி தாயே!

தலைப்பு அண்ணா தந்தது
நா.பா.வின் 'தீபம்'
இதழில் வெளிவந்தது.
*1964*

# கயமையைக் கைது செய்!

ஏனடா தம்பி, தயக்கம்? எழுவாய்!
பழங்கதை பேசிப் பயனிலை! புதிதாய்ச்
செயப்படு பொருளைச் சிந்தையில் நிறுத்து!
நன்மையை நாடு; நாடுஉன் நாட்டை!
உண்மையைத் தழுவு நீ! உன்னைத் திருத்திப்
பிறரைத் திருத்து; பேணு பொதுநலம்!
சுயநலம் தனைச்சுடு! நினைவைச் சுத்தம்செய்!
சிறுமையை நீக்கு! சிந்திக்கப் பழகு!
மூலையில் கிடந்து முடங்கியது போதும்;
வெளியே புறப்படு! விழிகளைத் திறந்தே
ஆழியைக் கவனி; அலைகளின் எழுச்சிகேள்!
வானை நோக்கு! வரையை நோக்கு!
தூய்மை விளையும் தோட்டமாய் உன்னை
ஆக்கு நீ! அநீதியைப் போக்கு! சத்திய
சொரூபம் காட்டு! சுதந்திர மாய் நட!
எதற்கும்அஞ் சாமல் ஏறுபோல் நட! நட!
எங்கே அறத்தின் ஆலயம் உள்ளதோ
எங்கே அறிவுத் திருவிளக் குள்ளதோ

எங்கே அன்பின் வழிபா டுள்ளதோ
அங்கே தலைவை; ஆயிரம் மலர்வை!

இறைநிலை எய்தல் இருக்கட்டும்; முதலில்
மனிதனாய் மாறு; மாற்று உன் சாதியை!
செத்த பிணத்தைக் கொத்துங் கழுகினும்
கொடியதோர் உள்ளத்தைக் கொலைசெய்! இதோவாள்!
கயமையைக் கைதுசெய்; கடுந்தண் டனைகொடு!
'எல்லாம் எனக்கே என்ப தினிமேல்
எத்தர் ஏய்ப்புரை; இழிசினர் வழக்கு - நீ
உன்னால் முடிந்ததை ஊருக் குதவு;
உன்னால் முடியும்; உன்னை நீ நம்பு!
மனத்தையும் பணத்தையும் கறுப்பாய் மாற்றும்
பாவிகட் கிடையே பாடம் கூறு!
முதலா ளித்துவ முதுகெலும் பைமுறி!
பாடு படு வோர்க்கே பாரெனப் பாடு!
சமத்துவச் சங்கொலி செய்து
சமைத்திடு தம்பி, புதியதோர் தரணியே!

*1964*

# பிணம் என்று பெயர் சூட்டு!

தூக்கத்தை நீக்கியெழு!
துடித்தெழுநீ! துயரைவிடு!
தோழா! தோழா!

ஊக்கத்தைப் பெருக்குகிற
உற்பத்தி சாலைஉன்
உள்ளம்! நீர்போல்

ஆக்கத்தைப் பொதுவாக்கி
அகிலத்தைப் புதிதாக்கி
அறத்தைப் பாடும்

நோக்கத்தைப் பெரிதாக்கு;
நொந்தோரைத் தூக்கிவிடு,
நொடியில் தோழா!

குணம் ஒன்றும் இல்லாமல்
    குறிக்கோளைக் கொல்லாமல்
        கொல்வோ ருக்கும்

பணம்ஒன்றே வாழ்வென்று
    பசிகொண்டு வெறிகொண்டு
        பாழா வோர்க்கும்

பிணம்என்று பெயர்சூட்டு!
    பெரியதொரு குழியிலிட்டுப்
        பின்தா லாட்டு!
மனம்ஒன்றே கைலாயம்
    மதிஒன்றே பரம்பொருள்; நீ
        மகிழ்ந்து போற்று!

நீதிக்கும் நேர்மைக்கும்
    நிலையான கொள்கைக்கும்
        நிதமும் தூய்மை
சாதிக்கும் கரத்துக்கும்
    சனநாய கச்செங்கோல்
        தந்தி டாமல்
சாதிக்கும் பணத்துக்கும்
    தந்துதடு மாறுவோர்முன்
        சன்மார்க் கத்தைப்
போதிக்கும் ஆசானாய்ப்
    புறப்படு நீ! புகட்டிடுநீ,
        புத்தி தோழா!

*1964*

# எதிர்காலம் யாருக்கு?

உதிர்காலம் இனிமேலே யாருக்கு? - நெஞ்சம்
ஓட்டை அடைந்து - பிறர்
தேட்டைக் கவர்ந்து பிழைப்பாருக்கு - வரும்

எதிர்காலம் இனிமேலே யாருக்கு? - கையால்
ஏரைப் பிடித்து - நெற்றி
நீரைச் சிந்தி உழைப்பாருக்கு!

சிறைச்சாலை இனிமேலே யாருக்கு? - பொருள்
தேக்கிப் புதைத்துச் - சிறு
பாக்கி பறித்து வதைப்பாருக்கு - தூய

அறச்சாலை இனிமேலே யாருக்கு? - யாவும்
ஆக்கிக் கொடுத்துத் - துயர்
போக்கி அருளை விதைப்பாருக்கு.

பிணமாலை இனிமேலே யாருக்கு? -கதை
பேசிக் களித்து - மடப்
பாசி பிடித்துக் கிடப்பாருக்கு - புகழ்

மணிமாலை இனிமேலே யாருக்கு? - சோம்பல்
மாற்றிப் பறந்து - வினை
யாற்றித் துணிந்து நடப்பாருக்கு.

1963

# முருகனும்
# முத்தையா பிள்ளையும்

பட்டை பட்டையாய்ப் பழனி விபூதியை
நெற்றியில் பூசி நெஞ்சில் பூசி
செவியில் பூவைச் செருகிப் பூசை
அறையை விட்டே அசைந்து வருகையில்
முத்தையா பிள்ளை ''முருகா!'' என்றார்.

உடனே அவர்முன் ஓடோடி வந்து
''என்ன எசமான் கூப்பிட் டீர்களா?''
என்று கேட்டான் ஏவ லாளான்;
முத்தையா பிள்ளையின் முகமோ சிவந்தது!

''விடியா மூஞ்சிப் பயலே! விடிந்ததும்
பாவம் படர்ந்தஉன் முகத்தைப் பார்க்கவா
காட்டித் தொலைக்கிறாய்; கழுதையே! சனியனே!
அப்பன் முருகனை அல்லவா அழைத்தேன்!
உன்னையா அழைத்தேன், உதவாக் கரையே''
என்றார். சென்றான் ஏவ லாளன்



1963

❑

தலைவா ழைஇலை தன்னில் பரப்பிய
பலவிதக் காய்கறிப் படைய லோடு
நெல்லூர் அரிசிச் சோற்றில், நல்லூர்
நெய்யை ஊற்றிக் கையால் பிசைந்தே
உண்டெழுந் தருளி உதரம் தடவி
எண்ணிக்கை யற்ற ஏப்பம் இசைத்தே
ஓய்வு காண உல்லாச மாகச்
சாய்வு நாற் காலியில் திருமேனி சாய்க்கையில்
முத்தையா பிள்ளை ''முருகா!'' என்றார்.
உடனே அவர்முன் ஓடோடி வந்து
''என்ன எசமான் கூப்பிட் டீர்களா?''
என்று கேட்டான் ஏவ லாளன்;
முத்தையா பிள்ளையின் முகமோ எரிந்தது!

''அழுகை மூஞ்சிப் பயலே! நல்ல
நாளும் பொழுதுமாய் நாயே, என்முன்
பட்டினி படர்ந்த உன் முகத்தை ஏனடா
காட்டித் தொலைக்கிறாய்? கழுதையே! சனியனே!
அப்பன் முருகனை அல்லவா அழைத்தேன்!
உன்னையா அழைத்தேன், உதவாக் கரையே?''
என்றார். சென்றான் ஏவ லாளன்.

❑

உச்சி இரவு; ஒருமணி இருக்கும்.
''முருகா! முருகா! முருகா!'' என்று
பிள்ளைவாள் மாடியில் பெருங்குரல் எழுப்பினார்.
கொல்லையில் அந்தக் குரல் எதி ரொலிக்கவே
ஏவ லாளன் எழுந்தான்; பின்னர்

'என்னையா கூப்பிட்டார்; இருக்கா(து)' என்றவன்
உள்ளே போகாமல் உடம்பைச் சாய்த்தான்!

கொஞ்சநே ரத்தில் கோபத் தோடு
மடமட வென்றே மாடியை விட்டுப்
பிள்ளைவாள் வந்தார் கொல்லையை நோக்கி!
இனிதாய்த் தூங்கிய ஏவ லாளனைத்
தட்டி எழுப்பினார்; திட்டி எழுப்பினார்!
''ஏனடா பேயனே! இளிச்ச வாயனே!
திருட்டுப் பயல்கள் செல்வத்தை எல்லாம்
சுருட்டிக் கொண்டு போகையில் உன்னைக்
கூப்பிட் டேனே! குரல் கொடுத் தேனே!
ஓடிவந் தாயா ஓசையைக் கேட்டு?
தின்று கொழுத்துத் தினமும் தூங்கவா
தண்டச் சோறு? தடியனே!'' என்றார்.
முத்தையா பிள்ளை. ''ஐயையோ! நமது
சொத்தையா திருடர் சூறை யாடினார்?
எசமான்! தாங்கள் முருகா என்றது
காதில் விழுந்தது கணீரென! நான் எழுந்(து)
ஓடி வரத்தான் எண்ணினேன்; ஆனால்
என்னையா கூப்பிடப் போகின் றீர்கள்?
அப்பன் முருகனை அல்லவா நீங்கள்
அழைத்திருப் பீர்கள்! அழைத்திருப் பீர்கள்!
என்று பேசா திருந்தேன்'' என்றந்த
ஏழை முருகன் இயம்பினான்! சாவிக்
கொத்தை ஆவியாய்க் கொண்ட
முத்தையா பிள்ளையின் முகம்இருண் டதுவே!

1963

# கடவுள் கள்வன் ஆனார்!

கையிலே வேலொடும் கழுத்திலே பாம்பொடும்
  கனமான சடையி னோடும்
கைலாச முதலிமுன் காட்சிதந் தார்ஒருவர்;
  'கடவுள் நான்' என்று சொன்னார்!

'ஐயனே! போற்றி!என் முன்னெழுந் தருளினீர்
  அடியவன் பக்தி மெய்! மெய்!
அருந்துவீர் பால்பழம் அடுத்தெதும் வேண்டுமோ
  அறைகுவீர்' என்றார் முதலி.

'வையகம் புதுக்கிடக் கோடானு கோடிப்பேர்
  வறுமையை வதைக்க வழிகள்
வகுத்துளேன்; உன்பெட்டிச் சாவியைத் தா' என்று
  வந்தவர் கேட்ட வுடனே

தெய்வமா நீ? இல்லை! நிச்சயம் பொய்! பொய்! பொய்!
  திருடன் நீ! என்று முதலி
செவிப்பறை கிழிந்திட நரிக்குரல் எழுப்பினார்
  செந்தமிழ் ஞானப் பெண்ணே!

1963

# சாமியார் சம்சாரி ஆனார்!

மாதரைத் தழுவியே மயங்கிடும் வாழ்க்கையை
மறுத்திடும் மனித ரெல்லாம்
மாபெரிய பரலோகம் ஏகலாம் எனச்சொன்ன
மணிக்குடிச் சாமி வாக்கைக்

காதினில் வாங்கியே சிந்தையில் தாங்கியே
கார்மேகம் ஓர்இ ராவில்
கட்டிய மனைவியைக் கண்துயில விட்டொரு
காசாயம் அணிந்து கொண்டு

மாதவம் புரிந்திட மணிக்குடிச் சாமியார்
மலரடித் தொண்டு செய்ய
மாவேக மாய்ச்சென்றான்; சென்றவன் மடத்தினில்
மணிக்குடிச் சாமி ஓர்பெண்

பாதத்தை வருடியே பரலோகம் ஏகிடப்
பார்த்துளம் பதைப தைத்துப்
'பரலோகம் இழந்தேனே பாவியால்;' என்றனன்
பைந்தமிழ் ஞானப் பெண்ணே!

*1963*

# ஏகாம்பரம் இருக்கிறான்!

எதிர்மனையில் வாழ்ந்திடும் ஏகாம்ப ரம் ஓர்நாள்
　　இரவிலே வாந்தி செய்தே
இன்னலில் துடிக்கையில் இதயமே துடித்தந்த
　　ஏழையின் மனைவி ஓடிக்

கதிர் போலும் உடலுடைய கோயிற்பூ சாரியைக்
　　கூட்டியே வந்து சேர்த்தாள்
கூத்தாடிப் பூசாரி காளியைக் கும்பிட்டுக்
　　குறிகேட்டுப் பின்னர், 'நாளை

அதிகாலை இவனுயிர் அகன்றிடும்' என்றனன்;
　　அழுதனர் பலரும்; சொன்ன
அதிகாலை பூசாரி பூநாகம் தீண்டவே
　　ஆவியை இழந்த தாகப்

புதுச்செய்தி வந்ததே! ஏகாம்ப ரம்பிழைத்துப்
　　பூசாரி பாடை தூக்கிப்
புண்ணியம் பெற்றின்னும் பூமியில் இருக்கிறான்
　　பூந்தமிழ் ஞானப் பெண்ணே!

*1963*

# அறுகம்புல்

வீறுகொண் டடித்தது சூறைக் காற்றே
வேரறுந் தே மரக் கூட்டம் வீழ்ந்ததே
அறுகம்புல் மட்டும் அசையா திருந்ததே!

இது காளிந்தீசரண் பாணிக் ராகியின்
சிந்தனையைத் தழுவிய உருவகம்.
இது - அடிமறிமண்டில ஆசிரியப்பா.

# நாணயம் மடிந்த நாள்!

அடுத்தவ னிடத்தில் ஐயப் பட்டே
இருக்கும் வீட்டுக் கிரும்புக் கதவை
அமைத்தது மன்றி அறிவுக் கூர்மையால்
கனத்த பூட்டைக் கண்டு பிடித்ததும்
எந்த ஓர் நாளோ அந்த
நாள்முதல் மனிதன் நாணயம் மடிந்ததே!

*"இன்று நீர் சிந்தும் இரத்தமோர் துளியும்
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே 'இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்;
தீண்டன்மின் திருந்தலிர்! அவர்தம் செருக்கு.
சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று.
நினையுமின் நன்றாய்க் கனவினும் இதனை....'
எனமுரா சறையுமே எத்திசை யார்க்கும்"*

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

# குருதித்துளிகள்

# புல்லாய் இருப்போமோ

வண்மையும் திண்மையும் உண்மையும் உண்மையில்
வாழும் மயில் நாட்டில்
கண்ணிய மின்றிச் சீனரும் ஈனரும்
காலடி வைப்பதற்கே
எண்ணிவந் திட்டால் இடுப்பு முறிந்திடும்;
எலும்பு நொறுங்கிவிடும்! - மான
மண்ணில் பிறந்த சிறுத்தைகள் நாங்கள்! - சும்மா
மரமாய் நிற்போமோ?

வலியறி யாமல்எம் வாள்அறி யாமல்
வஞ்சக வழிவகுத்தே
எலியெனப் பிறர்நலம் எய்திட லாமென
எண்ணிடில் நிச்சயமாய்க்
கிலிபிடித் தோடுவர்! எம்பகை வர்க்குக்
கிறுக்குப் பிடித்துவிடும்! - வீரப்
புலிக்கொடி ஏந்திய ஏறுகள் நாங்கள்! - சும்மா
புல்லாய் இருப்போமோ?

*1962*

# பொதியம் நாம்! இமயம் நாம்!

சாகாத வானம்நாம்; வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவைநாம்; பெருமை வற்றிப்
போகாத நெடுங்கடல்நாம்; நிமிர்ந்து நிற்கும்
பொதியம்நாம்; இமயம்நாம்; காலத் தீயில்
வேகாத - பொசுங்காத - தத்து வம்நாம்;
வெங்கதிர் நாம்; திங்கள்நாம்; அறிவை மாய்க்கும்
ஆகாத பழமையினை அகற்றிப் பாயும்
அழியாத காவிரிநாம்; கங்கை யும்நாம்!

தோள்வீரப் புகழ்வளர்ச்சிச் சரித்தி ரத்தின்
தொடக்கம்நாம்; வஞ்சகத்தின் நெஞ்சைக் கீறும்
வாள்வீரம் வருணிக்கும் பரணிப் பாட்டின்
வடிவம்நாம்; வாகைப்பூ மாலை சூடச்
சூள்வீரம் காட்டியதென் பாண்டி மன்னன்
சொந்தம்நாம்; நேருக்கு நேராய் மோதும்
ஆள்வீரப் போர்மரபை அமைத்துக் காட்டும்
அடிப்படைநாம்; வெடிப்படைநாம்; இடிப்படைநாம்!

தென்றல்நாம்; நச்சுமர வேரைத் தள்ளித்
    தீர்த்தொழிக்கும் புயலும்நாம்! குளிர்ச்சி மிக்க
குன்றம்நாம்; கூடாத கொடுமை போக்கக்
    குமுறும்எரி மலையும்நாம்; இலட்சி யப்பொன்
மன்றம்நாம்; மாற்றாரை நடுங்க வைக்கும்
    மறவர்நாம்; தமிழ்காக்கும் அணியில் நின்றே
'சென்றோம்நாம் வென்றோம்நாம்' என்ற நீண்ட
    சீர்த்தியினைத் திசையெட்டும் நிரப்பு வோம்நாம்!

முன்னணி
15-1-62

# வாளைச் சுழற்றி வாடா!

வாளைச் சுழற்றி வாடா! - மலைத்
தோளை உயர்த்திச் சீறிக் - கூர்
வாளைச் சுழற்றி வாடா!

(வாளைச்....)

தாளை நக்கி வாலை ஆட்டத்
தமிழர் என்ன நாயா? - சீனித்
தூளைப் போன்ற சுகத்துக் காகச்
சுற்றித் திரியும் ஈயா?

(வாளைச்....)

மாற்றான் மொழிக்கு மண்டி யிடநாம்
மானங் கெட்டவர் அல்லர்! - சீச்சீ!
போற்றா ஒழுக்கம் புரியோம்; நாம்யார்?
புகழை வடிக்கும் கொல்லர்!

(வாளைச்.....)

உரிமை தமிழர்க் குயிரினும் இனிதென
உலகம் முழுதும் கூறு - இதனைத்
தெரியா தினிமேல் பகைக்கின் றார்தம்
தேகம் பற்பல கூறு!
(வாளைச்....)

இமயம் வென்ற இனம்நம் இனமே!
இதைமறந் தார் சிலர் கெட்டு - நீ இச்
சமயம் ஞாபகப் படுத்த அவர்முன்
சாவுப் பறையைத் தட்டு!
(வாளைச்....)

1964

# தீ பரவட்டும்!

நான்இந்த மண்ணுக்குச் சொந்தக் காரன்
நாடாண்ட மாவீரன்! தீரன்! இன்றோ
ஏன் இந்தக் கொடுந்தாழ்வு; எச்சில் வாழ்வு
என்றெண்ணிப் பார்க்கட்டும் ஒவ்வோர் நெஞ்சும்!
மீன்துள்ளும் பேராழி; வளநெய் வேலி
விளைவயல்கள்; கனிமரங்கள் நிறைந்தி ருந்தும்
ஏன் இந்த இடர்ப்பாடு; கண்ணீர்க் கோடு
என்றெண்ணிக் கேட்கட்டும் ஒவ்வோர் நாவும்!

விடுதலைப்போர்ப் பசிகொண்ட வெற்புத் தோள்கள்
விம்மட்டும்; துடிக்கட்டும்; மானக் கைகள்
கொடுமையினைக் களைந்தெறியும் வேலை ஏந்திக்
குருதியினை முத்தமிட வெறிகொள் ளட்டும்!
விடுபட்ட அம்புகளின் பாய்ச்சல் போல
விழியிரண்டும் வீசட்டும் சீற்றப் பார்வை;
எடு பிடிகள், கோழைகள், முக்கா டிட்டே
ஏகட்டும்; எழுச்சித்தீக் கதிர்பா யட்டும்!

கிழியட்டும் இருட்படலம்; வீறு கொண்டு
 கிளம்பட்டும் இளம்பரிதி; முள்ளின் பாதை
அழியட்டும்; மலர்ப்பாதை பாதந் தன்னை
 அணைக்கட்டும்; துயர்தூற்றும் வாடைக் காற்று
ஒழியட்டும்; ஓடட்டும் பன்னீர்த் தென்றல்
 உலவட்டும்; தவழட்டும்; செந்தேன் மாரி
பொழியட்டும்; தமிழகத்தின் சோலை எல்லாம்
 பூக்கட்டும்; மணக்கட்டும் எழில்கொஞ் சட்டும்!

'இன முழக்கம்'
*1964*

# இலட்சிய ஏடு!

பயிரிடைக் களைபோல் மணியிடைப் பதர்போல்
உயரிய இலக்கியத் துள்ளே திணித்த
இடைச்செரு கல்போல் இங்கே உளசில
கடையரும் புலையரும் கயவரும் கூடி
நாட்டை விற்கக் கையடிக் கட்டும்;
மூட்டை சுமக்க முதுகைத் தரட்டும்;
வெந்ததைத் தின்று விதிவந்து சாகட்டும்;
பந்தைப் போல்பலர் கால்மிதி படட்டும்;
உள்ளம் பெரிதாய் உள்ளவர் போலே
கள்ளக் கதைகள் கட்டுரைக் கட்டும்;
பொய்ம்மைக் கூத்துப் போடட்டும்; எனினும்
மெய்ம்மை விரைவில் வெளிப்படும்! நிலையாய்க்
கார்கா லத்தின் காளான் இருக்குமா?
நீர்மே கத்தின் மின்னல் நிற்குமா?


ஒருநாள்,
திருவிழா முடிந்த வெறுங்களம் ஆவார்!
உருவிலா தழியும் தேய்நிலா ஆவார்!
எதிரிகள் விளம்பரப் புகழ்ச்சியில் இன்புறும்

உதிரிகள் குப்பைப் பொருள்களாய்ப் போவார்!
உறுதியும் துணிவும் உள்ளத்தில் பெறாதோர்
இறுதியில் அரசியல் அனாதையாய்ச் சாவார்!

நாமோ,
குருதியில் பூத்த கொள்கை மலர்கள்;
சுருதியில் விடுதலை சொல்லும் யாழ்கள்;
கிழக்குத் திசையில் கிளம்பும் ஒளிகள்;
வழக்கிரண் டுடைய பழந்தொகைப் பாடல்கள்;
சிங்க நோக்குச் சேரலா தன்கள்;
பங்கம் போக்கும் நெடுஞ்செழி யன்கள்;
தியாக பூமியின் சின்னச் சாமிகள்;
நியாயம் தூய்மை நேர்மை வாய்மை
கடமை உரிமை கண்ணியம் எனும்பல
உடைமை திரட்டும் உயர்பெரும் செல்வர்கள்!

எனவே,
மண்ணும் மதியும் மன்னும் பரிதியும்
விண்ணும் மலையும் விரிந்த கடலும்
இருக்கும் வரைக்கும் இனிதாய்
இருக்கும்;வளரும் நம் இலட்சிய ஏடே!

திராவிடன்
*1964*



# சீனர் வாழ்க!

முகலாயப் பேரரசின் புகழை வானில்
　　முட்ட வைக்க - ஒட்டி வைக்கத் திட்ட மிட்ட
முகலாய மாமன்னர் - சீர்தி ருத்த
　　முன்னோடி - அக்பர்இக் கங்கை நாட்டார்
அகத்தினிலே ஒற்றுமையை ஏற்ப டுத்த
　　அரும்பாடு பட்டதுண்டு; பட்டும், வெட்டும்
நகவிளிம்பு அளவேனும் பயன்கா ணாமல்
　　நைந்ததுண்டு; மனம் வருந்தி மாண்ட துண்டு!

அரியாச னச்சண்டை இந்தி யாவில்
　　ஆரம்ப மானதினம் தொடங்கி, மக்கள்
நரியாக ஊளையிட்டும், வெறிபி டித்த
　　நாயாகக் குரைத்திட்டும் வாழ்ந்த தெல்லாம்
சரியாகத் தெரிந்தஒன்று; சரித்தி ரத்தில்
　　சான்றுண்டு; (அ) சோகமண்ணில் ஒற்று மைதான்
புரியாத புதிராக, இன்னும் சொன்னால்
　　பொய்யாகக் கனவாகப் போன துண்டு!

சத்துமதம் புத்தமதம் என்றும், வாழ்வுச்
சஞ்சலத்தை அறுக்குமதம் சமணம் என்றும்
முத்துமதம் வைணவமே என்றும், மண்ணில்
மூத்தமதம் சைவம்தான் என்றும், உண்மை
வித்துமதம் கிருத்துமதம் என்றும், ஈடாய்
வேறுமதம் இசுலாமுக் கில்லை என்றும்
எத்தனையோ மதப்போட்டி எழுந்த துண்டு;
எல்லாரும் பூசலிட்டுச் சிதைந்த துண்டு!

மதம்என்னும் எரிநெருப்பில் சாதி எண்ணெய்
வார்த்ததுண்டு; மடமையினால் பரந்த நாடு
முதுகுளத்தூர் ஆனதுண்டு; ஒவ்வோர் நாளும்
முன்னூறுக் கும்மேலே கோத்தி ரங்கள்
சதிராடிக் கொண்டிங்கே சிரித்த துண்டு;
சனநாய கம்என்னும் பெண்க ழுத்தில்
புதுமாலை சூடுதற்கு நூற்றுக் கும்மேல்
போட்டியிடும் மாப்பிள்ளைக் கட்சி உண்டு!

திருமூலர் மந்திரத்தைக் கேட்டும், மக்கள்
திசைமாறிப் போனதுண்டு; அறத்தின் ஒற்றைக்
கருவூலம் எனப்போற்றிப் புகழத் தக்க
காந்தியும்தான் ஒற்றுமையைச் செம்மையாக
உருவாக்க முடியாமல் ஓய்ந்த துண்டு;
உபதேசம் உமியாகப் பறந்த துண்டு;
நிருவாகம், சட்டங்கள் முயன்று பார்த்தும்
நிமிர்த்தமல் உயர்த்தாமல் வளைந்ததுண்டு!

ஆளுக்கோர் வழிசெல்வ தாலே, நாடு
அநியாய மாய்அழிந்து போகக் கூடும்;
தேளுக்குத் தன்கையை நீட்டும் சின்னஞ்
சிறுவன்போல் பெருந்தேசம் ஆகக் கூடும்;
வாளுக்கும் வேலுக்கும் வேலை தந்த
மறவரினம் பிரிவினையால் சிதறித் தீமைத்
தாளுக்குப் பணிந்திடவும் கூடும் என்று
தனிக்கவலை பண்டிதரும் கொண்ட துண்டு.

பாண்டவர்கள் பிளவின்றிப் பெற்ற அந்தப்
பாஞ்சாலி ஒற்றுமையைத் துணைக்கண் டத்தில்
ஆண்டவன்தான் உண்டாக்க வேண்டும் என்று
அவனிடத்தில் வரங்கேட்ட பக்தர் உண்டு!
ஆண்டவனுக் கனுதாபம் பிறந்தி ருக்கும்;
அடியேன்நான் நினைக்கின்றேன்! இல்லா விட்டால்
நீண்டநெடு நாட்களுக்குப் பிறகு இந்த
நிலப் பக்கம் சீனர்களை அனுப்பு வாரா?

கன்பூஸ்யஸ் நாட்டார்கள் இமயத் தின்கண்
கால்வைத்த புண்ணியத்தால் இங்கெல் லாரும்
'என்தேசம்' 'என் எல்லை' என்று பேசும்
எழுச்சியினைக் காண்கின்றோம்; கர்ணன் போலப்
பொன்பொருளை அள்ளியள்ளித் கொடுப்பதற்கும்
புத்துணர்ச்சி கொண்டுள்ளோம்; திண்ணைச் சோற்றுச்
சன்யாசி யும்கூட 'நாட்டுப் பற்றுச்
சம்சாரம்' நடத்தவரும் நிலைகாண் கின்றோம்,

நங்கூரம் இல்லாத கப்பல் போல
நாம்இருந்தோம்; ஒற்றுமையில் லாதி ருந்தோம்!
இங்கொன்றாய் அங்கொன்றாய் மினுக்கும் வானின்
இராத்தீப மாயிருந்தோம்; ஆனால் இன்றோ
சங்கிலிபோல் பிணைப்புண்டோம்; ஒன்று பட்டோம்!
சவுக்குமரத் தோப்பைப் போல் நெருக்க மானோம்!
இங்கிதற்குக் காரணமாய் இருந்த சீனர்
எல்லாரும் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

*இந்திய சீனப் போர்*
*நிகழ்ந்தபோது எழுதியது - 1962*

# புகழ் ஈட்டுங்கள்!

வரலாற்றைப் பாருங்கள்; கீர்த்தி மிக்க
வளநாட்டுக் குரியவர்கள் நீங்கள்! இன்று
தரங்கெட்டு மறங்கெட்டு மாட்சி கெட்டுத்
தாழ்ந்ததையும் எண்ணுங்கள்; பின்ன ரேனும்
அரமிருக்கும் கூர்மையினை அறிவில் தேக்கி
அனற்காற்றை மூச்சாக்கிப் பருத்த தோளில்
உரம்ஏற்றி வாருங்கள்; 'தமிழர் யாம்' என்(று)
உலகுக்குக் கூறுங்கள்; புகழ் ஈட்டுங்கள்!

இலக்கியத்தின் பூந்தோட்டம் நீங்கள்! வீரம்
இசைபாடி நடமாடும் புறநா னூற்றின்
நிலையங்கள்; நீர்ச்சுழலை எதிர்த்துத் தள்ளி
நீச்சலிடும் சுறாமீன்கள்; எருமைக் கூட்டம்
கலக்கிவிட்ட குளம்போல உங்கள் நாட்டின்
கவின்கெட்டுப் போவதுவோ? சாதி வைத்துக்
குலத்துக்கோர் நீதியுரை கூறும் நூலைக்
கொளுத்துங்கள் தீயிட்டுப், புகழ் ஈட்டுங்கள்!

பண்பாட்டின் கோயில்கள் நீங்கள்! சோழப்
பத்தினிக்குச் சிலைவைத்துப் போற்றி என்றும்
கண்போலக் காத்தீர்கள் கற்பை; அந்தக்
கற்பைஓர் கடைவீதிப் பொருளாய் மக்கள்
எண்ணச்செய் யும்கதைகள் பெருக விட்டே
இருப்பதுவோ இருட்குகையில்? தமிழ்வி ளக்கை
மண்வீட்டில் எரியவிட்ட காலம் போதும்;
மலைமேட்டில் ஏற்றுங்கள்; புகழ்ஈட்டுங்கள்!

அள்ளக்கை குறையாத செல்வத் திற்கே
அதிபதிகள், நிதி பதிகள் நீங்கள்! இன்று
பள்ளத்தில் நிற்கின்ற கேட்டை எண்ணிப்
பாருங்கள்; தடையுடைத்துப் பொங்கிப் பாயும்
வெள்ளத்தின் வேகத்தைப் போல்எ ழுந்து
வீறுகொண்டு புறப்படுங்கள்; அநீதி யாவும்
உள்ளத்தின் எழுச்சிக்கே உணவாய் ஆகும்;
ஒற்றுமைப்பண் பாடுங்கள்; புகழ் ஈட்டுங்கள்!

மன்றம்
19-2-61

# மங்கல சக்தி

கதிரவன் சுடர்தரும் நாள் அளவும்-என்
காவியக் கோயில் நிலவும்!
கடல்திரை நடமிடும் நாள் அளவும் - என்
கற்பனைத் தென்றல் உலவும்!

மதிகுளி ரொளிதரும் நாள் அளவும் - என்
மானிடப் பார்வை விளங்கும்!
மழைமுகில் பொழிந்திடும் நாள் அளவும் - என்
மங்கல சக்தி முழங்கும்!

□

'கோடையும் வசந்தமும்'
தொகுப்பின் மேல் கவிப்பொருள்
முற்றிய 'மீரா கவிதைகள்' முற்றும்.

பிற்சேர்க்கை

# மீரா - ஒரு நேர்காணல்

> ''மீரா காற்று. ஓரிடத்தில் நிற்க மாட்டார். அவரை என் வீட்டில் மூன்று மணி நேரம் அடைத்து வைத்து உரையாடினேன். அதிலிருந்து சில பகுதிகள்.''
>
> **- அப்துல் ரகுமான்**

**எப்போது கவிதை எழுதத் தொடங்கினீர்கள்? அதற்கான தூண்டுதலாக இருந்தது எது ? அல்லது யார்?**

பள்ளிக்கூட நாட்களிலிருந்தே எனக்கு திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு இருந்தது. அண்ணா, பாரதிதாசன், கண்ணதாசன், மு.வ. ஆகியோரின் எழுத்துக்கள் என்னை எழுதத் தூண்டின. கல்லூரி நாட்களில் சுரதா, தாகூர், கலீல் ஜிப்ரானில் ஈடுபாடு ஏற்பட்டது. என் முதல் கவிதை 'தீபக் குன்றம்' பாரதி பற்றியது. அது 1959இல் 'தாமரை'யில் வெளிவந்தது. அது மரபுக் கவிதை. எண்சீர் விருத்தம். பாரதிதாசன் பாதிப்பு அதில் தெரியும்.

**அறிஞர் அண்ணா உங்கள் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை அறிவேன். அவரோடு எப்படி அறிமுகம் ஆனீர்கள்?**

'திராவிட நாடு', 'திராவிடன்', 'முரசொலி', 'தென்றல்', 'இன முழக்கம்', 'மன்றம், இதழ்களில் என் கவிதைகள் வெளிவந்துகொண்டிருந்தன. எல்லாம் அரசியல்

கவிதைகள். வேழவேந்தன் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் பேசும்போது - 1964 என்று நினைக்கிறேன். - திராவிட இயக்கக் கவிஞர்கள் என்று அண்ணா சிலர் பெயர்களைப் பட்டியலிட்டார். அதில் 'மீ.இராசேந்திரன் என்று ஒருவர்' என்று கடைசியாக என் பெயரைக் குறிப்பிட்டார். 'தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்' என்ற என் வரியை இருமுறை மேற்கோள் காட்டி எழுதி இருக்கிறார். 'பொங்கல் கொண்டாட வேண்டும்' என்று கூறும் என்னுடைய மற்றொரு கவிதையையும் குறிப்பிட்டிருக்கிறார். திருச்சியில் நடந்த தி.மு.க மாநாட்டுக்குத் தொண்டர்களை அழைத்து எழுதிய கடிதத்தில்', சாவா சந்திப்போம்; வாழ்க்கை நமக்கென்ன, பூவா புறப்படுவோம்; புல்லியரைத் தூள் செய்வோம்' என்ற என் கவிதைவரியை எடுத்துக்காட்டி எழுதியிருக்கிறார். ஒரு முறை நேரில் சந்திக்க முயன்றேன். முடியாமல் போய்விட்டது.

**கலைஞரோடு எந்த அளவில் தொடர்பு?**

'முரசொலி'யில் கவிதை எழுதியிருக்கிறேன். †கலைஞர் தலைமையில் கவியரங்கத்தில் பாடியிருக்கிறேன். ஆசிரியர் போராட்டத்தின்போது அவரைப் பலமுறை சந்தித்திருக்கிறேன். எனக்கு வேறு இடத்தில்(பல்கலைக் கழகத்தில்) வேலைக்காகத் துணைவேந்தராக இருந்த மு.வ.விடம் பரிந்துரைத்திருக்கிறார். 1983இல் மதுரை எட்வர்ட் ஹாலில் பாரதி நூற்றாண்டு விழாக் கவியரங்கம். அப்போது எனக்குப் பொதுவுடைமைக் கோட்பாட்டுச் சார்பு ஏற்பட்டிருந்தது. கலைஞர் பேச வந்திருந்தார். 'நீ லெனினைப் போல் புரட்சித் தலைவனாக வேண்டும்' என்று பாடினேன். கலைஞர் பேசும்போது 'தான் போனதுமல்லாமல் என்னையும் தூக்கிக்கொண்டு போகப் பார்க்கிறார். அவர் எங்கள் வண்டலில் விளைந்த பயிர் என்பதில் பெருமைப்படுகிறேன். அவர் எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும்' என்று வாழ்த்தினார்.

---

† **'வாகை மாறன்' என்னும் பெயரில்.**

**தி.மு.க.வில் இவ்வளவு தீவிரமாக இருந்த நீங்கள் பொதுவுடைமைக் கொள்கையின் பக்கம் எப்படிப் போனீர்கள்?**

தி.மு.க உணர்வோடு இருந்தபோதே பொது வுடைமைக் கோட்பாட்டையும் நான் விரும்பினேன். 'ஜனசக்தி' படிப்பேன். பேராசிரியர் தர்மராஜன் தொடர்பால் நான் மார்க்சியத்தின் பக்கம் போகத் தொடங்கினேன். மேலும் தி.மு.க திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டது எனக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. ஆட்சிக்கு வந்த பிறகு இந்தி எதிர்ப்புப் போன்றவற்றில் ஏற்படுத்திக் கொண்ட சமரசம் இவையெல்லாம் சேர்ந்து என்னைப் பொதுவுடைமைப் பக்கம் தள்ளிவிட்டன.

**புதுக்கவிதை எழுதத் தொடங்கியது எப்போது. எதனால்?**

கல்லூரி நாட்களிலேயே தாகூர் கவிதைகளை வி.ஆர்.எம். செட்டியார் மொழிபெயர்ப்பில் படித்தபோது வசன கவிதை என்னை ஈர்த்தது. டி.எஸ்.எலியட் 'வேஸ்ட் லேண்'டும் படித்தேன். முற்றிலும் புரியவில்லை என்றாலும் அந்தப் புதுமைப் போக்குப் பிடித்திருந்தது. தாகூர் 'காதல் பரி'சின் பாதிப்பில் 1959 இல் 'காதல் கனி' என்ற வசன கவிதை எழுதினேன். இதுவே என் முதல் வசன கவிதை முயற்சி. தொடக்கத்தில் புதுக்கவிதையை வெறுத்த பொதுவுடைமையர் திரு.தி.க.சி. 'தாமரை'ப் பொறுப்பேற்று (1970) வசன கவிதையை ஆதரித்த பிறகு, அதன் பக்கம் திரும்பினர். கைலாசபதியும் புதுக்கவிதை பற்றிய தம் வெறுப்பை மாற்றிக் கொண்டிருந்தார். 'வானம்பாடி'யும் வந்தது. இந்தக் காலக் கட்டத்தில் தான் முதலில் 'கனவுகள் + கற்பனைகள்= காகிதங்கள், பிறகு 'ஊசிகள்' எழுதினேன்.

**முற்போக்குத் திறனாய்வாளர்கள் பொதுவாகவே பெண்ணைப் பற்றி, காதலைப் பற்றி எழுதினால்**

**கடுமையாக விமர்சிப்பர் 'க.க.கா' எழுதியபோது நீங்கள் இதைப் பற்றி நினைக்கவில்லையா?**

நினைத்தேன். ஆனால் இடையிடையே, 'நிலத்தை மீட்கப் போனேன்,' 'நான் ஏங்கல்ஸின் மாணவன்', 'புரட்சியில் மலர்ந்த சோவியத் பூமியின் கூட்டுப் பண்ணைகளைப் படங்களில் பார்த்து மலைக்கும், ஓர் இந்திய உழவனைப் போல்....' என்ற வரிகளை இணைத்திருந்தேன். அதனால் முற்போக்கு வட்டத்தில் வரவேற்பே இருந்தது. தி.க.சி. பாராட்டிக் கடிதம் எழுதினார். 'தேசம் தழுவும் பொதுவுடைமைக்கு, வரவேற்புரை எழுதும்போதும், தேகம் தழுவும் உனக்கு - என் தனியுடைமைக்கு, வாழ்த்துரை எழுதும் போதும்' என்ற வரியை மட்டும் 'இளவேனில்' கடுமையாக விமர்சனம் செய்து எழுதினார். பொதுவாகப் பொதுவுடைமைச் சார்புப் பத்திரிகைகள் பாராட்டி எழுதின.

**நீங்கள் சிவப்பு வட்டத்துக்குள் இருக்கும் கவிஞர் என்பதால்தான் இந்தப் பாராட்டு. இந்த வட்டத்துக்கு வெளியே இருப்பவன் 'க.க.கா' போல ஒரு நூலை எழுதியிருந்தால் கிழித்திருப்பார்கள். சோவியத்தை நீங்கள் ஆழமாக நேசித்தீர்கள். அது சிதறி உடைந்துபோன போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது.?**

என் கனவுலகம் உடைந்ததுபோல் இருந்தது. தி.மு.க திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்ட போது ஏற்பட்டதுபோல் மனத்தில் கலவரம் ஏற்பட்டது.

**'க.க.கா'படிக்கும் போது அது வெறும் கற்பனையாகத் தெரியவில்லை. சுய அனுபவத்தின் கனல் தெரிகிறது. சரிதானா?**

சரிதான். கல்லூரி மாணவனாக இருந்தபோது எனக்கு நேர்ந்த அனுபவத்தில் மலர்ந்ததுதான் 'க.க.கா.'

இருந்தாலும் அதை வெறும் மானுடக் காதலாகச் சொல்லாமல் ஓர் ஆன்மீகப் பரிமாணமும் தந்திருக்கிறேன். பெண்ணை வெறும் பெண்ணாக அல்லாமல் ஓர் இலட்சிய சமூக அமைப்பின் - பரிபூரணத்தின் குறியீடாகவே கையாண்டிருக்கிறேன்.

**பதிப்பாளர் மீராவால் படைப்பாளர் மீராவுக்குப் பாதிப்பு உண்டானது பற்றி நினைத்து வருந்தியதுண்டா?**

நான் பணியாற்றிய சிவகங்கை மன்னர் கல்லூரியில் பிரச்சினைகள் உண்டாகிப் போராட்டம் வெடித்தபோது இருமுறை நான் வேலையிலிருந்து நீக்கப்பட்டேன். இதனால் நிரந்தரமாக வேலை போய்விட்டால் என்ன செய்வது என்ற பயம் வந்துவிட்டது. அதனால் நான் விரும்பிய பதிப்புத் துறையைத் தேர்ந்தெடுத்தேன். அதற்கு நீங்களும் காரணம். 'அபி'யின் கவிதைகளை வெளியிட விரும்பி நாம் சில பதிப்பாளர்களை அணுகியபோது, 'கவிதையா? விற்காதே' என்று அவர்கள் புறக்கணித்ததைக் கண்டு கொதித்துப் போய் 'நாமே பதிப்பித்தால் என்ன?' என்று நீங்கள் கூறினீர்கள். பதிப்பகத்திற்கு 'அன்னம்' என்ற பெயரும் நீங்கள்தான் சூட்டினீர்கள். நீங்களும், நானும் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு 'அன்னம்' தொடங்கினோம். விளையாட்டாய்த் தொடங்கியது வினையாகிவிட்டது. நான் அதிலேயே மூழ்கிப் போனேன். அதனால் எழுத முடியாமல் போய்விட்டது. அதனால் எனக்கு வருத்தம் தான். 'அன்னம்' பொருளாதார வகையில் தோல்விதான் என்றாலும் தரமான புத்தகங்களை அழகாக வெளியிட்டவர்கள் என்ற பாராட்டைப் பெற்றிருப்பது ஆறுதலாக இருக்கிறது.

**'அன்னத்'தின் சாதனையாக எதைக் கருதுகிறீர்கள்?**

இரண்டு. ஒன்று, புதுக்கவிதைக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. 'வானம்பாடி' பத்திரிகையாக இருந்து புதுக்கவிதைக்குப் பரவலான கவனத்தைப் பெற்றுத்

தந்தது. 'அன்னம்', பதிப்பகமாக இருந்து அதே பணியைச் செய்தது. 'கவிதை என்றால் விற்காது' என்ற கருத்தை உடைத்தது. இரண்டு, கரிசல் இலக்கியத்தைப் பிரபலப்படுத்தியது. கி.ரா. மட்டுமல்லாமல் இன்னும் 5,6 பேர்களுடைய நூல்களை 'அன்னம்' வெளியிட்டது.

**'அன்னம் விடு தூது' ஒரு நல்ல பத்திரிகையாக வந்து கொண்டிருந்ததே. ஏன் நிறுத்தினீர்கள்?**

சிற்றிதழாக இல்லாமல் 'மிடில் மேகஸை'னாகக் கொண்டுவர வேண்டுமென்று நினைத்தேன். ஏஜெண்டுகள் பணம் தராமல் ஏமாற்றிவிட்டார்கள். விளம்பரங்களும் பெற முடியவில்லை. அதனால் கையைக் கடிக்க ஆரம்பித்தது. தாங்க முடியாது என்ற நிலை வந்தபோது வேறு வழியின்றி நிறுத்திவிட்டேன்.

**கவிஞர், உரையாளர், கல்லூரி ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், ஆசிரியர் போராட்டத் தளபதி, பதிப்பாளர், அச்சக உரிமையாளர் என்று பல பணிகளில் முத்திரை பதித்திருக்கிறீர்கள். இன்னும் நிறைவேறாத ஆசை ஏதேனும் உண்டா? ஏதேனும் வருங்காலத் திட்டம்?**

நிரந்தரமாக நிற்கும்படி ஒரு நல்ல இலக்கியம் படைக்கவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. வசன கவிதையில் நாடகமாகவோ, காவியமாகவோ ஒரு நூல் எழுதும் எண்ணம்இருக்கிறது. அதிகமாகப் படைக்காமல் போனதை இதன் மூலம் ஈடு செய்ய விரும்புகிறேன்.

'கவிக்கோ' முதல் இதழ்
அக்டோபர் 1999

# நன்றியுரை

கவிக்கோ விருது வழங்கும் விழாவில் (30.6.2002) வெளியிடப்படும் இத்தொகுப்புக்கு தன்னேரில்லாத அணிந்துரை வழங்கிய அறிஞர் ***தமிழண்ணல்*** -

முதற்பதிப்புக்கு மதிப்புரை எழுதிய என் 'அண்ணாச்சி' முனைவர் ***நா. இலக்குமணப் பெருமாள்*** -

முதற்பதிப்புக்கு மாணவத் தமிழில் தொகுப்புரை எழுதிய முனைவர் ***ம.பெ.சீனிவாசன்*** -

முதற்பதிப்பு வெளிவர உறுபொருள் கொடுத்து உதவிய என் கேரள நண்பர் பேராசிரியர் ***டி.எம். பிரேமச் சந்திரன்*** -

என் பேராசிரியர் ஔவை சு.துரைசாமி தலைமையில் திருப்பரங்குன்றத்தில் நடந்த திருமணத்தில் முன்நின்று வாழ்த்திய பேராசிரியரின் தலைமகன் - கல்லூரி நாட்களில் கவிதா தேவியின் பூரண அழகுகளைக் கண்டு களிக்க என் கண்களைத் திறந்துவிட்ட திருமகன் - வீட்டில் தாரா, பாட்டில் மீரா என்று மேடையில் வேடிக்கையாகப் பேசிய சென்னையில் ஒரு கூட்டத்தில் எனக்குக் காரல் கயாம் என்று பட்டம் சூட்டிய பெருமகன் டாக்டர் ***ஔவை துரை நடராசன்*** -

என் கனவுகள் கவிதைத் தொகுப்பை வரலாற்றுப் பேரறிஞர் டாக்டர் என்.சுப்பிரமணியன் அவர்கள் மெச்சும்படி Faneies + Fantasies = Scraps என்னும் பெயரில் அழகொழுக மொழி பெயர்த்து வெளியிட்டுள்ள கோவை வானொலி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் தம்பி ***கி.ஸ்டாலின்***-

முதற்பதிப்பு அட்டைப் படத்திற்கு 'வீண்செலவு வேண்டாம்' என்று சேகர் பதிப்பகத்திலிருந்து 'பிளாக்' எடுத்துக் கொடுத்த கவிஞர் *சுரதா*-

எனக்கு எப்போதும் துணை நின்று உதவிய பேராசிரியர் ***ஆர். துரைசாமி***-

தொலைவில் இருந்தாலும் எப்போதும் என் நலம் நாடும் நல்ல நண்பர் 'பிரண்ட் லைன்' *திரு.* ***எஸ். விசுவநாதன்***-

தினமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெற்ற பிள்ளையைப் போல் எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதோடு ஞாயிறுதோறும் என்னைச் சந்தித்து உரையாடி ஆறுதல் அளிக்க இரண்டு மணிநேரம் செலவு செய்யும் என் இளம் தம்பி - *திரு.சந்திரகுமார்*-

இந்த நிமிடம் வரை ஒரு குழந்தையைப்போல் என்னைக் காப்பாற்றி வரும் என் அருமைத் துணைவியார் *இரா. சுசீலா*-

இவர்கள் எல்லார்க்கும் இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மீரா*

கவிஞர் மீரா, ஒரு குறிஞ்சி மலர்;
அவர் தரும் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒரு குறிஞ்சி மலர்!

மீராவின் மரபுவழிப் பாடல்கள் இவை. இவற்றில் சந்தம் தழுவியவை சில. எண்சீர் விருத்தத்தில் அன்றே இவர் பல வடிவமைப்புச் சோதனைகள் செய்து பார்த்துள்ளார். சங்க இலக்கிய மணம் உண்டு, பாரதியின் தாக்கமுண்டு, பாரதிதாசனின் பரம்பரை முத்திரையும் உண்டு. அம் மரபு வளர்ச்சியில் அவற்றை விஞ்ச முயலும் தனித்திறன்களும் பலவுண்டு, மீராவின் பாடல்களில்!

- *அறிஞர் தமிழண்ணல்*

